REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2022 டிசம்பர் 30 வெள்ளிக்கிழமை
தினகரன்
THINAKARAN
தினகரன்
1932 - 2022
வரு. 90 இல. 309 | Friday 30, December, 2022 | 20 பக்கங்கள் | 50/-

## 2023 ஆம் ஆண்டு உங்களுக்கு எப்படி?



2023 ஆம் ஆண்டில் உங்கள் ராசிக்கு எவ்வாறான பலன்கள் ஏற்படப் போகின்றன என்பதை கணித்துக் கூறுகிறார் தமிழ் நாட்டின் பிரபல ஜோதிட 06

---

சில ஊடகங்களில் பொய்யான செய்திகள்

## உயிர்காப்பு மருந்துகளுக்கு எவ்வித தட்டுப்பாடும் இல்லை

### சுகாதார அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு



நாட்டில் உயிர் காப்பு மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு கிடையாது என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

நாட்டில் 14 வகையான உயிர் காப்பு மருந்து வகைகளும் கையிருப்பில் உள்ளதாகவும் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெரும்பான்மையான 06

---

## மாவையின் தலைமையை வரவேற்கும் விக்னேஸ்வரன்

### தமிழரசுக் கட்சியில் சில சுயநலவாதிகள் உள்ளதாகவும் குற்றச்சாட்டு



தற்போதைய நிலையில் மாவை சேனாதிராஜாவைத் தலைவராகக் கொண்டு தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரணியில் செயற்பட வேண்டும் என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியில் உள்ள சுயநலவாதிகளே 06

---

## 30,000 அரசாங்க ஊழியர்கள் நாளை ஓய்வு பெறுகின்றனர்

### வெற்றிடங்களை நிவர்த்திக்க அரசு நடவடிக்கை



லோரன்ஸ் செல்வநாயகம்

நாடு முழுவதும் அரசாங்க ஊழியர் சுமார் 30,000 க்கும் மேற்பட்டோர் நாளை ஓய்வு பெற்று செல்வதாகவும் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு அரசாங்கம் உரிய வேலைத் திட்டத்தை முன்னெடுத்துள்ளதாகவும் பொது நிர்வாக, 06

---

## மின்சார சபைக்கு நவம்பரில் 35.6 பில். ரூபா வருமானம்

### அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவிப்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

இலங்கை மின்சார சபை, நவம்பர் மாதத்தில் 35.6 பில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டியுள்ளதாக எரிசக்தி, மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஒக்டோபர் மாதத்திலும் 33.6 பில்லியன் ரூபாவையும் வருமானமாக 06

---

# அக்கரைப்பற்று நீதிமன்றத்தின் ஆவண காப்பகத்துக்கு தீ வைப்பு

## கைதான மூவரையும் ஜன.04 ஆம் திகதி வரை தடுத்து வைத்து விசாரிக்க நீதிமன்றம் உத்தரவு



கைதான மூவருக்கும் அதே நீதிமன்றில் வழக்குகள் நிலுவையில்...

ஒலுவில் விசேட நிருபர் எம்.எஸ்.எம்.ஹனீபா

அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்ற கட்டடத் தொகுதியை தீயிட்டு எரித்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூன்று பேரையும் எதிர்வரும் ஜனவரி மாதம் 04ஆம் திகதி வரை தடுத்து வைத்து விசாரணை செய்யுமாறு, அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றபதில் நீதவான் கே. சமீம் நேற்று வியாழக்கிழமை (29) உத்தரவிட்டார்.

கடந்த 21 ஆம் திகதி அதிகாலை நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு தீ வைக்கப்பட்டிருந்தது, தீயினால் நீதிமன்றத்தின் வழக்கு பதிவேட்டு அறை மற்றும் திறந்த நீதிமன்றம் போன்ற பல பிரிவுகளிலுள்ள ஆவண கோப்புகள் முற்றாக எரிந்து நாசமாகின. இது தொடர்பாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் போது நீதிமன்றத்துக்கு அருகிலுள்ள வீடுகளில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு சீசீரிவி கமெரா பதிவுகளில் 03 நபர்கள் முகத்தை மூடிய வாறு நீதிமன்ற வளாகத்துக்குள் நுழைந்து கட்டடத்துக்கு தீ வைத்து விட்டு 06

---

## மத்தளவிலிருந்து மீண்டும் சர்வதேச விமான சேவைகள்



### நேற்று ஆரம்பம்; ரெட்விங்ஸ் 398 பயணிகளுடன் தரையிறங்கியது

லோரன்ஸ் செல்வநாயகம்

ரஷ்யாவின் ரெட் விங்ஸ் விமான சேவை நேற்று முதல் இலங்கைக்கும் ரஷ்யாவுக்குமிடையிலான விமானசேவைகளை ஆரம்பித்துள்ளது.

நேற்றைய தினம் 398 சுற்றுலாப் பயணிகளுடன் முதலாவது விமானம் மத்தள சர்வதேச 06

---



## 2.7 பில். ரூபா பெறுமதியான மருத்துவ உதவிகள் நன்கொடை

அமெரிக்காவிடமிருந்து மற்றுமொரு தொகை வந்தது 03

---

## மாகாணங்களின் அதிகாரங்கள் அனைத்தும் மீண்டும் அவசியம்

### யாவும் மீள கையளிக்கப்பட அமைச்சர் டக்ளஸ் வலியுறுத்து



ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் மூலம் இல்லாமலாக்கப்பட்ட மாகாணங்களுக்கான அதிகாரங்கள் அனைத்தும் மீளவும் மாகாண சபைகளிடம் கையளிக்கப்பட வேண்டும் என்ற விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில், தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பது தொடர்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 06

---

## IMFஇன் முதல் கட்ட நிதியுதவி அடுத்த வருட முற்பகுதியில் நிச்சயம்

### கிடைக்கும் என்கிறார் நிதி இராஜாங்க அமைச்சர் சேமசிங்க



லோரன்ஸ் செல்வநாயகம்


கடன் மறுசீரமைப்பு தொடர்பில் முக்கியமான நாடுகளுடன் சாத்தியமான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளதால் சர்வதேச நாணய நிதியத்தின் கடனில் முதல் கட்டத்தை அடுத்த வருட முற்பகுதியில் பெற்றுக்கொள்ள முடியுமென நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் 06

---

## சுமார் ரூ.04 கோடி பெறுமதியான 116 இரத்தினக் கற்கள் திருட்டு

### பஸ் நடத்துனர் உட்பட 02 பேர் கைது



சுமார் 04 கோடி ரூபா பெறுமதியான 116 இரத்தினக் கற்கள் திருடப்பட்ட சம்பவமொன்று களுத்துறையில் பதிவாகியுள்ளது.

தெஹிவளை பிரதேசத்தில் மாணிக்கக் கல் வர்த்தகரொருவர் கொழும்பிலிருந்து தெய்யந்தர நோக்கி பஸ்ஸில் பயணித்துக் கொண்டிருந்த போது அவரது பயணப் பையிலிருந்த பல பொதிகள் திருடப்பட்டுள்ளன. பொதியில் 116 இரத்தினக் கற்கள் இருந்ததை அறியாமல் சந்தேக நபர் பஸ்ஸுக்குள்ளேயே திருடப்பட்ட பொதியை வைத்து விட்டு பேருவளை பகுதியில் இறங்கியுள்ளார்.

அதன்படி பஸ் நடத்துனர் 06

---

9 மி.மீ ரக 10 துப்பாக்கி ரவைகளுடன்

## அமெரிக்க பிரஜை ஒருவர் விமான நிலையத்தில் கைது

### பொலிஸார் தீவிர விசாரணை முன்னெடுப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



இந்தியா செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த அமெரிக்க பயணி ஒருவர் நேற்று முன்தினம்(28) இரவு விமானப்படை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரிடமிருந்து 9 மில்லிமீற்றர் ரக 10 துப்பாக்கி தோட்டாக்கள் 06

---

எமது உரிமையான தேசியப்பட்டியல் எம்.பி விடயத்தில்

## த.மு.கூ அசமந்த போக்கில் செயற்படுவதை ஏற்கமுடியாது

### வேலுகுமார் MP கடுந்தொனியில் தெரிவிப்பு




"தேசியப் பட்டியல் ஆசனம்" என்ற தமக்கான அரசியல் உரிமையை வென்றெடுப்பதில் தமிழ் முற்போக்கு கூட்டணி அசமந்த போக்குடன் செயற்பட்டு வருவதை அனுமதிக்க முடியாது. எனவே, மலையக மக்களுக்கு வழங்கப்பட்ட உறுதிமொழி நிறைவேற்றப்பட வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் கூட்டணிக்கு இது பெரும் பின்னடைவாக அமையும்" 06

---

## இன்றும் நாளையும் நாட்டில் டெங்கு கட்டுப்பாட்டு தினங்கள்

### சுகாதார சேவைகள் அமைச்சு பிரகடனம்

லோரன்ஸ் செல்வநாயகம்




நாட்டில் மீண்டும் டெங்கு பரவல் அதிகரித்துள்ளதால் இன்று 30ஆம் திகதி, நாளை 31ஆம் திகதி ஆகிய இரண்டு தினங்களையும் விசேட டெங்கு ஒழிப்பு தினங்களாக சுகாதார அமைச்சு பிரகடனப்படுத்தியுள்ளது.

கடந்த 04 வாரங்களாக நாட்டின் பல்வேறு 06

---

திருச்சியில் கைதான

## 09 இலங்கையர்கள் குறித்து CIDயினர் விசாரணை!




தமிழகத்தின் திருச்சிராப்பள்ளியில் உள்ள இலங்கை தமிழ் அகதிகளுக்கான சிறப்பு முகாமில் இருந்து கைது செய்யப்பட்ட ஒன்பது இலங்கையர்கள் குறித்து இலங்கையின் குற்றப் புலனாய்வுத் துறையினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. 06

---

யாழ். கோட்டைக்கு

## சீன தூதரக அதிகாரிகள் குழுவினர் விஜயம்



யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாண கோட்டைக்கு இலங்கைக்கான சீன தூதரகத்தின் பிரதிநிதிகள் குழுவினர் விஜயம் செய்து பார்வையிட்டனர்.

நேற்று முன்தினம்(புதன்கிழமை) மாலை 4 மணியளவில் இலங்கைக்கான சீனாவின் 06

---

## 5,000 போதை மாத்திரைகளுடன் யாழில் இளைஞர் ஒருவர் கைது

### CIDயினருக்கு கிடைத்த தகவலால் சுற்றிவளைப்பு



யாழ்ப்பாணம் குறூப் நிருபர்

யாழ். நகரில் 05 ஆயிரம் போதை மாத்திரைகளுடன் 19 வயது இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார். யாழ். ஆறுகால் மண்டபப்பகுதியை சேர்ந்த இளைஞரே இவ்வாறு யாழ். பொலிஸாரால் 06

---



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரி:

## ஸஹ்ரானுடன் தொடர்பிலிருந்த இருவர் தமிழகத்தில் கைது

ஒருவர் ஐ.எஸ் உறுப்பினர் என இனங்காணல் 03

---

## 5 நாட்டு பயணிகளுக்கு இந்தியாவில் PCR

### அடுத்த வாரம் முதல் கட்டாயமாகிறது



சீனா, ஜப்பான், தென்கொரியா, ஹொங்கொங், தாய்லாந்து மற்றும் சிங்கப்பூரில் மீண்டும் கொரோனா பரவல் 06

---

தினேஷ் ஷாப்டர் கொலை விசாரணை

## 90 சந்தேக நபர்களிடம் இதுவரை வாக்குமூலம் பதிவு

### 11 தினங்களாகியும் எவரும் கைதாகவில்லை



தொழிலதிபர் தினேஷ் ஷாப்டரின் மரணம் தொடர்பில் இதுவரையில் 90 பேரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் 06

---

## 100 நாடுகளின் கொடிகள் அடையாளம்

### உலக சாதனை நிகழ்த்திய இலங்கை சிறுவன் அனீக் அஹமட்டுக்கு குவியும் வாழ்த்துக்கள்



அம்பாறை நிந்தவூரைச் சேர்ந்த அப்துல்லாஹ் பர்வின், நப்றாஸ் முஹம்மட் ஆகியோரின் மகனான நப்ராஷ் அனீக் அகமட் என்ற 4 வயதை உடைய சிறுவன் இலங்கையில் புதிய உலக சாதனை 06

---

90 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# போதை ஊசியை உடலில் செலுத்திய இளைஞன் உயிரிழப்பு

## போதை ஊசிகளால் யாழில் இதுவரை 15 பேர் பலி

பருத்தித்துறை விசேட நிருபர்

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அளவுக்கதிகமாக போதைப்பொருளை ஊசி மூலம் உட்செலுத்திக்கொண்ட இளைஞனொருவன் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த இளைஞனுடன் போதைப் பொருளை உட்செலுத்திக்கொண்ட மூன்று பேரை பொலிஸார் தேடி வருகின்றனர். இந்நிலையில் அவர்கள் தலைமறைவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வசித்து வந்த இளைஞனொருவன் திடீர் சுகவீனமுற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். எனினும் சிகிச்சை பலனின்றி இளைஞன் உயிரிழந்துள்ளார்.

அதனையடுத்து, மேற்கொள்ளப்பட்ட உடற்கூற்று பரிசோதனையில், இளைஞன் அளவுக்கதிகமாக போதைப்பொருளை ஊசி மூலம் உடலினுள் உட்செலுத்திக் கொண்டமையினால் உயிரிழந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அதனைத்தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில், இளைஞனும், அவரது நண்பர்கள் மூவருமாக போதைப் பொருளினைஊசிமூலம்உடம்பினுள்உட்செலுத்திக்கொண்டுள்ளனர்.

நண்பர்கள் மூவரும், போதைப்பொருளை உட்செலுத்திய பின்னர் எஞ்சிய போதைப் பொருள்முழுவதுமாகஉயிரிழந்த இளைஞன் உட்செலுத்தியுள்ளார்.

அவ்வாறு அளவுக்கு அதிகமாக போதைப்பொருளை உட்செலுத்திக்கொண்டமையால் , மயக்கமுற்று விழுந்த இளைஞனின் போதை தெளியும் என காத்திருந்துள்ளனர்.எனினும் சுமார் 2 மணி நேரமாகியும் இளைஞன் அசைவற்று காணப்பட்டமையால், இளைஞனை மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

அங்கு சிகிச்சை பலனின்றி இளைஞன் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் போதைப் பொருளை ஊசி மூலமாக உட்செலுத்தியதில் இதுவரை 15 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர் எனவும், உயிரிழந்தவர்கள் 30 வயதுக்கு குறைந்தவர்கள் எனவும் வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

தினகரன் வடக்கின் உதயம் Vadakkin Uthayam

# படகில் இயந்திர கோளாறு; வல்வெட்டித்துறையில் கரையொதுங்கிய தமிழக மீனவர்கள்



யாழ். விசேட நிருபர்

தமிழக மீனவர்கள் படகின் இயந்திர கோளாறு காரணமாக நேற்றைய தினம் வியாழக்கிழமை வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி பகுதியிலுள்ள கடற்கரையில் கரையொதுங்கியுள்ளனர்.

மயிலாடுதுறை மாவட்டம் பெருமாள் பேட்டையைச் சேர்ந்த 4 மீனவர்களே இவ்வாறு பைபர் படகில் கரையொதுங்கியுள்ளனர்.

கரையொதுங்கிய மீனவர்களிடம் வல்வெட்டித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் புதன்கிழமை நள்ளிரவு மீன்பிடிக்க வலைகளை விரித்து இருந்த வேளை தமது வலைகளை இலங்கை மீனவர்கள் சிலர் அறுத்து எடுத்துச் சென்றனர். அவர்களை துரத்தி வந்த வேளையிலேயே தமது படகில் இயந்திர கோளாறு ஏற்பட்டு பழுதடைந்தமையால் தாம் வல்வெட்டித்துறை பகுதியில் கரையொதுங்கியதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் 4 மீனவர்களையும் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

# சீன மக்கள் அன்பளிப்பாக வழங்கிய உலர் உணவுப் பொதிகள் யாழில் பகிர்ந்தளிப்பு



யாழ்.விசேட, பருத்தித்துறை விசேட நிருபர்கள்

சீன மக்களினால் இலங்கை மக்களுக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட உலர் உணவுப்பொதிகள் நேற்றுமுன்தினம் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் வைத்து மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் இலங்கைக்கான சீனாவின் பிரதித் தூதர் ஹுவெய் கலந்துகொண்டு உலர் உணவுப்பொதிகளை வழங்கினார்.

யாழ்.மாவட்டத்தில் 1320 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அதில் முதற்கட்டமாக நேற்றைய தினம் யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட 100 பயனாளிகளுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட செயலாளர் க.மகேசன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.எம்.சமன் பந்துலசேன, சீனத் தூதரக அரசியல் விவகார அதிகாரி, யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.மாவட்ட தலைவர் கே.பாலகிருஷ்ணன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





மொறட்டுவ பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவன் அமரர் ஆகால் நினைவாக வடமாகாண மேசைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் 2022ஆம் ஆண்டு டிசம்பர் 23ஆம்,24ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரியில் நடாத்தப்பட்ட மேசைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் 19 வயதுக்குட்பட்டோருக்கான ஆண்களுக்கான ஒற்றையல் ஆட்டத்தில் கொழும்பு புனித பீற்றர் கல்லூரி மேசைப்பந்தாட்ட அணியின் தலைவர் ஈ.ஆர்.எஸ். வோகன் வெண்கலப்பதக்கம் வென்றதுடன் ஆண்களுக்கான திறந்த ஒற்றையர் பிரிவில் காலிறுதிக்கு முன்னேறியிருந்தார். இவர் இவ்வாண்டுக்கான மேல் மாகாண மேசைப்பந்தாட்ட தரப்படுத்தல் போட்டியில் 19 வயதுக்குட்பட்டோருக்கான ஆண்களுக்கான ஒற்றையர் ஆட்டத்தில் காலிறுதிக்கு முன்னேறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தொற்று நோய் அபாயத்தை கட்டுப்படுத்த விசேட வேலைத்திட்டம்

(மன்னார் குறூப் நிருபர் )

மன்னார்மாவட்டத்தில் தொற்று நோய் அபாயத்தை கட்டுப்படுத்தும் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் விசேட கலந்துரையாடலொன்று நேற்றுமுன்தினம் புதன்கிழமை (28) மாலை மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள்பணிமனையில் இடம்பெற்றது.

சுகாதார அமைச்சின் பொது சுகாதார சேவைகள் மேலதிக பணிப்பாளர் வைத்தியர் லஷ்மி சோமதுங்க தலைமையில் உயர் மட்ட குழுவில் பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் பணிப்பாளர் வைத்தியர் ரசாஞ்சலி கெட்டியாராட்சி, சுகாதார அமைச்சின் முன்னாள் காசநோய் தடுப்பு நிகழ்ச்சித்திட்ட பணிப்பாளர், நிகழ்ச்சி திட்ட செயலாளர் மற்றும் மேற்பார்வை உத்தியோகத்தர் காந்தி ஆரியரத்ன,மன்னார்பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி. விநோதன் உட்பட மன்னார் மாவட்ட தொற்று நோய்த் தடுப்பு பிரிவு வைத்தியர்கள் மற்றும் தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைக்கு இணைந்து பணியாற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் தலைவர் மற்றும் நிறுவனங்களில் மாவட்ட இணைப்பாளர்கள் இதில் கலந்து கொண்டிருந்தனர்.



அகில இலங்கை சமாதான நீதவானாக அளவெட்டிமேற்கு, அளவெட்டியைச் சேர்ந்த ரட்ணம் சிவநாயகம் மல்லாகம் மாவட்ட நீதிபதி பெருமான் சிவகுமார் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டுள்ளார். தெல்லிப்பழை (வலி.வடக்கு) மத்திய ஸ்த்த சபையில் 10வருடங்களுக்கு மேலாக கடமைபுரிந்தமைக்காக நீதியமைச்சினால் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# செட்டிக்குளத்தில் புதையல் தோண்டிய இளைஞன் கைது

வவுனியா விசேட நிருபர்

வவுனியா, செட்டிக்குளம் பகுதியில் புதையல் தோண்ட பயன்படும் ஸ்கனார் இயந்திரத்துடன் இளைஞனொருவன் கைது செய்யப்பட்டுள்ளதாக செட்டிக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் மாலை (28) இடம்பெற்றுள்ளது. வவுனியா, செட்டிக்குளம் பகுதியில் விசேட சோதனை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப் படையினர் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய இளைஞனொருவரை சோதனை செய்த போது அவரிடமிருந்து புதையல் தோண்ட பயன்படும் ஸ்கானர் இயந்திரமொன்று கண்டு பிடிக்கப்பட்டது.

மலைச்சாரல்

# இரத்தினபுரி மாவட்ட பாடசாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதில் தாமதம்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கட்டட மற்றும் ஏனைய நிர்மாணப் பணிகள் பழுது பார்த்தல் பணிகளை உரிய காலப்பகுதிக்குள் முடிக்கப்படாமையினால் புதிய கல்வியாண்டில் தமது பணிகளை முறையாக முன்னெடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக பாடசாலை நிர்வாகங்கள் உயர் அதிகாரிகளிடம் புகார் செய்துள்ளனர்.

சப்ரகமுவ மாகாண சபையாலும் மத்திய அரசாங்கத்தினாலும் அபிவிருத்தி மற்றும் பழுது பார்த்தல் பணிகள் மாகாண பாடசாலைகளில் கடந்த காலங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எனினும் இப்பணிகள் வருட இறுதிக்குள் உரிய ஒப்பந்தக்காரர்களினால் நிறைவு செய்யப்படாமையால் அரச அலுவலகங்களில் குறிப்பாக பாடசாலைகளில் வகுப்பறைகளை ஒழுங்குபடுத்திக் கல்வி நடவடிக்கைகளை புதிய வருடத்தில் ஆரம்பிக்க முடியாத நிலைமைக்குத்தள்ளப்பட்டுள்ளன.

ஒப்பந்தக்காரர்கள் அதிக இலாபமீட்டும் நோக்கில் அதிக வேலைகளை பொறுப்பேற்றுள்ளமையால் பொறுப்பேற்ற பணிகளை உரிய காலப்பகுதிக்குள் முடிக்க முடியாத நிலைமைக்குத்தள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலைமையினால் ஒப்பந்தக்காரர்களால் பாடசாலைகளின் நிர்மாணப்பணிகளை உரிய காலப்பகுதிக்குள் முடிக்க முடியாதுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.எனவே இவ்வாறு பாதிக்கப்பட்ட பாடசாலைகளின் எஞ்சியுள்ள பணிகளை அவசரமாக முடித்து மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்க உதவுமாறு பாதிக்கப்பட்ட பாடசாலைகள் சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.



அநுராதபுரத்தில் நடைபெற்ற அகில இலங்கை கர்நாடக சங்கீத குழு இசை போட்டியில். மடுல்சீமை பது/ பட்டாவத்த தமிழ் மகா வித்தியாலய மாணவர்கள் முதலாமிடத்தையும் நாட்டார் பாடல் போட்டியில் இரண்டாமிடத்தை பெற்றுள்ளது. (படம்: லுணுகல நிருபர்)

# 11 வயது சிறுமி பாலியல் துஷ்பிரயோகம் சந்தேகத்தில் நால்வர் கைது

மொனராகலை, தொம்பஹாவெல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட லியன்கொல்ல பிரதேசத்தில் 11 வயதான சிறுமியொருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் விஹாரையின் கடமையாற்றும் பிக்குவும் அவரின் சகோதரனும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிறுமியை துஷ்பிரயோகத்துக்குட்படுத்துவதற்கு உடந்தையாக இருந்த சிறுமியின் பாட்டி மற்றும் அத்தை ஆகிய இருவரும் புதன்கிழமை (28) கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிறுமி, கந்தானை பிரதேசத்திலுள்ள உறவினர் வீட்டிலிருந்து பாடசாலைக்குச் செல்வதாகவும் பாடசாலை விடுமுறைக்கு லியன்கொல்ல பிரதேசத்திலுள்ள உறவினர்களின் வீட்டுக்கு நவம்பர் மாதம் வந்திருந்த போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சிறுமியை பாட்டி விகாரைக்கு அழைத்துச் சென்றுள்ளார். அந்த விகாரையில் வைத்து பிக்குவும், சிறுமியின் அத்தையின் வீட்டில் வைத்து பிக்குவின் சகோதரனும் சிறுமியை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளதாக விசாரணைகளிலிருந்து கண்டறியப்பட்டுள்ளது.கந்தானைக்கு சிறுமி திரும்பியதன் பின்னர், தனக்கு நேர்ந்ததை உறவினர்களிடம் தெரிவிக்க, இதுதொடர்பில் கந்தானை பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கமைய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது கந்தானை பொலிஸாரின் அறிவுறுத்தலுக்கு இணங்க தொம்பஹாவெல பொலிஸார் நால்வரையும் கைது செய்தனர்.

# சுதந்திர தினத்தை முன்னிட்டு மரநடுகை வேலைத்திட்டம்

இலங்கையின் 75ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு மரநடுகை வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு பல்லேப்பொல பிரதேச சபை,கமநல சேவைகள் நிலையம், மற்றும் வலய கல்வி அலுவலகம் என்பன இணைந்து பல்லேப்பொல எப்பாவல ஆரம்பப்பாடசாலைக் காணியில் மரநடுகை வேலைத்திட்டமொன்றை நேற்று முன்தினம் (28) வைபவ ரீதியாக ஏற்பாடு செய்திருந்தது.

இதன்போது பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்களிடம், பிரதேச செயலாளர், பிரதேச சபைத் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்கள் மற்றும் அரசஅதிகாரிகள் எனப் பலரும் பிரசன்னமாகியிருந்தனர்.

வீட்டுவேலைத் தொழிலாளர்களின்

# தொழில்சார் உரிமைகளை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தி கண்டியில் ஆர்ப்பாட்டம்





அக்குணை குறூப் நிருபர்

அரசாங்கம் வீட்டு வேலைத் தொழிலாளர்களின் தொழில்சார் உரிமைகளை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தி நேற்றுமுன்தினம் கண்டியில் மாபெரும் ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது. வீட்டு வேலைத் தொழிலாளர் சங்கத்தினால் இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கண்டி, கொழும்பு, வவுனியா, மட்டக்களப்பு, காத்தான்குடி, ஹற்றன், மஸ்கெலியா, கேகாலை, பதுளை, அம்பாறை உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்களப் பெண்கள் சுமார் 500 பேர் இதில் பங்கு கொண்டனர்.

தமக்கெதிராக மேற்கொள்ளப்படும் அநீதிகள், வேதனப்பிரச்சினைகள், பாதுகாப்பு போன்ற பல விடயங்கள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் தெரிவித்தனர். வெளிநாடுகளில் வீட்டுப்பணிப் பெண்களாகப் பணிபுரிந்து பல்வேறு பாதிப்புக்களை சந்தித்த பலரும் இதில் பங்கு கொண்டனர். கண்டி ஸ்டேசன் வீதியில் இருந்து தலதா வீதிவரை சென்று டொரிங்கள் பூங்காவில் கோஷசங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# கண்டி மாவட்ட பிரதேச சபை பெண் உறுப்பினர்களின் கூட்டிணைப்பு



(அக்குணை குறூப் நிருபர்)

கண்டி மாவட்டத்திலுள்ள பிரதேச சபை பெண் உறுப்பினர்கள் இணைந்து கட்சி பேதமின்றி கூட்டிணைப்பை உருவாக்கியுள்ளனர். கண்டி டெவோன் ஹோட்டலில் இக்கூட்டம் நடைபெற்றது. தேசிய சமாதான சபை மற்றும் கண்டி மாவட்ட சர்வமத அமைப்பு என்பவற்றின் ஆலோசனையுடன் தத்தமது பிரதேசங்களில் அபிவிருத்தி மற்றும் இன நல்லிணக்க வேலைத்திட்டங்களை செயற்படுத்த இக்கூட்டிணைப்பு முடிவு செய்துள்ளதாக அதன் ஏற்பாட்டளரும் கண்டி மாவட்ட சர்வமத அமைப்பின் அழைப்பாளருமான காமினி ஜயவீர அங்கு தெரிவித்தார்.

அக்குறணை, கலகெதர, தும்பனை, ஹாரிஸ்பத்துவ, பாத்ததும்பறை,மெத தும்பறை, உட தும்பறை, குண்டசாலை உட்பட 20 ற்கும் மேற்பட்ட பிரதேசசபைகளின் பெண் உறுப்பினர்கள் இதில் கலந்துகொண்டனர். கண்டி மாவட்ட சர்வமத அமைப்பின் செயலாளர் சுனில் கொக்கல உட்பட பலர் இங்கு உரையாற்றினர்.

# கட்டாக்காலி நாய்களால் தொல்லை

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

பலாங்கொடை பிரதேசத்தில் கட்டாக் காலி நாய்களால் பெரும் தொல்லை ஏற்பட்டு வருவதாக பொது மக்கள் புகார் செய்கின்றனர்.

நகர, புறநகர், கிராமம் அனைத்துப்பகுதிகளிலும் இந்நிலைமை காணப்படுவதாகவும் பொது மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு கட்டாக்காலி நாய்களினால் பெருந்தொல்லை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. நாய்களினால் கடிக்கப்பட்ட பலர் வைத்திய சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். சில பகுதிகளில் குழந்தைகள், சிறுவர்கள் வயோதிபர்கள் வீடுகளிலிருந்து வெளியேற அச்சப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அதிகரித்து வரும் நாய்த்தொல்லைகளால் சுற்றாடல் அசுத்தமடைந்து வருவதாகவும் இவர்கள் முறையிடுகின்றனர்.

இவ்விடயமாக உரிய சுகாதார தரப்பினருக்கும் நிறுவனங்களுக்கும் அறிவித்துள்ள போதிலும் இதுவரை இப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கவில்லையெனவும் இவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எத்தகைய தடைகள் வந்தாலும்

## நாட்டை சிறந்த நிலைக்கு கட்டியெழுப்ப அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படும்

### பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவிப்பு

நாட்டை சிறந்தொரு நிலைக்கு கட்டியெழுப்ப அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

கொழும்பு தேசிய நூலக கேட்போர் கூடத்தில் நேற்று (29) நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு பேசும்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்னவினால் எழுதப்பட்ட "பல ரங்கனய" நூல் வெளியீட்டு நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட பிரதமர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இந்த நேரத்தில் நாட்டைப் பற்றி யதார்த்தமாக சிந்திக்க வேண்டும். புதிய தலைமுறையினரின் கருத்துக்களுக்கு செவி சாய்ப்பது அவசியம். அவர்கள் சொல்வது போல் வீண் விரயம் தவிர்க்கப்பட வேண்டும். இந்நூல் தற்போதைய சமூகம், ஆட்சிமுறை, மனித நற்பண்புகளின் வீழ்ச்சி மற்றும் கடந்த காலங்களில் மாணவர் இயக்கங்கள் எதிர்கொண்ட நிலைமைகள் பற்றி பேசுகிறது.

நாடு மீளக் கட்டியெழுப்பப்படும் போது, அதை விரும்பாத பல தீவிர போக்குடையவர்களுக்கு அது வலியை ஏற்படுத்தும். எத்தகைய தடைகள் வந்தாலும் நாட்டின் எதிர்காலத்திற்காக நாம் முன்னேறிச் செல்ல வேண்டும். மக்கள் பாதிப்புக்குள்ளாக வேண்டும் என்பதே அவர்களது

06



## விமானப்படை தளபதியுடன் கடற்படை தளபதி சந்திப்பு



புதிதாக பதவியேற்ற இலங்கை கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா, இலங்கை விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரனவை நேற்று முன்தினம் (28) விமானப்படை தலைமையகத்தில் சந்தித்தார். தலைமையகத்துக்கு வருகை தந்த புதிய கடற்படை தளபதி, கொழும்பு விமானப்படை கட்டளை அதிகாரி எயார் கோமாடோர் சுரேஷ் பெர்ணாண்டோவின் தலைமையில்

06

## 2.7 பில். ரூபா பெறுமதியான மருத்துவ உதவிகள் நன்கொடை

### அமெரிக்காவிடமிருந்து மற்றுமொரு தொகை வந்தது



இலங்கைக்கு மேலும் ஒரு தொகுதி மருந்து மற்றும் மருத்துவ பொருட்கள் நன்கொடையாக அளிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்கா மற்றும் மெக்சிகோவுக்கான இலங்கைத் தூதுவர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் 'ஹார்ட் டு ஹார்ட் இன்டர்நேஷனல்' என்ற அமைப்பு இந்த மருத்துவ உதவிகளை வழங்கியுள்ளது.

இதன் பெறுமதி 7.2 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இது இலங்கை நாணய பெறுமதியில் 2.7 பில்லியன் ரூபா என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 'ஹார்ட் டு ஹார்ட் இன்டர்நேஷனல்' அமைப்பு, இலங்கைக்கு இதுவரையில் 19.9 மில்லியன் அமெரிக்க டொலர் (7.4 பில்லியன் ரூபா) பெறுமதியான நன்கொடைகளை வழங்கியுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரி:

## ஸஹ்ரானுடன் தொடர்பிலிருந்த இருவர் தமிழகத்தில் கைது



### ஒருவர் ஐ.எஸ் உறுப்பினர் என இனங்காணல்

இலங்கையில் 2019 உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பின் பிரதான சூத்திரதாரியாக கருதப்படும் பயங்கரவாதி ஸஹ்ரான் ஹாஷிமுடன் தொடர்பில் இருந்ததாக கூறப்படும் ஐ.எஸ் அமைப்பின் உறுப்பினரொருவர் உட்பட இருவரை இந்திய புலனாய்வு பிரிவு நேற்று முன்தினம் கைது செய்துள்ளது.

ஒக்டோபர் 23 ஆம் திகதி, தமிழகம் கோயம்புத்தூரில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சந்தேக நபர்களுடன் தொடர்பு கொண்டிருந்ததாகக் கூறப்படும் ஷேக் ஹிதாயத்துல்லா மற்றும் இந்தியாவில் பயங்கரவாதத் தாக்குதல்களை நடத்தும் திட்டங்களில் பங்கேற்றதாகக் கூறப்படும் சனோபர் அலி ஆகியோரே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி இலங்கையில் 250க்கும் மேற்பட்ட உயிர்களைக் பலி கொண்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் மூளையாக செயற்பட்டிருந்த பயங்கரவாதி ஸஹ்ரான் ஹாஷிமுடன், ஐஎஸ் பயங்கரவாத அமைப்பில் உறுப்பினரான ஷேக் ஹிதாயத்துல்லா தொடர்பை பேணியதாக இந்திய புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஹிதாயத்துல்லா மற்றும் சனோபர் அலி ஆகிய இரு பயங்கரவாதிகளும் தமிழகத்தில் வைத்தே கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நபர்கள் 2022 பெப்ரவரியில் ஈரோடு மாவட்டம், சத்திய மங்கலம் வனப்பகுதியின் ஆசனூர் மற்றும் கடம்பூர் பகுதிகளில் உள்ள வனப்பகுதியின் உட்பகுதியில் குற்றவியல் சதித்திட்டத்தில் ஈடுபட்டமை விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது. அங்கு அவர்கள் பயங்கரவாதச் செயல்களுக்கான தயாரிப்புக்களை மேற்கொண்டதாகவும் விசாரணையாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

கடந்த 2019 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தொடர்புகள் குறித்து, இந்திய தேசிய புலனாய்வு பிரிவால், விசாரிக்கப்பட்ட ஜமீஷா முபீன் என்பவர், கோயம்புத்தூர் உக்கடத்தில் உள்ள கோட்டை ஈஸ்வரன் கோயில் அருகே கடந்த அக்டோபர் 23 ஆம் திகதி காலை, தாம் ஓட்டிச் சென்ற வேனில் இருந்த எரிவாயு கொள்கலன்

06

## மார்ச் 10க்கு முன்னர் உள்ளூராட்சி தேர்தல்



உள்ளூராட்சி சபைத் தேர்தல் எதிர்வரும் மார்ச் 10ஆம் திகதிக்கு முன்னர் நடத்தப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

அத்துடன் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனு கோரல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் ஜனவரி 5ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடப்படும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்



தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் மார்கழி மாதம் 15ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஜுமாதல் ஆகிராஹ் பிறை 05

### குறள் தரும் சிந்தனை



கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையும் உலகு

தொன்றுதொட்டு உரிமையுடன் பழகிய நட்புறவைக் கைவிடாமல் இருப்பவரை உலகம் போற்றும்.

# கொவிட் 19 தலைதூக்குவதை தடுப்பதில் மக்களின் பங்கு

உலகுக்கு பெரும் சவாலாக 2020 இல் தோற்றம் பெற்ற கொவிட் 19 தொற்று, 2021 ஆம் ஆண்டின் முன்னரைப் பகுதி முதல் பெருவீழ்ச்சி நிலைக்குக் கொண்டு வரப்பட்டது. இத்தொற்றின் பரவுதல் தவிர்ப்புக்கான அடிப்படை சுகாதார பழக்கவழக்கங்களும் தடுப்பூசியும் இதற்கு பெரிதும் உதவின. இதன் ஊடாக புதிய நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் ஏற்பட்டதோடு, முழுஉலகும் 2020 இற்கு முன்னரான இயல்பு நிலைக்கு மீண்டும் திரும்பிக் கொண்டிருக்கின்றது.

இந்தச் சூழலில் இத்தொற்று மீண்டும் தலைதூக்குவதற்கான அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக சீனா, ஜப்பான், தென்கொரியா, தாய்வான் உள்ளிட்ட சில நாடுகளில் இத்தொற்றுக்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்படுபவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டிருக்கின்றது. அதிலும் குறிப்பாக, கொவிட் 19 பெருந்தொற்று பூச்சிய கொள்கையை கடைப்பிடித்துவரும் சீனாவில் இத்தொற்று தீவிரநிலையை அடைந்துள்ளது.

அதன் காரணத்தினால் அங்கு முடக்கங்களும் தனிமைப்படுத்தல்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கொவிட் 19 தொற்று மீண்டும் தலைதூக்குவதன் அச்சுறுத்தல் குறித்து இந்தியாவும் விஷேட கவனம் செலுத்தும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இதன் கீழ், சில நாடுகளில் இருந்து இந்தியாவுக்கு வருகைதரும் பயணிகளைக் கொவிட் 19 தொற்று பரிசோதனைக்கு உட்படுத்தவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு இத்தொற்று மீண்டும் தலைதூக்குவது குறித்து இலங்கையும் கவனம் செலுத்தியுள்ளது. கடந்த காலங்களைப் போன்று இத்தொற்று மீண்டும் தலைதூக்குவதைத் தவிர்ப்பதிலும் அக்கறை கொள்ளப்பட்டுள்ளது.

இத்தொற்று கடந்த காலங்களில் தலைதூக்கிய போது, அதனைக் கட்டுப்படுத்தவென முன்னெடுக்கப்பட்டது போன்ற நடவடிக்கைகளைக் கையாளக் கூடிய நிலையில் நாடு இன்றில்லை. அதாவது இத்தொற்றின் முதலாம், இரண்டாம், மூன்றாம் அலைகள் தோற்றம் பெற்ற போது அவற்றைக் கட்டுப்படுத்தி பெருவீழ்ச்சி நிலைக்குக் கொண்டுவரும் நோக்கில் ஊரடங்கு உத்தரவு, தனிமைப்படுத்தல், முடக்கம் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அவற்றின் ஊடாக இத்தொற்றின் பரவுதல் பெருவீழ்ச்சி நிலைக்கு கொண்டு வரப்பட்டது.

அதேநேரம் அபிவிருத்தி அடைந்த நாடுகளைப் போன்று இந்நாட்டு மக்களுக்கும் இத்தொற்றின் தாக்கத்தைப் பலவீனப்படுத்தும் நோக்கில் கொவிட் தடுப்பூசியும் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

இதன் பயனாக இத்தொற்று வளர்ச்சி அடைந்துள்ள நாடுகளைப் போன்று இங்கும் பெருவீழ்ச்சி நிலையில் காணப்படுகிறது. ஆனாலும் உலகின் சில நாடுகளில் இத்தொற்று மீண்டும் தலைதூக்கும் இச்சூழலில் இங்கும் தலைதூக்காது என்பதை உத்தரவாதப்படுத்த முடியாது.

நாடு பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் இன்றைய சூழலில் இத்தொற்று மீண்டும் தலைதூக்குவதைத் தவிர்ப்பதற்காகக் கடந்த காலங்களைப் போன்று முடக்கம், ஊரடங்கு, தனிமைப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளை முன்னெடுக்கக்கூடிய நிலைமையும் காணப்படவில்லை. இதனை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமும் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆனால் கொவிட் 19 தொற்றானது ஆளுக்காள் தொற்றிப் பரக்கூடிய ஓர் தொற்று நோய். நாட்டில் இலவச சுகாதார சேவை நடைமுறையில் இருந்தாலும் கூட அரசாங்கத்தினால் தனித்து நின்று அதனைக் கட்டுப்படுத்த முடியாது. தொற்று நோயொன்றைக் கட்டுப்படுத்தி வீழ்ச்சி நிலைக்கு கொண்டு வருவதற்கும் அதனைத் தொடர்ந்தும் பேணுவதற்கும் பொதுமக்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் இன்றியமையாததாகும்.

இந்த உண்மையைக் கருத்தில் கொண்டு இத்தொற்றின் பரவுதலைக் கட்டுப்படுத்தி பலவீனப்படுத்துவதில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும். அதற்கான பொறுப்பையும் கடமையையும் தாம் கொண்டிருப்பதை மக்கள் மறந்துவிடலாகாது.

அதனால் கொவிட் 19 தொற்றின் பரவுதல் தொடரைத் துண்டித்து விடுவதற்கு ஏற்ப செயற்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும்.இதன் நிமித்தம், முகக்கவசம் அணிதல், கைகழுவுதல், சமூக இடைவெளியைப் பேணுதல் என்பவற்றில் கூடுதல் கவனம் செலுத்தத் தவறக்கூடாது. குறிப்பாக சமூக இடைவெளியைப் பேணும் வகையில் சனநெரிசல் மிக்க இடங்களுக்கு பயணங்களை மேற்கொள்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அத்தோடு கொவிட் 19 தொற்று தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளவும் வேண்டும்.

இவற்றின் ஊடாக இத்தொற்றை தொடர்ந்தும் பெருவீழ்ச்சி நிலையில் பேணிக்கொள்ளக் கூடியதாக இருக்கும். இதைவிடுத்து இத்தொற்று குறித்து அசிரத்தையோடும் கவனயீனமாகவும் நடந்து கொள்வது இத்தொற்று மீண்டும் தலைதூக்குவதற்கு துணைபுரிவதாகவே அமையும். அவ்வாறான துரதிர்ஷ்ட நிலைக்கு எவரும் துணை போய்விடலாகாது. அதுவே அனைவரதும் எதிர்பார்ப்பும் விருப்பமும் ஆகும்.

editor.tkn@lakehouse.lk

# இலங்கையும் ஜப்பானும் எக்காலத்திலுமே பிரிக்க முடியாத நெருக்கமான நட்புநாடுகள்

## இருநாடுகளின் இராஜதந்திர உறவின் 70 ஆண்டு நிறைவை முன்னிட்டு ஜப்பானிய வெளியுறவு அமைச்சர் ஹயாஷி யோஷிமாசா, இலங்கை வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி, ஜப்பானிய தூதுவர் மிசுகொஷி ஹிதேகி வாழ்த்து



ஜப்பானிய வெளியுறவு அமைச்சர் ஹயாஷி யோஷிமாசா



இலங்கை வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளை ஸ்தாபித்ததன் 70 ஆவது ஆண்டு நிறைவை 2022 இல் நாம் கொண்டாடியிருப்பது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. ஓகஸ்ட் மாதம் இலங்கை வெளியுறவு அமைச்சர் அலி சப்ரியை சந்திக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. 'சுதந்திரமான மற்றும் திறந்த இந்தோபசிபிக்' உருவாக்கத்தை நோக்கி நமது இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவுகளின் எதிர்கால வளர்ச்சியில் இது எனக்கு வலுவான நம்பிக்கையை அளித்தது.

செப்டம்பரில், மறைந்த முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேயின் இறுதிச் சடங்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டார். உச்சி மாநாட்டின் போதும், ஜனாதிபதியுடனான எனது மரியாதையின் நிமித்தமான சந்திப்பின் போதும் இரு நாடுகளும் நமது இருதரப்பு உறவிலிருந்து பிராந்திய மற்றும் உலகளாவிய சவால்கள் வரை வெளிப்படையான உரையாடல்களில் ஈடுபட்டன. ஜனாதிபதி அவர்களின் வருகைக்காகவும், நீங்கள் எமக்கு வழங்கிய அனுதாபத்திற்காகவும் அனைத்து இலங்கை நண்பர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்கள் உறவை வளர்ப்பதில் அவரது பண்புகள் ஜப்பானிலும் இலங்கையிலும் நீண்ட காலமாக நினைவில் இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

1951 ஆம் ஆண்டு சான்பிரான்சிஸ்கோ அமைதி மாநாட்டில் மாண்புமிகு ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆற்றிய கருணைமிக்க உரையைப் போன்று, இந்த ஆண்டு முழுவதும் எங்கள் இரு நாடுகளும் வெளிப்படுத்திய பரஸ்பர நம்பிக்கையும் ஆதரவும் எங்கள் இதயத்தில் இருந்து எங்களை ஒன்றாக இணைக்கும் எங்கள் நீண்டகால உறவுக்கு மற்றொரு சான்றாகும். எங்கள் இரு நாடுகளும் பிரிக்க முடியாத மற்றும் ஈடு செய்ய முடியாத பங்காளிகளாக உள்ளன. கடந்த ஓராண்டில் எங்கள் உறவு இன்னும் வலுப்பெற்றுள்ளது என்று நான் நம்புகிறேன் .

ஜப்பான் மே மற்றும் செப்டெம்பர் மாதங்களில் உணவு, போஷாக்கு, சுகாதாரம் மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகளில் சர்வதேச நிறுவனங்கள் மூலம் மொத்தம் 6.5 மில்லியன் டொலர்களை அவசர உதவியை நன்கொடையாக வழங்கியுள்ளது. டிசம்பரில், ஒரு துணை பட்ஜெட் அங்கீகரிக்கப்பட்டது, இதில் சுமார் $71 மில்லியன் கூடுதல் உதவி அடங்கும். இந்த பட்ஜெட் மூலம், உணவு மற்றும் ஊட்டச்சத்து, உரம், சுகாதாரம் மற்றும் மருத்துவ பராமரிப்பு, நீர் மற்றும் சுகாதாரம் மற்றும் எரிபொருள் ஆகிய துறைகளில் ஜப்பான் உதவி வழங்க திட்டமிட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் கடன் பிரச்சினையை நிவர்த்தி செய்வதற்கான முயற்சிகளுக்கு நாங்கள் ஆதரவளித்துள்ளோம். இந்த ஆண்டு ஜனவரி மாதம் இலங்கையில் நடத்தப்படும் திறன் பரீட்சைகள் மற்றும் ஜப்பானிய மொழிப் பரீட்சைகள் குறிப்பிட்ட திறன்மிக்க தொழிலாளர் முறைமையின் ஊடாக இலங்கைப் பணியாளர்களை ஏற்றுக் கொள்வதற்கு மேலும் எமது இருதரப்பு உறவுகளை ஆழப்படுத்துவதற்கு பெறுமதியான வாய்ப்புகளை வழங்குகின்றன.



ஜப்பானிய தூதுவர் மிசுகொஷி ஹிதேகி

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையில் ஒக்டோபரில் கைச்சாத்திடப்பட்ட கூட்டு கடன் பொறிமுறையானது (JCM) நமது எதிர்காலம் சார்ந்த ஒத்துழைப்பின் மற்றுமொரு உதாரணம் ஆகும்,

எமது இலங்கை நண்பர்களுக்கு புத்தாண்டு நல்வாழ்த்துக்களை நான் முழுமனதுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

### வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி செய்தி:

வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி இது தொடர்பாக வெளியிட்டுள்ள செய்தியில்,

"ஜப்பானும் இலங்கையும் இந்த ஆண்டு இராஜதந்திர உறவுகளை ஸ்தாபித்ததன் 70வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவது உண்மையில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல் ஆகும். நமது நாடுகளுக்கிடையே உறவுகள் பல தசாப்தங்களாக பாரம்பரியமாக வலுவான வளர்ந்துள்ளன. ஜப்பானும் இலங்கையும் ஒரு தனித்துவமான நட்பை அனுபவித்து வருகின்றன; கடினமான காலங்களில் ஒருவருக்கொருவர் ஆதரவளித்து வந்துள்ளன.

நாடுகளுக்கிடையில் அனுபவிக்கும் பொருளாதார உறவுகளுக்கு மேலதிகமாக, ஜப்பான் மற்றும் இலங்கை மக்களிடையே பகிர்ந்து கொள்ளப்பட்ட கலாசார பிணைப்புகளும் போற்றுதற்குரியனவாக உள்ளன. இந்நிலையில், கொழும்பில் உள்ள ஜப்பானிய தூதரகம் 70 ஆவது ஆண்டு நிறைவை பல நிகழ்வுகள் மற்றும் செயல்பாடுகளுடன் கொண்டாடுவதற்கு எடுத்துள்ள முயற்சிகள், நமது இரு நட்பு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்தும்.

தற்போதைய சவால்களை முறியடிப்பதை நாம் நோக்கும் போது, இலங்கை மீது ஜப்பான் எப்போதும் காட்டும் நல்லெண்ணத்தையும் பெருந்தன்மையையும் பாராட்டுகிறோம். நாம் ஒன்றிணைந்து முன்னோக்கிச் செல்லும் போது ஜப்பான் இலங்கைக்கு தொடர்ந்து ஆதரவளிக்கும் என்று நான் நம்புகிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

### ஜப்பானிய தூதுவர் மிசுகொஷி ஹிதேகி செய்தி:

ஆயுபோவன், வணக்கம்,

ஜப்பானுக்கும் இலங்கைக்குமிடையே இராஜதந்திர உறவுகள் ஆரம்பமாகி 70 வருட பூர்த்தி கொண்டாட்டங்களுடன் 2022 ஆம் ஆண்டை நிறைவு செய்வதையிட்டு பெருமை கொள்கின்றோம். பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளால், சுதந்திரமடைந்தது முதல் இலங்கை இதுவரை எதிர்கொண்டிருந்த மிகவும் சவால்கள் நிறைந்த ஆண்டாக இந்த ஆண்டு அமைந்திருந்த நிலையில், இரு நாடுகளுக்குமிடையிலான நட்பு பந்தம் மேலும் வலுவடைந்துள்ளது என்பதை நான் நம்பிக்கையுடன் தெரிவிக்கின்றேன். இலங்கை அரசாங்கம், சகல பங்காளர்கள் மற்றும் ஜப்பானுடன் தொடர்புடைய நிறுவனங்கள் வழங்கும் சகல ஆதரவுக்கும் நன்றி தெரிவிக்கின்றேன்.

பரஸ்பர உறவுகளில் முன்னேற்றத்தை நாம் கண்டிருந்த முக்கிய விடயமாக, இலங்கையில் ஜப்பானிய மொழிக் கல்வியின் அறிமுகத்தை குறிப்பிட முடியும். சில பல்கலைக்கழகங்களில் புதிய ஜப்பானிய மொழிக் கற்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், தரம் 9 முதல் ஜப்பானிய மொழியை சாதாரண பாடமாக அறிமுகம் செய்யவும் இலங்கை திட்டமிட்டுள்ளது.

இந்த ஆண்டில் ஜப்பானிய மொழிப் பரீட்சையில் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை பெருமளவு அதிகரித்திருந்தமை நாம் அவதானித்திருந்தோம். கொவிட்19 தொற்றுப் பரவல் காரணமாக தடைப்பட்டிருந்த எமது மக்கள் பரிமாற்றத் திட்டம், 2023 ஆம் ஆண்டு முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

70 வருடங்களுக்கு முன்னர் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன மற்றும் இலங்கை மக்கள் ஜப்பானுக்கு உதவிகளை வழங்கி, யுத்தத்தின் பின்னர் மறுசீரமைப்பு பணிகளுக்கு ஜப்பானுக்கு உதவிகளை வழங்கியிருந்ததைப் போன்று, இந்த நெருக்கடியான தருணத்தில் இலங்கைக்கு உதவிகளை வழங்க ஜப்பான் தயாராகவுள்ளது.

2023 ஆம் ஆண்டில் ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையே மேலும் நெருக்கமான உறவுகள் தொடரும் எனும் எதிர்பார்ப்புகளுடன், அனைவருக்கும் இனிய புதுவருட நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

# தமிழ், முஸ்லிம் மாணவர்களுக்கு அப்பியாச கொப்பிகள் அன்பளிப்பு

நாடு பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்டுள்ளதைக் கருத்திற் கொண்டு, கல்முனை ரோட்டரிக் கழகம் கஷ்டப் பிரதேச தமிழ், முஸ்லிம் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக கற்றல் உபகரணங்களை வழங்கி வருகின்றது.

ரோட்டரிக் கழக வேலைத்திட்டத்தின் 5 ஆம் கட்ட நிகழ்வாக பொத்துவில் பிரதேசத்திலுள்ள ஐந்து பாடசாலைகளுக்கு 3,87,560 ரூபா பெறுமதியான அப்பியாசக் கொப்பிகள் வழங்கி வைக்கப்பட்டன.

ரோட்டரிக் கழகத்தின் தலைவர் ரோட்டரியன் வி.விஜயசாந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச்செயலாளர் ரோட்டரியன் மு.சிவபாதசுந்தரம், முன்னாள் தலைவர் ரோட்டரியன் எஸ். புஷ்பராஜா, உறுப்பினர் ரோட்டரியன் நாசர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பொத்துவில் சரஸ்வதி வித்தியாலயம், ஊறணி வித்தியாலயம், றொட்டை அ.த.க.பாடசாலை, பொத்துவில் விபுலானந்த வித்தியாலயம், செங்காமம் அல்மினார் வித்தியாலயம், மணற்சேனை அ.த.க.பாடசாலை போன்ற பாடசாலைகளின் மாணவர்களுக்கு இவ்வுதவிகள் வழங்கப்பட்டன.

நெருக்கடி மிகுந்த இன்றைய சூழலில் இவ்வுதவி மாணவர்களுக்கு பெரும் வரப்பிரசாதம் என்று குறித்த பாடசாலை அதிபர்கள் நன்றி தெரிவித்தனர். இதேவேளை, ஏற்கனவே கல்முனை ரோட்டரி கழகம் கோரக்கர் தமிழ் மகாவித்தியாலய மாணவர்களுக்கென ஆயிரம் அப்பியாசக் கொப்பிகளை வழங்கி வைத்தது. அதிபர் எஸ்.இளங்கோவன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்முனை ரோட்டரி கழகத்தின் புதிய தலைவர் ரோட்டரியன் விஜயரெத்தினம் விஜயசாந்தன், சம்மாந்துறை கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, ரோட்டரி கழக முன்னாள் தலைவர் ரோட்டரியன் எஸ். புஷ்பராஜாே, பொதுச்செயலாளர் ரோட்டரியன் எம். சிவபாதசுந்தரம், உறுப்பினர் ரோட்டரியன் நாசர் ஆகியோருடன் கோரக்கர் ஆலய பரிபாலன சபையின் உபதலைவரும், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளருமான வி.மோகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆயிரம் அப்பியாசக் கொப்பிகள் மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.







## கல்முனை ரோட்டரி கழகம் வழங்கிய உதவி

காரைதீவு குறூப் நிருபர்...

# ஜல்லிக்கட்டில் சீறிப்பாய தயாராகும் செந்தில் தொண்டமானின் காளைகள்!

தைப்பொங்கல் பண்டிகை நெருங்கி வரும் நிலையில், தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டு போட்டிக்கு காளைகள் தயாராகி வருகின்றன. இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் வளர்க்கும் காளைகளும் ஒலிம்பிக் போட்டிக்கு தயாராகும் வீரர்களைப் போலவே ஜல்லிக்கட்டுக்கு தயாராகி வருகின்றன.



ஜல்லிக்கட்டு போட்டியில் பங்கேற்கும் காளைகள் அனைத்து வசதிகளோடு பராமரிக்கப்பட்டு அவற்றுக்கு தீவிர பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது. சிவகங்கை மாவட்டத்தைப் பூர்வீகமாக கொண்டவர் செந்தில் தொண்டமான். ஜல்லிக்கட்டு போட்டிகளில் செந்தில் தொண்டமானின் காளைகள் இறங்கினாலே எதிர்பார்ப்புகள் கூடும். இந்தக் காளைகள் ஒவ்வொன்றும் மாடுபிடி வீரர்களைக் களத்தில் நின்று மிரட்டுவதுடன், அவர்களுக்குச் சிம்ம சொப்பனமாகவே திகழும்.

இந்த வீரமிகு காளைகளை தங்கள் குடும்பத்தில் ஒருவராகவே நினைத்துப் பராமரித்து வருகிறார் செந்தில் தொண்டமான். திருப்பத்தூர் அருகே ஆளவிளாம்பட்டி கிராமத்தில் உள்ள அவரது தோப்பில் தமிழகம் மற்றும் வெளிமாநில காளைகளை வாங்கி பராமரித்து வருகிறார். இப்படி வளரும் இவரது காளைகள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இன்றுவரை நடைபெற்ற எல்லா ஜல்லிக்கட்டு போட்டிகளிலும் பரிசுகளை குவித்து முதலாவது காளைகளாக திகழ்ந்து சிவகங்கை சீமையின் வீரத்தை பறைசாற்றி வருகின்றன. களத்தில் இக்காளைகளின் கொம்புகளையும், உடல் கம்பீரத்தையும் பார்த்ததும் வாலிபர்கள் பின்வாங்குவதுண்டு.

பேட்டகாளி, சோழன், அணில், கரிசல்,கரிகாலன், புல்லட் போன்ற செல்லப்பெயர்கள் அவர் வளர்க்கும் காளைகளுக்கு உள்ளன. கூரிய கொம்புகள், ராஜநடையோடு கம்பீரமாக வலம் வரும் இக்காளைகள் களத்தில் வீரர்களை மிரள வைக்கும் தனிச்சிறப்பு கொண்டவையாகும். பல போட்டிகளில் இக்காளைகள் முதல்பரிசான கார் போன்ற பல பரிசுகளை வென்று பெருமை சேர்த்துள்ளன.

இந்த ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு ஜல்லிக்கட்டு நடைபெறும் என்று அரசு அறிவித்துள்ளதால் உற்சாகத்துடன் தனது முகநூல் பக்கத்தில் 'ஜல்லிக்கட்டுக்கு காத்திருக்கிறோம்' என்று பதிவிட்டுள்ளார் செந்தில் தொண்டமான்.

ஜல்லிக்கட்டுக்காக பயிற்சி அளித்து வரும் செந்தில் தொண்டமான் காளைகள் எப்படி தயாராகின்றன என்னென்ன உணவுகள் வழங்கப்படுகின்றன என்று செய்தியாளர்களிடம் கூறியுள்ளார். "பொங்கல் பண்டிகை நெருங்கி வரும் நிலையில், ஜல்லிக்கட்டு போட்டிகளில் பங்கேற்க ஏதுவாக எனது தோட்டத்திலேயே வாடிவாசல் ஏற்பாடு செய்து தனிப்பயிற்சி வழங்கி வருவதோடு, காளைகளுக்கு உடல் வலிமைக்காக வழக்கமான உணவுகளை தவிர்த்து ஊட்டமளிக்கும் உணவுப் பொருட்களை வழங்குகின்றோம்" எனவும் அவர் கூறினார்.



(ONE INDIA TAMIL)

## ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# பிள்ளைகளின் தவறான பழக்கங்களை தவிர்ப்பது பெற்றோரின் கைகளில்!

## இளவயதினரை நல்வழிப்படுத்துவதில் தாய் தந்தையரின் பங்களிப்புகள் எவை?

'யா அல்லாஹ், நாங்கள் சிறுவராக இருக்கும் போது எமது பெற்றோர் எங்களுக்கு இரக்கம் காட்டியது போன்று நீ அவர்கள் மீது இரக்கம் காட்டுவாயாக... என்ற (அல் குர்ஆன்) துஆவை அல்லாஹ்தஆலா எமக்குக் கற்றுத் தந்திருக்கின்றான். பெற்றோருக்காக நாங்கள் கேட்கும் இந்த துஆவினூடாக பெற்றோரும் பிள்ளைகள் சிறுவயதினராக இருக்கும் போது பிள்ளைகளுடன் அன்பாக நடந்து கொள்ள வேண்டும் என்பதை அல்லாஹ்தஆலா எதிர்பார்க்கிறான்.

பியாஸ் முஹம்மத் ...

'சிறுவர்கள் மீது அன்பு காட்டாதவர்களும் பெரியவர்கள் மீது மரியாதை செய்யாதவர்களும் எங்களைச் சேர்ந்தவர்களல்லர்' என நபி (ஸல்) அவர்கள் கூறியிருப்பதன் ஊடாக சிறுவர்கள் மீது அன்பு காட்டாதவர்களை முஸ்லிம் சமூகத்திலிருந்தே வேறாக்கி வைப்பதில் இருந்து இதன் முக்கியத்துவத்தை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

இன்று சமூகத்தை ஆட்டிப் படைக்கின்ற போதைப்பொருளுக்கு அடிமையான பலரும் பெற்றோரின் அரவணைப்பிலிருந்து தூரமாகியவர்கள் என உளவியலாளர்கள் தெரிவித்திருக்கின்றனர். பெற்றோரின் அரவணைப்புக்காக ஏங்கும் சிறுவர்கள் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் போதைப்பொருள் வியாபாரியிடம் சிக்கிக் கொள்கின்றனர். இதன் விளைவாகவே போதை எனும் இந்நச்சுவளையம் உடைத்தெறிய முடியாத நிலையை அடைந்திருக்கிறது.

இந் நச்சுவளையத்திலிருந்து பிள்ளைகளை மீட்டெடுப்பதும் அவர்கள் இதில் சிக்கிக்கொள்ளாமல் பாதுகாப்பதும் பெற்றோரின் பொறுப்பாகும். நபி(ஸல்) அவர்கள் இதுபற்றிக் கூறும் போது, 'பிள்ளைகள் நல்லவர்கள் எனும் இயல்பிலேயே பிறக்கிறார்கள். பெற்றவர்கள் தான் அவர்களை வழி தவறியவர்கள் ஆக்கி விடுகிறார்கள்' என்று கூறியுள்ளார்கள். பிள்ளைகளைப் பெறுவதனால் மட்டும் பெற்றவர்கள் ஆகி விட முடியாது. அவர்களை நல்ல விதமாக வளர்த்து சுவர்க்கத்தைப் பகரமாகப் பெறுவதனால் தான் ஈடேற்றம் பெற்றவர்களாக மாற முடியும். ஐந்து (அல்லது மூன்று) பெண் பிள்ளைகளைப் பெற்று அவர்களை ஸாலிஹான முறையில் வளர்க்கும் பெற்றோர் சுவர்க்கத்தில் இருப்பர் என்று நபி (ஸல்) அவர்கள் நன்மாராயம் கூறியிருப்பதனூடாக இதன் பெறுமதியை நாங்கள் விளங்கிக்கொள்ள முடியும்.

பிள்ளைகளை நல்லவிதமாக வளர்ப்பதில் பிள்ளைகளுக்கு அன்பு காட்டி அவர்களுடன் நெருங்கிப் பழகுவது மிக முக்கியமானது. ஒரு முறை கோத்திரத் தலைவர்களுள் ஒருவரான அக்ராஃ பின் ஹாரிஸ் என்ற நபித்தோழர், நபி (ஸல்) அவர்கள் ஹஸன், ஹுஸைன் (ரழி) அவர்களை முத்தமிடுவதைக் காண்கிறார். அது அவருக்கு ஆச்சரியமாக இருந்தது. எனக்கு பத்து பிள்ளைகள் இருக்கின்றனர். நான் ஒருபோதும் அவர்களை முத்தமிட்டது கிடையாது என்று கூற அதற்கு இறைத்தூதர் (ஸல்) அவர்கள், யார் இரக்கம் காட்டவில்லையோ அவர் இரக்கம் காட்டப்பட மாட்டார்' என்று கூறினார்கள்.

பிள்ளைகளிடம் இரக்கம் காட்டுவது அவர்கள் பெற்றோருடன் நெருக்கமாவதற்கு வழியமைப்பது போலவே அவர்களுடன் சேர்ந்து விளையாடுவதும் நெருக்கத்தை அதிகரிப்பதாக அமையும். நபி (ஸல்) அவர்கள் தமது பேரப்பிள்ளைகளுடன் விளையாடும் பழக்கத்தைக் கொண்டிருந்தார்கள். ஒரு முறை இறைத்தூதர் (ஸல்) அவர்கள், 'பள்ளிவாசலில் தொழுகை நடத்திக் கொண்டிருக்கும் போது ஹுஸைன் (ரழி) அவர்கள் நபியவர்களது தோளில் ஏறி சவாரி செய்யத் தொடங்கினார்கள். அதனால் அவர் இறங்கும் வரை நபிகளார் சுஜூதை நீட்டினார்கள். தொழுகை முடிந்ததும் அவரது தோழர்கள், நீங்கள் சுஜூதை நீட்டியபோது, நாங்கள் பலவாறு நினைத்து விட்டோம், என்ன காரணம் என்று கேட்டார்கள். அதற்கு நபியவர்கள் என் மகன் (பேரன்) என்மீது சவாரி செய்தான். நான் அவர்களை அவசரப்படுத்தி இறக்க விரும்பவில்லை' என்று கூறினார்கள்.

தொழுகையை நடத்திக் கொண்டிருந்த இமாமுடைய நிலையில் இருந்த போதும் நபியவர்கள் குழந்தைகள் தன்னுடன் அளவளாவுவதற்கு இடம் கொடுத்திருக்கிறார்கள். இன்று பல பெற்றோர் குறிப்பாக தந்தையர் பிள்ளைகளுடன் ஒரு வார்த்தை ஆறுதலாக அமர்ந்து பேச முடியாத அளவுக்கு பரபரப்பான உலகில் மூழ்கிப் போயிருக்கிறார்கள். மற்றொரு முறை இறைத் தூதரின் முதுகின் மீது பேரப்பிள்ளைகளான ஹஸன், ஹுஸைன் (ரழி) அவர்கள் சவாரி செய்து கொண்டிருக்கும் போது அங்கே வந்த நபித் தோழர்கள் நீங்கள் பயணம் செய்யும் வாகனம் எவ்வளவு சிறந்தது தெரியுமா? என்று சொன்னார்கள்.

அதற்கு நபி(ஸல்) அவர்கள் இரண்டு குதிரை வீரர்களும் எவ்வளவு சிறந்தவர்கள்? என்று பதிலுக்குக் கூறினார்கள். நமது பெற்றவர்களில் எத்தனை பேரிடம் நபியர்களின் இப்படியான பழக்கம் இருக்கிறது? இப்படி நமது பெற்றோர் நெருங்கிப் பழகத் தவறியதன் விளைவுகளில் ஒன்றாக பிள்ளைகள் போதைப்பொருள் பாவிப்பவர்களுடன் நெருக்கமாகக் கூடிய துரதிஷ்ட நிலை ஏற்பட்டு விடுகின்றது.

பிள்ளைகளின் உண்மையான அன்புத் தேவை நிறைவேற்றப்படாத போது, அவர்கள் தம்மீது போலியாக அன்பு காட்டுபவர்களிடம் சரணடைந்து விடுகிறார்கள்.

இதன் வழியாக அவர்களினால் ஊட்டப்படும் எந்த மோசமான பழக்கத்தையும் செய்வதற்கு பிள்ளைகள் துணிந்து விடுகிறார்கள். ஆகவே பிள்ளைகளிடம் அன்பாகப் பழகுவது முக்கியமானது. அவர்களுடன் சேர்ந்து அவர்களுக்குப் பிடிக்கும் விதத்தில் அவர்களுடன் பழகுவது முக்கியமானது.

நபி (ஸல்) அவர்கள் தமது தோழரின் மகன் அபூ உமைர் என்ற சிறுவரிடம் விளையாட்டாகவும் பரிகாசமாகவும் பழகக்கூடியவர்களாக இருந்தார்கள். அந்தச் சிறுவர் குருவி ஒன்றை வளர்த்து வந்தார். நபியவர்கள் அந்தச் சிறுவனைக் காணும் போதெல்லாம் அவனுடைய குருவியின் சேமநலம் விசாரிப்பார்கள். இது அச்சிறுவனுக்கு மகிழ்ச்சியைத் தந்ததோடு நபியவர்களுடன் நெருக்கமாவதற்கும் காரணமாக அமைந்தது. ஒரு நாள் நபி (ஸல்) அவர்கள் அச்சிறுவனை கவலை தோய்ந்தவனாகக் கண்டார்கள். 'அபூ உமைரே, உன்னைக் கவலையானவனாகக் காண்கிறேனே.. என்றார்கள்.

அப்போது அங்கிருந்த நபித்தோழர்கள், அவர் விளையாடிக் கொண்டிருந்த குருவி இறந்து விட்டது அல்லாஹ்வின் தூதரே... என்று பதிலளித்தார்கள். அதிலிருந்து அவரைக் காணும் போதெல்லாம் நகைச்சுவையாக, அபூ உமைரே, உமது நுஹைருக்கு(சின்னக் குருவி) என்னவாயிற்று என்று கேட்பவராகவும் அபூ உமைர் அதனை ரசிப்பவராகவும் காணப்பட்டார்கள்.

இப்படித்தான் நபி (ஸல்) அவர்கள் பிள்ளைகளின் பழக்க வழக்கங்களை அவதானித்து அவற்றினூடாக பிள்ளைகளை நெருங்கினார்கள். மதீனாவிலுள்ள ஒரு சிறுமி நபிகளாருடன் கைகோர்த்துக் கொண்டு அவள் விரும்பிய இடத்துக்கெல்லாம் சுற்றி வருவாள் என அனஸ் (ரழி) அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

பிள்ளைகளின் விருப்பு வெறுப்புக்களை அறிந்து கொள்வதற்கும் அவற்றை நிறைவேற்றுவதற்கும் உலகத்துக்கே தலைவராக வந்த நபி (ஸல்) அவர்கள் நேரம் ஒதுக்கிச் செயற்பட்டிருப்பதானது பிள்ளைகளை வழிதவற விடாமல் பாதுகாப்பதில் பெற்றவர்களும் பெரியவர்களும் நேரம் ஒதுக்குவதன் அவசியத்தை எடுத்துக்காட்டுகிறது.

சிறுவர்களை அன்பினால் அணுக முடியாத அல்லது அணுகத் தெரியாத பெற்றோர் அவர்களுக்கு கடுமையான தண்டனைகளை விதித்து அடக்கி வைக்கப் பார்க்கிறார்கள். பிள்ளைகள் அடக்கி வைத்த தமது உணர்வுகளை வெளிப்படுத்தக்கூடிய சந்தர்ப்பம் வரும் போது அவர் எவராக இருந்தாலும் அவர்களிடம் சரணடைந்து விடுகிறார்கள்.

ஆகவே பிள்ளைகளைக் கடிந்து கொள்வதிலும் கவனம் தேவைப்படுகிறது. அனஸ் இப்னு மாலிக் (ரழி) அவர்களை சிறுவயதிலேயே நபியவர்களுக்கு பணிவிடை செய்வதற்காக அவருடைய தாயார் நபியவர்களது வீட்டுக்கு அனுப்பி வைத்திருந்தார்கள். நபியவர்கள் ஒரு நாளாவது தன்னைக் கடிந்து கொண்டதில்லை என பின்னாட்களில் அனஸ் (ரழி) கூறுபவர்களாக இருந்தார்கள்.

பிள்ளைகளிடம் அன்பு காட்டுவதும் அவர்களுடன் இரண்டறக் கலந்து குலாவுவதும் தேவையான போது தேவையான அளவில் கடிந்து கொள்வதும் பிள்ளைகள் தவறான வழியில் செல்லாமல் இருப்பதற்கு நபி (ஸல்) அவர்கள் காட்டிய வழிகாட்டலாக இருக்கின்றன.

பிள்ளை வளர்ப்பில் நபிகளாரின் முன்மாதிரிகள் கடைப்பிடிக்கப்படாமல் பிள்ளைகளிடம் இருந்து பெற்றவர்கள் தூரமாகிச் செல்லும் போது பிள்ளைகளின் அன்புக்காக ஏங்கும் பிள்ளைகள் இறுதியில் போதைப் பொருளில் தஞ்சமடைகிறார்கள்.

தமது கரங்களாலேயே தமது பிள்ளைகளை நரகத்தில் தள்ளுகின்ற பெற்றோராக மாறுவதைப் போன்ற துர்ப்பாக்கியம் இந்த உலகில் வேறெதும் இருக்கப் போவதில்லை.

பிள்ளைகளை போதைப்பொருளில் இருந்து பாதுகாக்கும் சமூகப் பணியை ஒவ்வொரு பெற்றோரும் முன்னெடுத்தாலேயே எமது சந்ததிகளைப் போதைப்பொருளிலிருந்து பாதுகாக்க முடியும்.

# மண்ணறை வாழ்வு அர்த்தபூர்வமாக அமைந்திட...

மனிதன் மரணித்திருந்து, மீண்டும் உயிர் கொடுத்து எழுப்பப்படுவதற்கு மத்தியில் உள்ள காலகட்டமே மண்ணறை வாழ்க்கையாகும். இதற்கு 'ஃபர்ஸக்' திரை மறைவு வாழ்வுக்காலம் என்றும் கூறப்படும்.

ஒருவர் வபாத்தாகி கப்ரில் அடக்கம் செய்யப்பட்டவுடன் மலக்குமார்கள் அவரிடம் மூன்று கேள்விகளைக் கேட்பர். அவை,

உன்னுடைய இறைவன் யார்?, உன்னுடைய மார்க்கம் எது? உங்களுக்கு அனுப்பப்பட்ட இறைத் தூதரான முஹம்மது நபியைப் பற்றி நீ என்ன கருதுகிறாய்? ஆகியனவே அக்கேள்விகளாகும்.

இதற்கு முஃமின்கள் என்னுடைய இறைவன் அல்லாஹ் என்றும் என்னுடைய மார்க்கம் இஸ்லாம் என்றும் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் ஆவார்கள் என்றும் பதிலளிப்பார்கள். இறைநிராகரிப்பாளர்களால் இவ்வாறு பதிலளிக்க முடியாது. அவர்கள் கப்ரில் வேதனைக்கு உள்ளாவார்கள்.

நபி (ஸல்) அவர்கள், நீங்கள் இறந்தவர்களைப் புதைக்காமல் விட்டுவிடுவீர்களோ என்ற அச்சம் எனக்கில்லையாயின், மண்ணறையின் வேதனையை உங்களுக்குக் கேட்கச் செய்யுமாறு நான் அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்திருப்பேன்' என்று கூறியுள்ளார்கள்

**(ஆதாரம் முஸ்லிம்)**

இந்நபிமொழியின்படி மண்ணறை வாழ்வை சாதாரணமான ஒன்றாக கருத முடியாது என்பது தெளிவாகிறது.

அதேநேரம் 'மலக்குமார்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதிலளிக்கும் நல்லோர், கியாமத் நாளில் மீண்டும் உயிர் கொடுத்து எழுப்படும் வரையும் புதுமாப்பிள்ளை தூங்குவது போன்று தூங்குவார்கள்' என்றும் நபி (ஸல்) அவரகள் கூறியுள்ளார்கள்.

**(ஆதாரம் திர்மிதி )**

மற்றொரு சந்தர்ப்பத்தில் நபி (ஸல்) அவர்கள், 'ஒவ்வொரு ஆத்மாவும் மரணத்தை சுவைத்தே தீர வேண்டும். மரணம் எப்போதும் வேண்டுமானாலும் யாருக்கு வேண்டுமானாலும் வரலாம். அவ்வாறு வருவதற்கு முன் நாம் நம்மை தயார் செய்து கொள்ள வேண்டும்.

அதனால் மரணத்தருவாயில் இருந்து நடக்கும் நிகழ்வுகளை நபி (ஸல்) அவர்கள் மிக அழகிய முறையில் விளக்கியுள்ளார்கள்.

நல்லவர்கள் மரணிக்கும் போது வானவர்கள் சந்தோஷமான வார்த்தைகளை அவர்களிடம் கூறுவார்கள். மரியாதையுடன் நடத்தப்படுவார்கள். சொர்க்கம் பரிசாக கிடைக்கப்போகிறது என்ற சுபச் செய்தியை மரணிக்கும் தறுவாயில் வானவர்கள் அவர்களுக்குக் கூறுவார்கள். அதன் காரணத்தினால், தனது நிலை என்னவாகுமோ என்ற கவலை நல்லவர்களிடம் காணப்படாது அவர்கள் நிம்மதியுடனும் சந்தோஷத்துடனும் மண்ணறை வாழ்க்கைக்குள் பிரவேசிப்பார்கள்.

இது குறித்து அல் குர்ஆன், 'அமைதியுற்ற உயிரே! திருப்தியோடும் (இறைவனால்) திருப்தி கொள்ளப்பட்டும் உனது இறைவனிடம் செல்வாயாக! எனது அடியார்களில் சேர்ந்து கொள்வாயாக! எனது சொர்க்கத்தில் நுழைவாயாக! (எனக் கூறப்படும்)

(89 : 27) என்று குறிப்பிட்டுள்ளது.

'எங்கள் இறைவன் அல்லாஹ்வே' என்று கூறி பின்னர் உறுதியாக இருந்தோரிடம் வானவர்கள் இறங்கி 'அஞ்சாதீர்கள்! கவலைப்படாதீர்கள்! உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட சொர்க்கம் பற்றிய நற்செய்தியைப் பெற்றுக்கொள்ளுங்கள்!' எனக் கூறுவார்கள்.

இவ்வுலக வாழ்க்கையிலும், மறுமையிலும் நாங்கள் உங்கள் உதவியாளர்கள். நிகரற்ற அன்புடைய மன்னிப்பவனின் விருந்தாக நீங்கள் ஆசைப்படுபவை உங்களுக்குக் கிடைக்கும். நீங்கள் கேட்பதும் உங்களுக்கு உண்டு என்றும் கூறுவர்'. (41:30) என்றும் அல் குர்ஆன் குறிப்பிட்டிருக்கிறது. இவ்வாறு இன்பமான வாழ்வு உறுதி செய்யப்பட்டு விட்டால் விரைவாக தன்னை அடக்கம் செய்யுமாறு நல்லவர் விரும்புவர். ஆனால் தீயவரோ தனக்குக் கிடைத்த கொடூரமான வாழ்வை நினைத்து தன்னை மண்ணறைக்குள் அடக்கிவிட வேண்டாம் என்று அலறிக் கொண்டிருப்பர்.

நபி (ஸல்) அவர்கள், 'பிரேதம் (பெட்டியில்) வைக்கப்பட்டு அதை ஆண்கள் தங்கள் தோள்களில் தூக்கிச் செல்லும் போது, அப்பிரேதம் நல்லறங்கள் புரிந்ததாக இருப்பின், 'என்னை விரைந்து கொண்டு செல்லுங்கள்' என்று கூறும். அது நல்லறங்கள் புரியாததாக இருப்பின்,

'கைசேதமே! என்னை எங்கே கொண்டு செல்கிறீர்கள்?' என்று கூறும். இவ்வாறு கூறப்படும் சப்தத்தை மனிதனைத் தவிர அனைத்தும் செவியுறும். மனிதன் அதை செவியுற்றால் மயங்கி விழுந்து விடுவான்' என்றும் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். **(ஆதாரம் புஹாரி)**

ஆகவே அல்லாஹ்வின் கட்டளைகளுக்கும் நபி (ஸல்) அவர்களின் போதனைகளுக்கும் அமைய வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும். அதன் ஊடாகவே மண்ணறை வாழ்வு இன்பம் நிறைந்த வகையில் அர்த்தபூர்வமானதாக அமைந்திடும். அவ்வாறான வாழ்வுக்குத் தயாராகும் இடமாக இவ் உலக வாழ்வை அமைத்துக் கொள்வோம்.

# மனிதனின் செயல்களுக்கான பிரதிபலன்கள்

தொகுப்பு
அபூ ஸப்வான் உமைர் ...

மனிதன் தன் செயல்களுக்கான பிரதிபலன்களை அனுபவித்தேயாக வேண்டும். அதுதான் நீயதி. ஆனால் அந்த நீதி உலகில் மாத்திரம் முழுமை பெறுவது சாத்தியமில்லை.

மரணம் எல்லாவற்றுக்கும் முடிவன்று. அது முடிவற்ற வாழ்வின் ஆரம்பம். மரணத்திற்குப் பின்னாலுள்ள மறுமையில் தான் மனிதன் தன் செயல்களுக்குரிய முழுமையான பிரதிபலன்களை அணுவளவு கூட அநீதி இழைக்கப்படாத நிலையில் அனுபவிக்க முடியும். நன்மையோ தீமையோ அவரவர் செயற்பாடுகளுக்கு அமைய அங்கு பிரதிபலன்களை ஒவ்வொருவரும் அனுபவிப்பர்.

இது தொடர்பில் அல்குர்ஆன், 'ஒவ்வொரு மனிதனும் தன் சம்பாத்தியத்தின் பொறுப்பாளியாக இருக்கிறான்' (7435) என்றுள்ளது.

மனிதர்கள் அனைவரும் ஒரே மாதிரியானவர்கள் அல்லர். இயல்பில் பலதரப்பட்டவர்கள், சிலர் பிறவியிலேயே பார்வையற்றவர் இன்னும் சிலர் பிறவியிலேயே கை கால் உள்ளிட்ட விசேட தேவையுடையவர்கள்.

மேலும் சிலர் பலவீனர்கள் மற்றும் சிலர் புத்திசாலிகளாகவும் வேறு சிலர் மந்தபுத்தியுள்ளவர்களாகவும் இருப்பர். இன்னும் சிலர் பணக்காரர்களாகவும் சிலர் ஏழைகளாகவும் காணப்படுகின்றனர்.

பார்வையற்றவரும், உடல் ஊனமுற்றவரும், பலவீனமானவரும், ஏழைகளும் இவ்வுலகில் பலவிதமான மனவேதனைகளுடன் இருப்பர். இவர்களும் ஏனையவர்கள் போன்று அல்லாஹ்வின் படைப்பு தான். என்றாலும் இது அல்லாஹ்வின் ஏற்பாடாகும்.

இந்த உலகில் வாழும் ஒவ்வொருவருக்கும் கடமையும் பொறுப்பும் உள்ளது. ஒருவரால் சுமக்க முடியாத சுமையை அருளாளனான அல்லாஹ் எவர் மீதும் சுமத்துவதில்லை. ஏழைகளுக்கு உதவி செய்ய வேண்டிய பொறுப்பு செல்வந்தர்களுக்கு உள்ளது. இது குறித்து ஏழைகள் கேள்வி கேட்கப்பட மாட்டார்கள். மற்றவர்களுக்கு அறிவு போதிக்கும் பொறுப்பு புத்திசாலிகளுக்குள்ளது. உடல் உறுதியுள்ளவர்களுக்குரிய கடமை உடல் ஊனமுற்றவர்களுக்கு இல்லை. இந்த உலகில் வாழும் ஒவ்வொருவருக்கும் தங்கள் தகுதிக்கேற்ப அவரவர் கடமைகளைச் செய்தேயாக வேண்டும். இதிலிருந்து யாரும் விலகிச்செல்ல முடியாது. ஒருவருக்கு மறுமையில் கிடைக்கப்பெறும் நன்மை, தீமைகள் உலகில் அவர்களது செயல்களைப் பொறுத்தே அமையும்.

ஓரிடத்தில் உங்கள் கைபட்டால் அங்கு உங்கள் கையடையாளம் எவ்வாறு பதிகிறதோ, அதேபோன்று வளிமண்டலத்தில் உங்கள் உடல், மனம் பரவும். உங்கள் பேச்சுக்களும் இங்கு பதிவாகிறது. ஒவ்வொருவரதும் உயிர் மூச்சு முடிவுறும் வரை நன்மையோ தீமையோ எதுவாகவிருந்தாலும் இந்த உலகில் பதிவு செய்யப்படாத எதுவொரு செயலுமில்லை என்று அல் குர்ஆன் குறிப்பிடுகிறது. சுவர்க்கமும் நரகமும் இச்செயல்களை அடிப்படையாகக் கொண்டவையாகும். அதனால் அல் குர்ஆன் இவ்வாறு குறிப்பிடுகிறது.

'எவன் அணுவளவு நன்மை செய்திருந்தானோ அதனை அவன் கண்டு கொள்வான். மேலும் எவன் அணுவளவு தீமை செய்திருக்கிறானோ அதனையும் அவன் கண்டுகொள்வான்'.

**(அல் குர்ஆன் 997,8)**

# கடன் விடயத்தில் விழிப்புடன் செயற்படுவோம்

நபி (ஸல்) அவர்களுடைய காலத்தில் ஒருவர் மரணம் அடைந்தால் அவருக்காக நபியவர்கள் ஜனாஸா தொழுவிப்பது தான் வழக்கம். அப்படித் தொழ வைக்கும் போது முதலில், 'இந்த ஜனாஸா ஏதாவது கடன்பட்டு உள்ளதா?' என்று கேட்பார்கள். அதற்கு 'ஆம்' என்று சொன்னால் அக்கடனை அடைப்பதற்கு ஏதாவது விட்டுச் சென்று இருக்கிறாரா?' என்று கேட்பார்கள். அதற்குத் தோழர்கள் 'ஆம்' என்று சொன்னால் மட்டுமே அவருக்கு நபி (ஸல்) அவர்கள் தொழ வைப்பார்கள்.

இல்லையென்று சொன்னால் தமது தோழர்களைப் பார்த்து, 'உங்களுடைய சகோதரருடைய கடனை உங்களில் யார் ஏற்றுக் கொள்கிறீர்கள்?' என்று கேட்பார்கள். யாராவது முன் வந்தால் அதனை நிறைவேற்றுவார்கள். அப்படி யாராவது முன்வராத போது, 'உங்களுடைய சகோதரனுக்கு நீங்களே தொழ வையுங்கள்' என்று கூறி விட்டுச் சென்று விடுவார்கள்.இதை எதற்காக சொல்கிறார்கள் என்றால், ஒரு மனிதனுக்கு கடன் இருக்கும் நிலையில் அவனுக்காக துஆ செய்தால் அது அவருக்குப் பயன் தராது என்பதற்காக ஜனாஸா தொழுவிக்காமல் இருப்பார்கள். ஏனென்றால் மறுமை நாளில் கடன் என்ற பாவம் மன்னிக்கப்படாமல் வந்து நிற்கும் என்பதற்காக வேண்டியோ அல்லது கடனைப் பற்றிய எச்சரிக்கைக்காக வேண்டியோ இருக்கலாம். சலமா பின் அக்வஃ (ரழி) அவர்கள் கூறியதாவது, இறுதித் தொழுகை நடத்துவதற்காக ஒரு ஜனாஸா கொண்டு வரப்பட்டது. 'இவர் கடனாளியா?' என்று நபி (ஸல்) அவர்கள் கேட்ட போது, நபித் தோழர்கள் இல்லை என்றனர். அவருக்கு நபி (ஸல்) அவர்கள் தொழுகை நடத்தினார்கள். பிறகு மற்றொரு ஜனாஸா கொண்டு வரப்பட்டபோது, 'இவர் கடனாளியா?' என்று நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். நபித்தோழர்கள் ஆம்! என்றனர். நபி (ஸல்) அவர்கள், 'அப்படியென்றால் உங்கள் தோழருக்கு நீங்களே தொழுகை நடத்துங்கள்' என்றார்கள். அப்போது அபூகத்தாதா (ரலி) அவர்கள், 'அல்லாஹ்வின் தூதரே! இவரது கடனுக்கு நான் பொறுப்பு' என்று கூறியதும், அவருக்கு நபி (ஸல்) அவர்கள் தொழுகை நடத்தினார்கள்.

**(ஆதாரம்: புஹாரி)**

ஆகவே கடன் தொடர்பில் இஸ்லாமிய வழிகாட்டல்களுக்கு ஏற்ப முன்னெச்சரிக்கையுடனும் விழிப்புடனும் செயற்பட வேண்டும். அது ஒவ்வொருவரதும் பொறுப்பாகும்.

## ஸஹ்ரானுடன் தொடர்பிலிருந்த...

வெடித்துச் சிதறியதால் சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் இந்த வெடிப்பு வழக்கில் முதன்மை சந்தேகநபராக பதிவு செய்யப்பட்டுள்ளார்.

## விமானப்படை தளபதியுடன்...

இல. 43 வர்ண அணிவகுப்பு படைப்பிரிவின் இராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் வரவேற்கப்பட்டார்.

அதனை தொடர்ந்து இலங்கை விமானப்படை தளபதியுடனான உத்தியோக சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது விமானப்பப்படை தளபதி தனது வாழ்த்துக்களை தெரிவித்தார். மேலும் ஒன்றிணைந்த கடல்சார் கண்காணிப்பு மற்றும் கூட்டுப்பயிற்சிகள் என்பன தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. இறுதியில் இந்த சந்திப்பை நினைவுகூரும் வகையில் இரு தளபதிகளுக்கும் இடையில் நினைவுசின்னங்கள் பரிமாறப்பட்டன.

## நாட்டை சிறந்த நிலைக்கு... (03ஆம் பக்கத் தொடர்)

விருப்பமாகும். வன்முறை தற்காலிகமானது. மக்கள் ஒவ்வொரு முறையும் அதனை நிராகரித்தே வந்திருக்கின்றனர். வன்முறையிலிருந்து விலகி ஜனநாயகத்துக்கும் கலந்துரையாடலுக்கும் முன்னுரிமை அளித்து செயற்படும் நிலை சமூகத்தில் உருவாகியுள்ளது. இந் நூலின் பயனுள்ள விடயங்களை வெற்றிபெறச்செய்ய ஒன்றிணைந்து செயற்படுவோம் என்றும் பிரதமர் தெரிவித்தார். சங்கைக்குரிய எல்லே குணவங்ச தேரரினால் அனுசாசன உரை நிகழ்த்தப்பட்டதுடன், சங்கைக்குரிய பாஹியங்கல ஆனந்த சாகர தேரர், அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## மின்சார சபைக்கு நவம்பரில்...

பெற்றுக் கொண்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். மின் கட்டண திருத்தம் மற்றும் மின்சார சபை மறுசீரமைப்பு தொடர்பில் மின்சாரசபை தொழிற்சங்கங்கள் சிலவற்றுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தையின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர், மின்னுற்பத்தி நிலையங்களை செயற்படுத்துவதற்கு அடுத்த மாதத்தில் தேவையான டீசல் மற்றும் நெப்தாரக எரிபொருட்களை கொள்வனவுசெய்வதற்கு 35 பில்லியன் ரூபா தேவைப்படுவதாகவும் அதே வேளை, அனல் மின் நிலைய உற்பத்தி நடவடிக்கைகளுக்காக நிலக்கரியை கொள்வனவு செய்வதற்கு மேலும் 38. 45 பில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விசேட பேச்சு வார்த்தையின் போது மின்சார சபையின் செலவினங்கள், முகாமைத்துவம் மற்றும் ஏனைய சிக்கல்கள் தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## 5,000 போதை மாத்திரைகளுடன்...

கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்.குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவுக்கு கிடைத்த இரகசியத் தகவலின்படி மேற்கொண்ட சோதனையின்போது இந்த இளைஞன் கைது செய்யப்பட்டார்.

பாடசாலை மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களை இலக்கு வைத்து, போதைப் பொருள் வியாபாரத்தை முன்னெடுத்து வந்ததாக கைது செய்யப்பட்டவரிடம் மேற்கோண்ட ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. கைது செய்யப்பட்ட இளைஞனை யாழ்.பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக தெரிவித்த பொலிஸார், சந்தேக நபரை யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

## மத்தளவிலிருந்து மீண்டும்...

விமான நிலையத்தை வந்தடைந்ததாக அந்த விமான நிலைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

2023 ஆம் ஆண்டு மே 14ஆம் திகதிவரை ரஷ்யாவின் ரெட்விங்ஸ் விமான சேவை ரஷ்யாவுக்கும் இலங்கையில் மத்தள விமான நிலையத்திற்குமிடையில் நடைபெறுமென்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அசூர் மற்றும் எரொப்ளோட் விமான சேவை நிறுவனங்கள் ஏற்கனவே இலங்கைக்கும் ரஷ்யாவுக்குமிடையில் நேரடி விமான சேவைகளை ஆரம்பித்துள்ளன. அந்த விமான சேவைகள் நடைபெற்றுவரும் நிலையிலேயே ரெட்வின்ங்ஸ் விமானசேவை நிறுவனமும் தமது விமான சேவையை ஆரம்பித்துள்ளது. அதன்படி 2 நேரடி விமானப் பயணங்களை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப் பட்டுள்ளதாக அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## பிறக்கப் போகும் 2023 ஆம் ஆண்டு...

நிபுணர் ஸ்ரீமதி பாரதி ஸ்ரீதர். 12 ராசிகளுக்கான பலன்கள் எதிர்வரும் 01 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை உங்கள் வாரமஞ்சரியில் வெளிவருகிறன. உங்கள் பிரதிகளுக்கு எங்கள் முகவர்களிடம் முன் கூட்டியே பதிவு செய்யுங்கள்.

தமிழ் நாட்டின் பிரபல ஜோதிட நிபுணர் ஸ்ரீமதி பாரதி ஸ்ரீதர் இந்திய தொலைக்காட்சிகள், வானொலி நிகழ்ச்சிகளில் ஜோதிடம் தொடர்பான பல்வேறு நிழ்ச்சிகளில் பங்கேற்றுள்ளார்.

தினமும் தமிழ் நாட்டின் 'இன்று நன்று' காலை 7.45 மணிக்கும் ஸ்ரீ சங்கரா தொலைகாட்சியில் காலை 6.45 மணிக்கு சுபதினம் நிகழ்ச்சியிலும் மெகா தொலைக்காட்சியில் பகல் 12.30 சுபகிரகம் என்ற நிகழ்ச்சியிலும் பல யூ டியூப் அலைவரிசைகளிலும் சக்தி விகடன், ஆன்மீக உலா, ஆன்மீக பரிகாரம், குரு போன்ற நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றுவருகிறார்.

## மாவையின் தலைமையை...

தமிழ் மக்களின் ஒற்றுமைக்கு எதிராகச் செயற்படுகின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தமிழ்த் தேசியக் கட்சிகளை ஓரணியில் திரட்டும் முயற்சி குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

தமிழ்த் தரப்புகளுக்குள் பிரிவினை இருப்பதால்தான் சிங்கள அரசுகளால் எம்மை ஏமாற்ற முடிந்தது. நமக்கு ஒற்றுமை இருக்கின்றது என்பதைக் கண்டால் அவர்களின் அணுகுமுறையில் மாற்றம் இருக்கும் என நம்புகின்றோம்.

இப்போதும் தமிழ்த் தரப்பில் சிலர் தான் தனித்துப் போக வேண்டும் என கூறுகின்றார்கள். ஆனால் தமிழ்த் தேசியக் கட்சிகளை இயன்ற வரை ஒன்றிணைத்துச் செயற்படவே நாம் முனைகின்றோம்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் செயற்குழுவில் எடுக்கப்பட்டதாகக் கூறப்பட்ட முடிவுகள் பற்றி செய்திகள் வெளியாகின.

அந்தச் செயற்குழுவில் உள்ள ஒன்பது பேரில் பெரும்பான்மையானவர்கள் மாவை சேனாதிராஜாவுக்கு எதிரானவர்கள். ஆனால் ஜனவரியில் கொழும்பில் தமிழ்க் கட்சிகள் சந்திப்பு உள்ளது என்று மாவை சொன்னதாகவும் செய்தி வந்தது. இது முரண்பாட்டை ஏற்படுத்தக் கூடும். இந்த முரண்பாடு ஏற்படுவதற்கு சிலரது சுயநல சிந்தனைகள்தான் காரணம்.

மக்களுக்காக நாங்கள் செயற்பட ஆரம்பித்தால் சுயநல சிந்தனைகளை கைவிட்டு மக்கள் சார்பில்தான் சிந்திக்க வேண்டும் எனவும் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

## 90 சந்தேக...

அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் பல பிரிவுகளின் கீழ் விசாரணை இடம்பெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தினேஷ் ஷாஃப்டர் மரணித்தமை தொடர்பில், மனித கொலை மற்றும் திட்டமிடப்பட்ட குற்றச்செயல்களுக்கான விசாரணை பிரிவும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தொழிலதிபர் தினேஷ் ஷாஃப்டரின் மரணம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் அதிகாரிகள் மற்றும் பொலிஸ் மாஅதிபர் சீ.டீ விக்ரமரத்ன ஆகியோருக்கிடையே நேற்று முன்தினம் சந்திப்பொன்று இடம்பெற்றது.

இதன்போது, மரணம் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணை மற்றும் அதன் முன்னேற்றம் தொடர்பில் பொலிஸ் மாஅதிபர் அதிகாரிகளிடம் விளக்கம் கோரியுள்ளார்.

அத்துடன் விசாரணை தொடர்பில் முன்னெடுக்கப்பட வேண்டிய எதிர்கால செயற்பாடுகள் குறித்து பொலிஸ் மாஅதிபரால் அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

## த ஹிந்துஸ்தான் டைம்ஸ் தலைவியுடன் உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட சந்திப்பு



இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட, இந்திய த ஹிந்துஸ்தான் டைம்ஸ் ஊடக வலையமைப்பின் தலைவி மற்றும் ஆசிரியர் பீட பணிப்பாளர் சோபனா ஹார்தியாவுடன் விசேட கலந்துரையாடலொன்றை நடத்தியுள்ளார். அதன் போது பிராந்திய ஊடக கலாசாரத்தின் எதிர்காலம் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது. 1924 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட த ஹிந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகையானது இந்தியாவின் முக்கிய ஊடக வலையமைப்பு என்பதுடன் முன்னணியில் திகழும் நிறுவனமும் ஆகும்.

## சுமார் ரூ.04 கோடி...

பொதியை எடுத்து வீட்டுக்கு கொண்டு சென்று மறைத்து வைத்துள்ளார். திருடப்பட்ட விவகாரம் வெளியாகிவிடுமென்ற அச்சத்தில் பஸ்ஸிலிருந்த பாதுகாப்பு கேமரா அமைப்பையும் அகற்றியுள்ளார்.

திருட்டுச் சம்பவம் தொடர்பான விசாரணைகளின் போது பேருவளை நகரில் பஸ்ஸை நிறுத்திய போது, முதலில் இரத்தினக் கற்கள் அடங்கிய பொதியை திருடிய சந்தேகநபர் பீதியடைந்து பஸ்ஸை விட்டு இறங்கி அருகிலுள்ள வைத்திய நிலையத்துக்கு திருடப்பட்ட பொதியின்றி ஓடுவதை அவதானித்ததாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். அதன்படி, பஸ்ஸின் நடத்துனர் மீது விசாரணை அதிகாரிகள் சந்தேகமடைந்து விசாரணை நடத்தினர். சந்தேகநபரிடம் நீண்ட நேரம் விசாரணை நடத்தியதில், மறைத்து வைக்கப்பட்டிருந்த பொதியை கண்டுபிடித்து இரத்தினக் கற்களை மீட்டனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட களுத்துறை பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் 48 மற்றும் 36 வயதுடைய ஊறுபொக்க மற்றும் பயாகல பிரதேசத்தை சேர்ந்தவர்களென தெரிவிக்கப்பட்டுள்ளது.

## IMFஇன் முதல் கட்ட நிதியுதவி...

முக்கியமான நாடுகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருகின்றன. அந்தப் பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக அமைந்துள்ளன. அந்தவகையில் சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்கவுள்ள நிதியுதவியின் முதற்கட்டத் தொகை அடுத்த வருட ஆரம்பத்தில் கிடைக்கவுள்ளது.

இந்த வருடம் டிசம்பர் மாதத்தில் மேற்படி முதற் கட்டத் தொகை கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டிருந்த போதும் அது அடுத்தவருடத்திற்கு ஒத்திப்போடப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை தெரிவித்த அவர், தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமானால் அதற்கு அரசாங்கம் தயாராகவே உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## மாகாணங்களின் அதிகாரங்கள்...

கட்சிகளுடனான கலந்துரையாடல் தொடர்பாக நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நடைமுறைச் சாத்தியமான வழிமுறையை ஏற்றுகொண்டு வெளிப்படைத் தன்மையுடன் செயற்படக் கூடிய தமிழ் தரப்புக்களுடன் இணைந்து, தமிழ் மக்களின் அரசியல் அபிலாசை தொடர்பான விடயத்தில் செயற்படுவதற்கு தயாராக இருக்கின்றோம் என தெரிவித்தார்.

குறித்த கலந்துரையாடலில் அமைச்சரவை உப குழுவின் பிரதிநிதி என்ற அடிப்படையிலும் அரசியல் கட்சியின் தலைவர் என்ற அடிப்படையிலும் இரட்டை வகிபாகத்தினை கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

13 ஆம் திருத்தச் சட்டம் உருவாக்கப்பட்ட போது மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் மீளவும் கையளிக்கப்பட வேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் முன்வைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். அத்துடன், 13 ஆவது திருத்தச் சட்டத்தினை நடைமுறைப் படுத்துவதில் இருந்து ஆரம்பித்து முன்னோக்கி நகர வேண்டும் என்று கடந்த 35 வருடங்களாக ஈ.பி.டி.பி. வலியுறுத்தி வருகின்ற வழிமுறையையே தற்போது ஏனைய தரப்புக்களும் வலியுறுத்தி வருகின்றமை தன்னுடைய அரசியல் பயணத்திற்கு கிடைத்த வெற்றி எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## உயிர் காப்பு மருந்துகளுக்கு...

அத்தியாவசிய மருந்து வகைகள் கையிருப்பில் உள்ளன. எவ்வாறெனினும், 384 வகையான அத்தியாவசிய மருந்துப் பொருட்களில் 153 வகையான மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவி வருகிறது.

இந்த வகை மருந்துகளை விரைவில் இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

அரிசி, சீனி, பருப்பு இறக்குமதி செய்வது போன்று மருந்து இறக்குமதி செய்ய முடியாது. உரிய நியமங்கள் பின்பற்றப்பட வேண்டும்.

அமைச்சரவையின் அனுமதி பெற்றுக் கொண்டதன் பின்னர் இந்திய கடன் அடிப்படையில் மருந்து வகைகளை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது என தெரிவித்த அமைச்சர், மருந்துப் பொருள் இறக்குமதி தொடர்பில் சில ஊடகங்கள் பிழையான தகவல்களை வெளியிட்டு வருவதாகவும் குற்றம் சுமத்தினார்.

## த.மு.கூ அசமந்த போக்கில்...

என தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது, " ஐக்கிய மக்கள் சக்தியுடன், பல சுற்று பேச்சுகளின் பின்னர் முக்கிய சில விடயங்களை முன்வைத்தே கூட்டணி அமைக்கப்பட்டது. இதில், ஐக்கிய மக்கள் சக்திக்கு கிடைக்கும் தேசியப் பட்டியல் ஆசனங்களில் , தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு கட்டாயம் ஒரு இடம் ஒதுக்கப்படும் என்ற உறுதிமொழியும் வழங்கப்பட்டிருந்தது.

பொதுத்தேர்தலில் தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு அமோக வெற்றி கிடைத்தது. நுவரெலியா, கண்டி, பதுளை மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களில் பிரதிநிதித்துவம் கிடைக்கப்பெற்றது.

அதேபோல இரத்தினபுரி, கேகாலை மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களிலும் கூட்டணியின் வேட்பாளர்கள் குறிப்பிட்டுக்கூறக் கூடியளவுக்கு வாக்குகளைப் பெற்றனர். எனவே, தேசியப் பட்டியலை பெறுவதில் தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு எல்லா விதத்திலும் உரிமை இருந்தது. மக்கள் ஆதரவும் கிட்டியது.

ஆனால் தேர்தலின் பின்னர், ஐக்கிய மக்கள் சக்தி எமக்கு வழங்கிய வாக்குறுதியை மீறியது. மக்கள் நலன்கருதி அமைதி காத்தோம். தேசியப்பட்டியலொன்று வெற்றிடமாகும் சந்தர்ப்பத்தில் அந்த வாய்ப்பு வழங்கப்படும் எனவும் கூறப்பட்டது. அதுவும் நடப்பதாக தெரியவில்லை. கூட்டணி என்ற போர்வையில் சரணாகதி அரசியல் நடத்துவதற்கு நான் தயாரில்லை. மக்கள் அதற்காக எனக்கு வாக்களிக்கவும் இல்லை.

தேசியப் பட்டியலை வென்றெடுப்பதில் தமிழ் முற்போக்கு கூட்டணி ஆமை வேகத்தில் செயற்படுவதை அனுமதிக்க முடியாது. மக்களும் அதிருப்தியுடனேயே உள்ளனர்." என தெரிவித்துள்ளார்.

## இன்றும் நாளையும்...

மாவட்டங்களிலும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருவதையடுத்து இந்த டெங்கு ஒழிப்பு தினங்கள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. தற்போதைய சூழ்நிலையில் தினமும் 200 க்கும் 300க்கும்இடைப்பட்ட டெங்கு நோயாளர்கள் ஆஸ்பத்திரிகளுக்கு சிகிச்சைக்காக வருகை தருவதாகவும் டிசம்பர் 26ஆம் திகதி வரை நாடு முழுவதும் 75,434 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது. இன்றும் நாளையும் விசேட டெங்கு ஒழிப்பு தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அனைவரும் தமது வீடுகள் சுற்றாடலில் நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களைக் கண்டறிந்து துப்புரவேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் சுகாதார அமைச்சு கேட்டுக்கொண்டுள்ளது.

## 5 நாட்டு பயணிகளுக்கு...

அதிகரித்துள்ளதால் அங்கிருந்து இந்தியா வரும் பயணிகளுக்கு, விமான நிலையங்களில் கொரோனா பரிசோதனையை அடுத்த வாரம் முதல் கட்டாயமாக்க இந்திய மத்திய அரசு முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த இரண்டு நாட்களில் வெளிநாடுகளிலிருந்து இந்தியா திரும்பிய ஆறாயிரத்துக்கும் அதிகமானோரை பரிசோதித்ததில் இதுவரை 39 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

## அமெரிக்க பிரஜை ஒருவர்...

மற்றும் மெகசின் ஒன்றும் கைப்பற்றப்பட்டது. சந்தேகநபரான அமெரிக்க பிரஜை, பெண்ணொருவருடன் நேற்றிரவு 8.25 மணிக்கு சென்னை செல்ல விமான நிலையத்திற்கு வந்துள்ளார். விமான நிலையத்தின் புறப்படும் முனையத்தில் உள்ள ஸ்கிரீனிங் இயந்திரம் வழியாகச் சென்றபோது, குறித்த நபரிடம் மேற்படி வெடிபொருட்கள் இருப்பது கண்டறியப்பட்டது.

இதனையடுத்து, அவர் விமானப் படை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். சந்தேகத்திற்குரிய பயணி மேலதிக விசாரணைகளுக்காக விமான நிலைய பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், அவருடன் வந்த பெண்ணை நாட்டை விட்டு வெளியேறுவதற்கு அனுமதி வழங்கியதாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## சீன தூதரக அதிகாரிகள்...

பிரதித் தூதர் ஹூ வெய், சீனத் தூதரக அரசியல் விவகார அதிகாரி லியோ சொங் உள்ளிட்ட குழுவினர் அங்கு சென்று பார்வையிட்டனர்.

இந்த விஜயத்தின் போது, அவர்கள், கோட்டை தொடர்பான விடயங்களை அங்கிருந்தவர்களிடம் கேட்டறிந்து கொண்டனர். குறித்த விஜயம் சுற்றுலா ரீதியானது என தெரிவிக்கப்பட்டாலும் கோட்டைக்கு பொறுப்பான அலுவலர்களோ உத்தியோகஸ்தர்களோ அங்கு பிரசன்னமாகி இருக்கவில்லை.

## 30,000 அரசாங்க ஊழியர்கள்...

மாகாண சபைகள், உள்ளூராட்சி சபை இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார். எவ்வாறெனினும் ஒரே தடவையில் இந்தளவு பெருமளவிலான அரசாங்க ஊழியர் ஓய்வு பெற்று செல்வதால் அரச சேவையில் எத்தகைய வீழ்ச்சியும் ஏற்படாதென்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அரசாங்க ஊழியர் ஓய்வு பெறும் வயதெல்லையை கடந்த அரசாங்கம் 65 என அறிவித்த போதும் தற்போதைய அரசாங்கம் அந்த வயதெல்லையை 60 ஆக அறிவித்துள்ளதையடுத்து இந்த வருடம் 31ஆம் திகதியுடன் 30,000க்கும் மேற்பட்ட அரசாங்க ஊழியர்கள் ஓய்வு பெறவுள்ளனர்.

## அக்கறைப்பற்று...

தப்பியோடும் காட்சி பதிவாகியிருந்தது. இச் சம்பவம் தொடர்பாக விசாரணையை மேற்கொள்வதற்கு விசேட பொலிஸ் குழு ஒன்று நியமிக்கப்பட்டு விசாரணை மேற்கொண்டு வந்தபோது சந்தேகத்தின் பேரில் அக்கரைப்பற்று கோளாவில் பிரதேசத்தை சேர்ந்த 18,19 மற்றும் 24 வயதுடைய 03 சந்தேக நபர்கள் புதன்கிழமை (28) கல்முனை பெரிய நீலாவனை பிரதேசத்தில் மறைந்திருந்த வேளையில் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கு, அக்கரைப்பற்று பொலிஸார் நீதிமன்றத்தில் அனுமதி கோரியிருந்தனர்.

இதனையடுத்து சந்தேக நபர்களை எதிர்வரும் ஜனவரி மாதம் 04ம் திகதி வரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணை செய்யுமாறு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் கே. சமீம் உத்தரவிட்டுள்ளார்.

இந்த இளைஞர்கள் போதைக்கு அடிமையானவர்களென பொலிஸார் தெரிவித்தனர். இவர்களை தடுத்து வைத்து விசாரணைக்குட்படுத்திய பின்னரே தீ வைப்புக்கான காரணம் தெரியவருமென பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, சந்தேகநபர்கள் மற்றுமொருவரின் அறிவுறுத்தலின் பேரில் இந்த நீதிமன்ற வளாகத்துக்கு தீ வைத்துள்ளதாக அனுமானிக்க முடிவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்,

சந்தேகநபர்கள் மூவருக்கும் அக்கரைப்பற்று நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## 100 நாடுகளின் கொடிகள் அடையாளம்...

ஒன்றை படைத்துள்ளார். இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

"100 உலக நாடுகளின் கொடிகளை அடையாளம் காண்பதில் வேகமானவர்" என்ற உலக சாதனையை அடைந்துள்ளார்.

100 உலக நாடுகளின் கொடிகளின் பெயர்களை 1 நிமிடம் 18 வினாடிகளில் கூறி, 1 நிமிடம் 50 வினாடிகளில் அடையாளம் கண்ட முந்தைய சாதனையை முறியடித்து, சர்வதேச சாதனை புத்தகத்தில் புதிய உலக சாதனை படைத்துள்ளார்.

இதன்மூலம் ஏற்கனவே நிகழ்த்திய உலக சாதனையை முறியடித்த அனீக் அஹமட், இலங்கை வரலாற்றில் புதிய உலக சாதனை படைத்த முதலாவது சிறுவனாவார்.

பிறந்ததிலிருந்தே அதிக நினைவாற்றல், மனனசக்தி உள்ள இவர் , ஒரு விடயத்தை , புலக்காட்சியை மிக விரைவில் நினைவில் வைத்திருக்ககூடியவராகவும், அதை பல நாட்களின் பின் அப்படியே சொல்லக்கூடிய திறன் உடையவராகவும் திகழ்கின்றார்.

அது மட்டுமல்லாது 20 ற்கு மேற்பட்ட அல்குர்ஆன் சூறாக்களை மனனமிட்டிருப்பதோடு , 100 ற்கு மேற்பட்ட இஸ்லாமிய கேள்விகளுக்கு பதில் சொல்லக்கூடியவராகவும் திறமை கொண்டு திகழ்கிறார். அது மட்டுமல்லாது வாகனங்களின் பெயர்கள், ஆங்கில சொற்களுக்கான தமிழ் பதங்கள் உடல் உறுப்புக்களின் பகுதிகள், மாதங்கள், இஸ்லாமிய துஆக்கள் என்பவற்றை மனனம் செய்தவராகவும் காணப்படுகிறார்.

மேலும் அங்கீகரிக்கப்பட்ட 197 உலக நாடுகளின் கொடிகளை 2 நிமிடத்தில் கூறி அடுத்த உலக சாதனையை படைக்கவும் தயாராகி வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவரின் இத்திறமையை அங்கீகரித்த சர்வதேச சாதனை புத்தகம் இவருக்கு சான்றிதழ், பதக்கம், இலட்சினை என்பனவற்றை வழங்கியுள்ளது.

இதை international book of record தனது சமூக வலைத்தளங்கள் அனைத்திலும் வெளியிட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த சிறுவனுக்கு பலரும் தமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்து வருகின்றனர்.

## 09 இலங்கையர்கள் குறித்து...

இதன்படி, இலங்கை குற்றப்புலனாய்வுத் துறையின் குழு ஒன்று விரைவில் இந்தியா செல்லவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னதாக இந்த 9 பேர் தொடர்பிலும், நாட்டின் அனைத்து பொலிஸ் நிலையங்களில் இருந்தும் தகவல்கள் கோரப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்களில் இருவரான சி.குணசேகரன், பூங்கொடி கண்ணா ஆகியோர் துபாய், பாகிஸ்தான் மற்றும் ஈரானுக்கு அடிக்கடி பயணம் செய்த பாகிஸ்தானை தளமாகக் கொண்ட போதைப் பொருள்கடத்தல்காரரானஹாஜிசலீமுடன் தொடர்பில் இருந்ததாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இவர்களும் சலீமும் இலங்கையிலும் இந்தியாவிலும் விடுதலைப் புலிகளை புத்துயிர் பெறச் செய்ததாக இந்திய புலனாய்வுத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

கிம்புலா எலே குணா என்ற சி.குணசேகரன், பூங்கொடி கண்ணா என்ற புஸ்பராஜா, முகமது அஸ்வின், கொட்ட காமினி என்ற சுனில் காமினி பொன்சேகா, பம்மா என்ற ஸ்டான்லி கென்னடி பெர்னாண்டோ, அதுருகிரிய லடியா, வெல்லே சுரங்கா, மொஹமட் அஸ்மின், திலீபன் ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இந்த ஒன்பது இலங்கையர்களும் தொடர் குற்றங்களுக்காக இலங்கை பொலிஸாரால் தேடப்பட்டு வருகின்றனர்.

அதுருகிரியே லடியா என அழைக்கப்படும் நளின் சத்துரங்க, பாதாள உலக உறுப்பினர் சமயன் கொலையின் பிரதான சந்தேக நபர்களில் ஒருவராவார். கிம்புலா எலே குணா எனப்படும் சி.குணசேகரன் சுனில் மெண்டிஸின் கொலை மற்றும் போதைப்பொருள் கடத்தல் தொடர்பாக தேடப்பட்டு வருகிறார்.கொழும்பு வடக்கில் இடம்பெற்ற 10 தனியான கொலைகளில் ஈடுபட்டமைக்காக பூங்கொடி கண்ணா என அழைக்கப்படும் புஷ்பராஜ் தேடப்பட்டு வருகிறார்.வெல்லே சுரங்கா நாட்டில் 10 கொலைகள் தொடர்பாக தேடப்பட்டு வருகிறார்.

கொட்ட காமினி என்றழைக்கப்படும் சுனில் காமினி, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பாளராக இருந்த முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் பிரியந்த ஜயக்கொடியை படுகொலை செய்ய சதி செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளார். தொழில்முறை துப்பாக்கி சுடும் வீரரான பம்மா என்றழைக்கப்படும் ஸ்டான்லி கென்னடி பெர்னாண்டோ பல குற்றங்களுக்காக இலங்கை பொலிஸாரால் தேடப்பட்டு வருகிறார்.

எனினும் மொஹமது அஸ்மின், மொஹமது அஸ்வின் மற்றும் திலீபன் ஆகியோர் மீதான குற்றச்சாட்டுக்கள் குறித்து தகவல்கள் வெளியாகவில்லை.

# நகர்வலம்



ஆங்கில மொழித்தின போட்டியில்

## ஹம்பாந்தோட்டை ஸாஹிரா மாணவி இரண்டாமிடம்

பாடசாலை சமூகம் பாராட்டு

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**



ஹம்பாந்தோட்டை ஸாஹிரா தேசிய பாடசாலையில் தரம் பத்தில் கல்வி கற்கும் மாணவி பாத்திமா நஸ்ரா மௌலானா இவ் வருடம் நடைபெற்ற அகில இலங்கை ஆங்கில மொழித்தின கையெழுத்துப் போட்டியில் தேசிய ரீதியில் இரண்டாவது இடத்தினை பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

இம்மாணவி பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற போட்டியில் வெற்றிபெற்று கோட்ட மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுஅதில் முதலாவது இடத்தினை பெற்று வலய மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டு அதில் இரண்டாம் இடத்தினைப் பெற்றார். அதன்பின், தென் மாகாண போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டு அதில் மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தினைப் பெற்று அகில இலங்கை போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவர், ஹம்பாந்தோட்டை இக்ரா ஆரம்ப வித்தியாலயத்தின் பழைய மாணவியாவார்.

தென் மாகாணம் முழுவதும்


## பாரிய குற்றங்களைத் தடுப்பதற்கு 69 பொலிஸ் குழுக்கள் கடமையில்

தென் மாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர்

**வெலிகம தினகரன் நிருபர்**

பாரிய குற்றங்களைத் தடுப்பதற்காக தென் மாகாணம் முழுவதும் ஆயுதம் தரித்த 69 பொலிஸ் குழுக்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தென் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

இவ்வாண்டு (2022) இதுகால வரை தென் மாகாணத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் 15 பேர் உயிரிழந்துள்ளதாகவும், அச்சம்பவங்கள் தொடர்பாக 18 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பிரதிப்பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன மேலும் தெரிவித்தார்.



குற்றத்தடுப்பு நடவடிக்கைகளுக்காக காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் தனித்தனியாக குற்றத்தடுப்புப் பிரிவுகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ள நிலையில், அப்பிரிவுகள் ஊடாக குற்றங்களைத் தடுக்க விஷேட விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன. இந்நிலையில் இறுதியாக தென் மாகாணத்தில் கடந்த 23ஆம் திகதி எல்பிட்டிய – யக்கடுவ பகுதியில் 26 வயது இளைஞன் ஒருவன் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருந்தது. அச்சம்பவம் தொடர்பாக காலி குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் விசாரணைகளில் மேற்கொண்டு வருவதாக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மேலும் தெரிவித்தார்.

## நீர்த்தாங்கியிலிருந்து ஆணின் சடலம் மீட்பு

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

கெக்கிராவ மலவவெவ பகுதியிலுள்ள நீர்த்தாங்கியொன்றிலிருந்து ஆண் ஒருவருடைய சடலத்தினை (29) பொலிஸார் மீட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய நேற்று காலை சம்பவ இடத்திற்கு சென்ற கெக்கிராவ பொலிஸார், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு சொந்தமான கைவிடப்பட்ட நிலையில் காணப்படும் நீர்த் தாங்கியிலிருந்து உயிரிழந்திருந்த நபர் ஒருவருடைய சடலத்தினை பிரதேச வாசிகளது உதவியுடன் மீட்டுள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் யார் என்பது இதுவரையில் அடையாளம் காணப்படவில்லை. சம்பவ இடத்திற்கு வருகை தந்த கெக்கிராவ நீதிமன்ற நீதவான் ஆரம்பகட்ட விசாரணைகளை மேற்கொண்ட பின் பிரேத பரிசோதனைக்காக அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## நத்தார் தினத்தில் மாத்தறை சிறையிலிருந்து மூன்று பேர் விடுதலை

**வெலிகம தினகரன் நிருபர்**

நத்தார் பண்டிகை தினமான (25) மாத்தறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 03 கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் நாடளாவிய ரீதியில் 309 கைதிகள் விடுதலை செய்யப்பட்ட நிலையில் மாத்தறை சிறைச்சாலையிலிருந்து 03 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சிறு குற்றச்செயல்களுக்காக இவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். மாத்தறை சிறைச்சாலை அத்தியட்சகர் எச்.ஜீ. ஸமன் பிரியதர்ஷன மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள் குறித்த கைதிகளுக்கு ஆலோசனைகள் வழங்கிவழி அனுப்பி வைத்தனர்.

## 110 வருட நிறைவில் சாரணர் இயக்கம்



இலங்கை சாரணர் இயக்கத்துக்கு 110 வருடங்கள் மற்றும் மாத்தறை மாவட்ட சாரணர் சங்கத்துக்கு 104 வருடங்கள் பூர்த்தியாவதையிட்டு நடைப்பவனி உள்ளிட்ட பல நிகழ்ச்சிகள் அண்மையில் மாத்தறை சென்ட் தோமஸ் வித்தியாலயத்தில் நடைபெற்றது. பிரதம அதிதியாக பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் தாரிக் ஆரிபுல் இஸ்லாம், இலங்கை சாரணர் சங்க தலைமை ஆணையாளர் சட்டத்தரணி ஜனபிரித் பெர்ணாந்து ஆகியோர் கலந்து கொண்டனர். அன்றைய தினம் மாவட்டத்தின் அனைத்து சாரண சிறுவர் சிறுமியர்களும் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர். நிகழ்வில் மாத்தறை மாவட்ட சாரணர் சங்கத் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரன, மாவட்ட ஆணையாளர் இந்திக்க பிரசன்ன உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

கிராம அதிகாரி கொலை;

## முன்னாள் புகையிரத அதிபர் உள்ளிட்ட சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

**அநுராதபுரம் மாவட்ட குறூப் நிருபர்**

கிராம அதிகாரி ஒருவரை கூரிய ஆயுதம் ஒன்றினால் குத்தியும் வெட்டியும் கொலை செய்த குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் பிரதான சந்தேக நபரான முன்னாள் புகையிரத அதிபர் மற்றும் அவரது மாமனார் உள்ளிட்ட சந்தேக நபர்களை தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்குமாறு மஹவ பிரதான நீதவான் இரவீந்திர பண்டார உத்தரவிட்டார்.

இந்த வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்துமாறும் மஹவ தலைமையகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் சஞ்சீவ பண்டாரநாயக்கவுக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

அம்பன்பொல தெற்கு பகுதி கிராம அதிகாரியை குத்தியும் வெட்டியும் கொலை செய்த குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள கல்கமுவ புகையிரத நிலைய முன்னாள் அதிபர் கே.கே. சானக்க திலான் குமார சந்திரசிரி (வயது – 27), ஜே.கே.டெக்சி டெனிஸ் (வயது – 37), ஜீ. டப்ளியூ. சம்பத் இந்துரங்க (வயது – 21), ருமேஸ் மல்வில தென்னகோன் (வயது – 59) டப்ளியூ. எம். டிக்கிரி குமாரிஹாமி ஆகியோரே தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்கப்பட்டவர்களாவர்.

2021 ஒக்டோபர் மாதம் 4ஆம் திகதி அநுராதபுரம் பாதெனிய பிரதான வீதியில் அம்பன்பொல, உடங்காவ பிரதேசத்தில் வைத்து கிராம அதிகாரி குத்தியும் வெட்டியும் கொலை செய்யப்பட்டார். அம்பன்பொல பிரதேச செயலாளர் காரியாலயத்தில் நடைபெறவிருந்த கூட்டமொன்றுக்காக சென்று கொண்டிருந்த போதே இச்சம்பவம் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. சந்தேக நபர்கள் சார்பாக சட்டத்தரணி உதய ராஜக்ஷ ஆஜராகி இருந்தார்.

குவைத் நாட்டின் நிதியொதுக்கீட்டில்

## பமுனுகம பிரதேசத்திற்கு குடிநீர் சுத்திகரிப்பு வசதி

பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான் அல் ஹிமா பணிப்பாளருக்கு நன்றி

**கெக்கிராவ குறூப் நிருபர்**

குவைட் நாட்டின் நிதியொதுக்கீட்டில், அல் ஹிமா இஸ்லாமிய சேவைகள் அமைப்பின் உதவியுடன் அநுராதபுரம் பமுனுகம பிரதேசத்தில் அமைக்கப்பட்ட குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் மக்கள் பாவனைக்காக (28) உத்தியோகப்பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான் அல் ஹிமா அமைப்பின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் நூறுல்லாஹ் (நளீமி) அவர்களிடம் விடுத்த வேண்டுகோளின் பேரிலேயே மேற்படி குடிநீர் திட்டம் சுமார் 10 இலட்சம் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான், ஹிமா பணிப்பாளர் அஷ்ஷெய்க் நூறுல்லாஹ், பமுனுகம பெரிய பள்ளிவாசல் தலைவர், நலன்விரும்பிகள், ஊர்வாசிகள் என பலரும்கலந்து கொண்டனர். இதன்மூலமாக மேற்படி பமுனுகம பிரதேசத்தில் வசிக்கும் 450 இற்கும் அதிகமான குடும்பங்கள் பயன்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புதிய பொலிஸ் அதிகாரிகள் நியமனம்

**பாணந்துறை மத்திய குறூப் நிருபர்**

பாணந்துறை பொலிஸ் பிரிவைச் சேர்ந்த பாணந்துறை தெற்கு மற்றும் பண்டாரகம பொலிஸ் நிலையங்களுக்கு புதிய பொலிஸ் பொறுப்பதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

பண்டாரகம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக நியமனம் பெற்றுள்ள பிரதம பொலிஸ் பரிசோதகர் டீ. இந்திக சில்வா , பாணந்துறை தெற்கு பொலிஸ் நிலையத்தின் தலைமையக பொலிஸ் இன்ஸ்பெக்டராக நியமனம் பெற்றுள்ள யூ,பீ. நாவுல்ல ஆகியோர் சமய வழிபாடுகளுடன் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

திகதி 28.12.2022 புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB
மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4983
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 25,425,446.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
ஆங்கில எழுத்து X வெற்றி இலக்கங்கள் 3 1 9 8 0 0
தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 1013
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,712,140.00
A 02 03 46 49
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 139,827,476.00
கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3225
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.4,851,380.00
ஆங்கில எழுத்து Y வெற்றி இலக்கங்கள் 01 21 23 79
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.66,047,893.20
ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1438
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,249,240.00
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள் 2 7 0 0 7 3
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.12,683,552.40
ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 292
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,965,420.00
இலக்கினம் விருச்சிகம் வெற்றி இலக்கங்கள் 12 20 33 37
விசேட இலக்கினம் விருச்சிகம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,695,923.80
கோடி 28+ Mega POWER மெகா பவர்
ஆங்கில எழுத்து S சுப்பர் நம்பர் 25 வெற்றி எண்கள் 15 26 37 42
சீட்டிழுப்பு இலக்கம் 1331
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,637,760.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.289,083,914.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

## சட்டவிரோத மின் வேலியில் சிக்கி இரு காட்டு யானைகள் பலி

இரகசியமாக உடல்களை புதைத்தவர் கைது

**திறப்பனை தினகரன் நிருபர்**



சட்ட விரோதமாக பொருத்தப்பட்ட மின்சார வேலியில் சிக்கி, இரண்டு காட்டு யானைகள் கொல்லப்பட்டுள்ளன. அதிகாரிகளுக்குத் தெரிவிக்காமல் பெக்கோ இயந்திரம் ஒன்றின் உதவியுடன் இரகசியமாக இறந்த யானைகளை புதைத்த சந்தேகத்தின் பேரில் ஒருவர் நேற்று முன்தினம் (28) மாலை கைது செய்யப்பட்டுள்ளதாக திறப்பனை பொலிஸார் தெரிவித்தனர்.

திறப்பனை பொலிஸ் பிரிவின் ஊட்டிமடுவ, ஞானிக்குளம் பகுதியைச் சேர்ந்த 47 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இறந்த இரண்டு காட்டு யானைகளும் கடந்த 16ம் திகதி அல்லது அதை ஒட்டிய காலப்பிரிவில் இறந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. கடந்த 19ஆம் திகதி சந்தேகநபர் தனது விவசாய நிலத்துக்கு சென்ற போது இரண்டு காட்டு யானைகள் மின்சார வேலிக்கு அருகில் உயிரிழந்துள்ளதையறிந்து வீதியில் பயணித்த பேக்கோ இயந்திரத்தை கொண்டு வந்து இரண்டு குழிகளை தோண்டி யானைகளை புதைத்துள்ளார். இதற்காக அவர் ரூ.79000.00 (எழுபத்தொன்பதாயிரம்) பணத்தை செலவிட்டுள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளதாக வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மின் வேலிக்கான மின்சுற்று பழுதடைந்ததால், அருகில் உள்ள ஆளில்லாத வீட்டில் இருந்து மின்சாரம் எடுக்கப்பட்டு சட்டவிரோதமாக மின்வேலியுடன் இணைக்கப்பட்டதாலேயே, இச் சம்பவம் இடம் பெற்றதாக விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது. இரண்டு காட்டு யானைகளையும் புதைப்பதற்கு முன்னர் சந்தேக நபர் அவற்றை தீயிட்டு எரிக்க முயற்சித்துள்ளதாகவும் வன ஜீவராசிகள் அலுவலகம் தெரிவித்துள்ளது.

## சிலாபம் கல்வி வலய தமிழ் மொழி பாடசாலைகள் தொடர்பில் ஆய்வு

பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் பங்கேற்பு



**கற்பிட்டி தினகரன் விசேட நிருபர்**

சிலாபம் கல்வி வலயத்துக்கு புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் (28) விஜயம் செய்தார். அங்கு தமிழ் மொழிமூல பாடசாலைகளில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன், சிலாபம் கல்வி வலயத்தில் உள்ள தமிழ் மொழிமூல பாடசாலையில் காணப்படும் வளங்கள் மற்றும் ஆசிரியர்கள் பற்றாக்குறை பற்றி உரிய அதிகாரிகளுடனும் கலந்துரையாடினார்.

இதன்போது, சிலாபம் நஸ்ரியா மத்திய கல்லூரியின் குறைபாடுகள் தொடர்பாகவும், ஜயபிம பிரதேசத்தில் பாலர் பாடசாலை ஒன்று அமைத்தல்,மாதம்பை அல் மிஸ்பா பாடசாலை கல்வி அபிவிருத்தி தொடர்பாகவும், அல்ஹிரா பாடசாலையின் கல்வி அபிவிருத்தி தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், அவற்றை தீர்ப்பதற்கான முடிவுகளும் எடுக்கப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் கல்வி அமைச்சின் முஸ்லிம் பிரிவு பணிப்பாளர் முஹம்மது நஜ்முதீன், சிலாபம் கல்விப் பணிப்பாளர் விஜேசிங்ஹ, சிலாபம் உதவி கல்வி பணிப்பாளர் (அபிவிருத்தி) திருமதி கொஸ்தா, சிலாபம் உதவிக் கல்விப் பணிப்பாளர் (நிருவாகம்) எச்.ஜே.எம்.ஐ.ஆர். அதுல, சிலாபம் உதவிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்) கீர்த்தி பிரியங்கர, நஸ்ரியா மத்திய கல்லூரி அதிபர் ஜே.எம்.நஸ்மி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# ஜெபத்தினால் ஜெயம் கிட்டும்





## கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய ஆசிர்வாதங்களை பெற்றுக்கொள்ள மஹானயீம் நற்செய்தி சபை தலைமை போதகர் சந்திரன் அழைப்பு




வெள்ளவத்தை – மஹானயீம் நற்செய்தி சபையின் 12வது அகவையை பூர்த்தி செய்யும் இத்தருணத்தில் அதன் தலைமை போதகரும், ஸ்தாபகருமான போதகர் சந்தனம் சந்திரன் தேவசேவையோடு வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் மக்களுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கி வருகின்றார். தலைநகர் மற்றும் அதனை அண்மித்துள்ள புற நகர்களிலும் உள்ள மாணவர்களின் கல்வி மேம்பாடு குறித்தும் கவனம் செலுத்தி வருகின்றார்.

ஆன்மீக பணிகளோடும் சமூக பணிகளையும் முன்னெடுத்துச் செல்லும் போதகர் சந்திரன் தனது நற்செய்தி சபையின் மூலம் நூற்றுக்கணக்கான மக்களை வழிநடத்தும் பாரிய நற்பணியில் ஈடுபட்டு வருகின்றார்.

வாரத்தில் மூன்று நாட்கள் உபவாச ஜெபத்தின் மூலம் நாட்டினதும், நாட்டு மக்களின் நலன் கருதியும் இந்த உபவாச ஜெபம் நடைபெற்று வருகின்றது.

இந்த பிரார்த்தனைகள் மூலம் நாடு விடுதலையாக்கப்பட வேண்டும், தினமும் மக்கள் பொருளாதார நெருக்கடிகளாலும் வாழ்ந்து வரும் அவர்களுக்கு ஒரு விமோசனம் ஏற்பட வேண்டும் என்பதில் தாம் மேற்கொள்ளும் பிரார்த்தனைகள் ஊடாக வெளிப்பாடு கிடைத்து வருகின்றது. 'ஜெபத்தினால் ஜெயம் கிட்டும்' இந்த 2023ஆம் புதிய ஆண்டில் கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய ஆசிர்வாதங்களை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது தமது சபையின் தொனிப்பொருளாகும். ஆகவே மக்கள் கடவுள் மீது நம்பிக்கை உள்ளவர்களாகவும், இறை பக்தி உள்ளவர்களாகவும் மாற வேண்டும். அப்போதுதான் தம்மை நெருங்குகின்ற அழிவுகளிலிருந்து பாதுகாக்க முடியும்.

சிறுவர்கள், வாலிபர்கள் மத்தியில் புதிய சிந்தனைகள், எண்ணங்கள் உருவாக வேண்டும். இவர்கள் இறை பக்தி உள்ளவர்களாக மாறும் பொழுது நாடு செழிப்பாக மாறும். இலங்கை ஒரு நல்ல தேசம், இன, மத பேதங்களை கடந்து ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொள்ளும் போது வாழ்வில் சுபிட்சம் ஏற்படும்.

ஞாயிற்றுக்கிழமைகளில் தினமும் காலை 9 மணிக்கு எமது ஆலயத்தில் தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளிலும் ஆராதனைகள் நடைபெறுகின்றன. இவ் ஆராதனைகளில் அனைவரும்; பங்குப்பற்றி ஆசிர்வாதத்தினை பெற்றுக்கொள்ள அழைப்பு விடுக்கின்றது. மஹானயீம் நற்செய்தி சபை 2023 ஆம் ஆண்டு சகல ஆசிர்வாதங்களையும் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் கொண்டு வர நாம் பிரார்த்திக்கின்றோம்.

**தேவதாஸ் சவரிமுத்து**
**சிரேஷ்ட ஊடக இணைப்பாளர்**

MAHANAIM GOOD NEWS CHURCH












# 2022 சுவடுகள்

## ஜனவரி




**05** உலகின் சிறந்த சுற்றுலா தலம்: இருபது நாடுகளில் இலங்கையும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.



**14** ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள்; 1,000 தினங்கள் நிறையொட்டி பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் தேவத்தை தேசிய பசிலிகா பேராலயத்தில் விசேட வழிபாடுகள் நடைபெற்றன.

**15** மீரிகம முதல் குருநாகல் வரையிலான மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் இரண்டாம் கட்டம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரினால் திறந்து வைக்கப்பட்டது.



## பெப்ரவரி



**12** சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டத்துக்கமைய வவுனியா பல்கலைக்கழகம் உதயமானது.

**16** இலங்கையின் தமிழ்ப் பத்திரிகையுலகில் தலைசிறந்தவர்களாகப் போற்றப்படுவோரில் ஒருவரும் சத்திய சாய் பாபா மத்திய நிலைய ஸ்தாபகருமான அமரர் எஸ்.டி. சிவநாயகத்தின் நூறாவது பிறந்த நாளையொட்டி நினைவு முத்திரை வெளியிட்டு வைக்கப்பட்டது.



**19** உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தடுக்கத் தவறியதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்த முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோரை கொழும்பு மேல் நீதிமன்றம் விடுதலை செய்தது.





## மார்ச்




**03** ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் அமைச்சரவையில் திடீர் மாற்றம் செய்யப்பட்டதை தொடர்ந்து, கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ச மற்றும் எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில ஆகியோர் அமைச்சுப் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டனர்.



**07** இலங்கையில் மிகவும் பிரபல்யம் வாய்ந்த யானையான நெதுங்கமுவ ராஜா தனது 69 ஆவது வயதில் உயிரிழந்தது. தலதா மாளிகையில் நீண்டகாலமாக பணியாற்றிய யானையே, வயது மூப்புக் காரணமாக உயிரிழந்தது. இந்த யானையானது, எசல பெரஹரவில் புத்தரின் புனிதப்பல் அடங்கிய புனித பேழையை தாங்கிச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

## ஏப்ரல்



**01** மக்களின் பாதுகாப்பு, நாட்டில் அமைதியை பேணல், சேவைகள்; நாட்டில் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டது. இதற்கான வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் வெளியிடப்பட்டது.



**04** இலங்கையின் மூத்த கல்வியியல் பேராசிரியர் சோ.சந்திரசேகரம் தனது 78ஆவது வயதில் மாரடைப்புக் காரணமாக காலமாகியிருந்தார்.



**28** நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதைத் தொடர்ந்து, அரசாங்கத்துக்கு எதிராக நாடளாவிய ரீதியில் பாரிய தொழிற்சங்க போராட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன், இதனால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.

## மே



**06** நாட்டில் சில தொழிற்சங்கங்களால் முன்னெடுக்கப்பட்ட ஹர்த்தால் காரணமாக நாடளாவிய ரீதியில் நிர்வாகப் பணிகள் முடங்கின. அரசாங்கம் வெளியேற வேண்டுமென வலியுறுத்தி தொழிற்சங்கங்கள் மற்றும் பல அமைப்புகள் இப்போராட்டத்தை முன்னெடுத்தன.



**09** சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதற்காக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இராஜினாமா செய்ததுடன், இதற்கான கடிதத்தை ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவிடம் அவர் கையளித்தார்.



**12** ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவியேற்றுக் கொண்டார்.



**31** புதிய இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் விக்கும் லியனகே நியமிக்கப்பட்டார். இதற்கமைய இராணுவத்தின் தற்போதைய பிரதம அதிகாரியான ஜெனரல் விக்கும் லியனகே, 24ஆவது இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டார்.

## ஜூன்



**18** ஜூலை 01ஆம் திகதி முதல் பலாலி விமான நிலையம் மீண்டும் திறக்கப்படுமென, யாழ்.சென்றிருந்த அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா அறிவிப்பு.




**22** பாராளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் பதவியேற்றுக் கொண்டார்.



**29** வெலிக்கந்தை, கந்தக்காடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் புனர்வாழ்வு பெற்று வந்த 500 சிறைக்கைதிகள் அங்கிருந்து தப்பியோடியிருந்த சம்பவம் இடம்பெற்றது. எனினும், இவ்வாறு தப்பிச் சென்றவர்களில் 248 பேர் கைது செய்யப்பட்டனர்.

## ஜூலை



**09** நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் கொழும்பில் அணி திரண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள், பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகள் மற்றும் வீதித் தடைகளையும் மீறி காலி முகத்திடலில் அமைந்துள்ள ஜனாதிபதி செயலகத்தையும் ஜனாதிபதி மாளிகையையும் முற்றுகையிட்டனர்.



**13** பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டதாக, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தார்.



**14** ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது இராஜினாமாக் கடிதத்தை சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவுக்கு அனுப்பி வைத்தார்.

**15** பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாட்டின் பதில் ஜனாதிபதியாக, பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.



**20** நாட்டின் 08ஆவது ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பெரும்பான்மை வாக்குகளினால் தெரிவு செய்யப்பட்டார். பாராளுமன்றத்தில் நடைபெற்ற இரகசிய வாக்கெடுப்பில், 52 மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்று அவர் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.


**22** ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அரசாங்கத்தின் பிரதமராக சபை முதல்வர் தினேஷ் குணவர்தன உத்தியோகபூர்வமாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.



## ஓகஸ்ட்



**01** தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திர முறைமையில் (QR) மட்டுமே எரிபொருள் விநியோகமென, மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர அறிவித்திருந்தார்.



**02** பெர்மிங்ஹாமில் நடைபெற்ற பொதுநலவாய விளையாட்டுப் போட்டியின் ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியின் முதல் சுற்றில் யுபுன் அபேகோன் முதலிடத்தைப் பிடித்து அரையிறுதிக்கு முன்னேற்றம் கண்டார்.




**30** அரசாங்கத்தின் இடைக்கால வரவு செலவுத் திட்ட மதிப்பீடு ஜனாதிபதியும் நிதியமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

## செப்டெம்பர்

தொகுப்பு
**ஆர். சுகந்தினி**

**02** சிங்கப்பூர் மற்றும் மாலைதீவில் தங்கியிருந்த முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் தாய்லாந்திலிருந்து இலங்கையை மீண்டும் வந்தடைந்திருந்தார்.

**08** பிரித்தானிய மகாராணி எலிசபெத் தனது 96ஆவது வயதில் காலமானார்.





**11** சிங்கப்பூரில் நடைபெற்ற ஆசிய வலைப்பந்தாட்ட சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப் போட்டியில் சிங்கப்பூர் அணியை 63-53 என்ற புள்ளிகள் கணக்கில் வீழ்த்திய இலங்கை, தோல்வியுறாத அணியாக சம்பியன் பட்டத்தை தக்க வைத்துக்கொண்டது.

## ஒக்டோபர்



**07** இலங்கை வானொலி தமிழ்ச் சேவையில் பல்வேறு பதவிகளை வகித்த ஹரிஹர சர்மா கனடாவில் காலமானார். சமய நிகழ்ச்சிகள் பலவற்றை காலத்திற்கேற்ப வடிவமைத்து வழங்கிய பெருமை இவரையே சாரும்.



**19** அநுராதபுர அட்டமஸ்தானாதிபதி, கலாநிதி பல்லேகம ஸ்ரீ நிவாச தேரர் தனது 69 ஆவது வயதில் காலமானார். அவர் கொழும்பு தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் காலமானார்.

## நவம்பர்



**04** இலங்கையில் முதலாவது குரங்கம்மை தொற்றுநோயாளி இனங்காணப்பட்டார். துபாயிலிருந்து இலங்கைக்கு வந்த 20 வயதுடைய ஒருவரே இவ்வாறு அடையாளம் காணப்பட்டார்.

**06** அவுஸ்திரேலிய யுவதியொருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் இலங்கை வீரர் தனுஷ்க குணதிலக, அவுஸ்திரேலிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.



**14** நிலையான மற்றும் நீண்டகால பொருளாதார வளர்ச்சியை நோக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்ட 2023ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தை நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.



## டிசம்பர்



**12** யாழ். - சென்னை விமான சேவைகள் மீள ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன்படி அலையன்ஸ் எயார்லைன்ஸ் என்ற விமான சேவை நிறுவனம் சென்னையிலிருந்து பலாலிக்கு முதலாவது விமான சேவையை ஆரம்பித்தது.



**15** பிரபல நிறுவனத்தின் பணிப்பாளரான தினேஷ் ஷாப்டர், பொரளை கனத்தை பொது மயானப் பகுதியில் கடும் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் மரணமடைந்தார்.



**19** இலங்கையின் 25ஆவது கடற்படைத் தளபதியாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் நியமிக்கப்பட்ட வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார்.

# சீனன்கோட்டை பாஸிய்யா கல்வி நிலைய ஏற்பாட்டில் இலவச மருத்துவ பரிசோதனை முகாம்

பேருவளை, சீனன்கோட்டையில் சுமார் நான்கு தசாப்தத்துக்கும் மேலாக சமய, கல்வி, சமூக சேவைத்துறைக்கு மகத்தான பணியாற்றி வருகின்ற வாலிபர் ஹழரா ஜெமாஅத்தின் கல்விப்பிரிவான பாஸிய்யா கல்வி நிலையம் பல சமூக பணிகளை தான்சார்ந்த சமூகத்திற்கும் பிற சமூகங்களிற்கும் மேற்கொண்டு வருகின்றது.

கல்வித்துறையில் சிறப்புற்று திகழும் கல்விமான்கள், மாணவர்கள் உட்பட துறைசார்ந்தோரை கௌரவிக்கும் நிகழ்வுகளை நடாத்தி அவர்ளை உற்சாக மூட்டி வருகின்றது.

மாணவர்களின் கணினிக் கல்வியை மேம்படுத்த கணினி வகுப்புக்களை பல ஆண்டுகளாக இலவசமாக நடாத்தி மாணவர்களின் தொழில்நுட்பத்துறைக்கு பாரியதொரு பங்களிப்பையும் பாஸிய்யா கல்விப்பிரிவினர் செய்து வருகின்றனர்.

கா.பொ.த சாதாரண தரப்பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் நலன் கருதி சுமார் 15 வருடங்களுக்கும் மேலாக தேர்ச்சிபெற்ற சிரேஷ்ட விரிவுரையாளர்களைக் கொண்டு இலவச கருத்தரங்குகளை அல்ஹுமைஸரா தேசிய பாடசாலையில் நடாத்தி வருகிறது. இதில் பேருவளை பிரதேசங்களைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு பயன்பெற்றதோடு அவர்கள் சிறந்த பெறுபேறுகளையும் பெற்று சமூகத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர்.

அதேபோன்று, உள்நாட்டு வைத்தியர்களை கொண்டு பல தடவைகள் மருத்துவ முகாம்களையும் கண் பரிசோதனை முகாம்களையும் இலவசமாக நடாத்தி மூக்குக் கண்ணாடிகளையும் விநியோகித்தனர். இதில் எமது சமூகத்தோடு இணைந்து பிற சமூகத்தினர்களும் கலந்து கொண்டு பயன்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. அதேபோன்று மேற்படி அமைப்பினர் பல்வேறு நோய்களுக்குட்பட்டோருக்கும் வீடுதேடிச் சென்று மறைமுகமாக உதவியளித்து வந்துள்ளமையும் குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலும் கல்வித்துறை பங்களிப்பு என்ற வகையில் வறிய மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கு அப்பியாசப் புத்தகங்கள், பாதனிகள், பாடசாலை பேக்குகளையும் வழங்கி வந்துள்ளது.

அதேபோல், சன்மார்க்க, கல்வி, சுகாதாரம் உட்பட பல துறைகள் சார்ந்த கல்விமான்கள், மார்க்க அறிஞர்கள், வைத்திய நிபுணர்கள் போன்றோரை வரவழைத்து காலத்திற்கு ஏற்றவகையில் கருத்தரங்குகள், சன்மார்க்க விளக்க வகுப்புகள், சொற்பொழிவுகளை நடாத்தி வருகின்றது.



## ● இந்திய மகப்பேற்று விசேட மருத்துவர்கள் பங்கேற்பு













பேருவளை பகுதியில் குறிப்பாக கல்வித் துறைக்கு எமது கல்வி நிலையம் மகத்தான பங்காற்றி வந்துள்ளதை எமது அமைப்பு நன்றியோடு நினைவுகூர்வது காலத்தின் தேவையாகும்.

அந்த வகையில், பாஸிய்யா கல்விப் பிரிவு இம்மாதம் (டிசம்பர்) 24, 25ம் திகதிகளில் நடாத்திய வைத்திய முகாமும் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அதாவது குழந்தைப்பேறு அற்றோருக்கென இந்தியாவிலிருந்து விசேட மகப்பேற்று வைத்தியர்கள் இலங்கைக்கு வரவழைத்து சீனன்கோட்டை நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரியில் இலவச வைத்திய முகாமை நடாத்தியது.

இவ் வைத்திய முகாமில் சென்னையைச் சேர்ந்த IVF விசேட வைத்திய நிபுனர்கள் அடங்கிய குழுவினர் இவ்வைத்திய முகாமை வெற்றிகரமாக நடாத்தி முடித்தனர்.

ஹழரா ஜெமாஅத் தலைவர் இமாம் ஹஸன் முர்ஸி தலைமையில் மேற்படி வைத்திய முகாமின் ஆரம்ப நிகழ்வு (24) காலை நடைபெற்றது.

ஹழரா ஜெமாஅத் உப தலைவர் மௌலவி அம்ஜத் ஸாலி அஷ்ஷாதுலி அவர்களின் கிராஅத்துடன் ஆரம்பமான இந் நிகழ்வில் தலைவர் இமாம் ஹஸன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

சீனன்கோட்டை பள்ளி சங்க உறுப்பினரும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை நிறைவேற்றுக் குழு உறுப்பினருமான அல்ஹாஜ் அஷ்ஷெய்க் ஏ.எச்.எம். இஹ்ஸானுத்தீன் (நளீமி) விசேட உரை நிகழ்த்தினார்.

இந்திய வைத்திய நிபுணர் பேராசிரியை டாக்டர் ஸி. ரஜனி, ஹழரா ஜெமாஅத் இணைச் செயலாளரும் கொழும்பு பல்கலைக்கழக மருத்துவத் துறை இறுதியாண்டு மாணவருமான முர்சித் ரியாம் ஆகியோரும் உரை நிகழ்தியதோடு அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை பொருளாளர் கலாநிதி மௌலவி அஸ்வர் (அஸ்ஹரி) துஆ பிரார்த்தனை புரிந்தார்.

நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி அதிபர் ஜனாபா பஹீமா பாயிஸ், சீனன்கோட்டை பள்ளிச் சங்க இணைச் செயலாளர்களான அல்ஹாஜ் எம்.எம். சிஹாப், அல்ஹாஜ் அருஸ் அனஸ், ஹழரா ஜெமாஅத் ஸ்தாபக செயலாளர் அல்ஹாஜ் பர்ஸான் முர்ஸி, ஹழரா ஜெமாஅத் மற்றும் பாஸிய்யா கல்வி நிலைய உறுப்பினர்கள் என பலரும் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இவ்வைத்திய முகாமில் வைத்தியர்களுக்கு உதவியாக நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி மாணவதலைவிகள் உதவியாளர்களாக கலந்து கொண்டு சிறப்பித்ததோடு பேருவளை பிரதேசத்தைச் சேர்ந்த மருத்துவத்துறையில் இறுதியாண்டில் கல்விபயிலும் மாணவிகள் ஐவர் கலந்து கொண்டனர்.

இவ்வைத்திய முகாம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த பிரதம பெண் வைத்தியர், இந்த முகாமை சிறப்பாக வழிநடாத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய பாஸிய்யா சங்கம் உட்பட விசேடமாக உதவியாளர்களாக கலந்துகொண்ட இக்கல்லூரி மாணவிகளை நான் மனப்பூர்வமாக பாராட்டுகிறேன். இங்கு அனைவரும் வழங்கிய ஒத்துழைப்புக்கு தலைவணங்குகிறேன். அதிலும் உங்களை விட்டு பிரிவதில் மனம் வேதனையடைகிறது என கண்ணீர் மல்க கருத்து தெரிவித்தார்.

வைத்திய பரிசோனைகளுக்காக கொழும்பு "LANKA HOSPITAL" பரிசோதனை குழுவினரும் பணியாற்றினர். சுமார் 100க்கும் மேற்பட்ட பெண்மணிகள் இம் முகாமில் கலந்து பயன்பெற்றனர். இதில் கலந்துகொண்டவர்கள், தமக்கு இம்முகாம் சகல வகையிலும் பிரயோசனமாக இருந்ததாகவும் நல்ல முறையில் வைத்தியர்களும் தமக்கு ஆலோசனைகளை வழங்கியதாகவும் மேற்படி அமைப்பின் பணிகள் வானுயர தொடர தாம் இறைவனை பிரார்த்திப்பதாகவும் தெரிவித்ததாக பாஸிய்யா கல்வி நிலைய செயலாளர் முர்சித் ரியாம் தெரிவித்தார்.

மலரமைப்பு
அஜ்வாத் பாஸி







# கிழக்கின் குரல்



## குடும்பஸ்தர் மீது மாணவன் மண்வெட்டியால் தாக்குதல்

**றொட்டவெவ குறூப் நிருபர்**

மாணவர் ஒருவர் மண்வெட்டியால் தாக்கியதில் பலத்த காயங்களுக்குள்ளான குடும்பஸ்தர் ஒருவர், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் (28) இல், இடம்பெற்றது.

இரண்டு பிள்ளைகளின் தந்தையே இத்தாக்குதலுக்குள்ளானார்.

மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இந்நபர், பின்னர், மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

சம்பவம் குறித்து தெரிய வருவதாவது, பாடசாலை மாணவன் விடுமுறை தினத்தில் மஹதிவுல்வெவ குளத்திற்கு மீன் பிடிக்கச் சென்றுள்ளார். இச்சிறுவனை மீன் பிடிக்க விடாமல் தடுத்த இந்நபர், சிறுவனை வீட்டுக்கு அனுப்பியுள்ளார். பின்னர், வீதியோரத்தில் நின்ற அச்சிறுவனை இவர் தாக்கவும் முற்பட்டுள்ளார்.

இதனால், ஆத்திரமடைந்த சிறுவன் மண்வெட்டியால் குறித்த நபரை தாக்கியதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

## கோறளைப்பற்று பிரதேச சபையின் வரவு செலவுத் திட்டம் இரண்டாவது தடவையும் 04 வாக்குகளால் தோற்கடிப்பு

**பாசிக்குடா நிருபர்**

கோறளைப்பற்று பிரதேச சபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் 4 வாக்கால் இரண்டாவது தடவையாகவும் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

கோறளைப்பற்று பிரதேச சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட சமர்ப்பிப்பு இரண்டாவது முறையாக தவிசாளர் திருமதி சோபா ஜெயரஞ்சித் தலைமையில் நேற்று சபை ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

கடந்த 14.12.2022 சமர்பிக்கப்பட்ட வரவு செலவு திட்டம் தோல்வியடைந்ததை தொடர்ந்து மீண்டும் தவிசாளரினால் வரவு செலவு திட்டம் நேற்று சபையில் சமர்பிக்கப்பட்டு பகிரங்க வாக்கெடுப்பு நடைபெற்றது.

2023 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட வாசிப்புக்கு ஆதரவாக 09 வாக்குகளும் எதிராக 13 வாக்குகளும் அளிக்கப்பட்டு 04 வாக்குகளால் வரவு செலவு திட்டம் நேற்று தோல்வியடைந்தது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் 6 உறுப்பினர்களும் ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவரும் சுயேட்சை குழு உறுப்பினர் ஒருவரும் சிறிலங்கா சுதந்திர கட்சியைச் சேர்ந்த ஒருவருமாக 9 பேர் வரவு செலவு திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர். தமிழ் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த உறுப்பினர் அமர்விற்கு சமுகமளித்திருக்கவில்லை.

தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்கள் 6 பேரும் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் 3 பேரும் ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள் 2 பேரும் நல்லாட்சிக்கான இயக்க உறுப்பினர் ஒருவரும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினை சேர்ந்த உப தவிசாளருமாக 13 பேர்கள் வரவு செலவு திட்டத்திற்கு எதிராக வாக்களித்திருந்தனர்.

இதேவேளை கடந்த காலத்தில் உப தவிசாளர் உட்பட ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஆட்சி அமைப்பதற்கு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியினருக்கு ஆதரவு வழங்கியிருந்தனர். இம்முறை அவர்களில் பல உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இதேபோன்று கடந்த 14.12.2022 ஆம் திகதி சமர்பிக்கப்பட்ட 2023 வரவு செலவு திட்டமும் 2 வாக்குகளால் வரவு செலவு திட்டம் தோற்கடிக்கப்பட்டது.

இச் சபையானது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் கட்டுப்பாட்டுக்குள் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

## போதைப்பொருள் பாவனையை ஒழிக்க மக்களுக்கு விழிப்பூட்டல்

**மூதூர் தினகரன் நிருபர்**

மூதூர் பிரதேசத்தில் போதைப் பொருள் பாவனையை இல்லாதொழிக்கும் நடவடிக்கைகளுக்கு பொது மக்களின் ஒத்துழைப்புக் கோரப்படவுள்ளது. இதற்கமைய மக்கள் விழிப்பூட்டப்பட்டு வருகின்றனர்.

மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் புகைப்பிடிப்போரின் எதிர்கால நலன்கருதி இவ்விழிப்பூட்டும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

மூதூர் பிரதேசத்தை போதையிலிருந்து பாதுகாக்கும் இச் செயற்பாடுகளுக்கு பள்ளிவாசல்கள் மற்றும் சமூக அமைப்புக்களும் ஒத்துழைப்பு வழங்க முன்வந்துள்ளன.

போதைப்பொருள் பாவனையால் வீணே மக்கள் தேடிக்கொள்ளும் நோய் ஆபத்து, தற்கால பொருளாதார சுமை, போதை பாவனைக்கு அடிமையாகுதல், நாளாந்த பணச் செலவீனம் என்பவற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்க இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## மண்முனை தென் எருவில்பற்று பிரதேசசபை பட்ஜெட்டுக்கு அதிக உறுப்பினர்கள் ஆதரவு

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான பட்ஜட், பெரும் வாதங்களுக்கு மத்தியில் நிறைவேற்றப்பட்டது. இச்சபையின் அமர்வு நேற்று (29)

வியாழக்கிழமை களுதாவளையில் அமைந்துள்ள பிரதேச சபையின் சபா மண்டபத்தில் நடைபெற்றது. சபையின் புதிய தவிசாளர் சோ.சற்குணராசா தலைமையில் நடைபெற்ற இச்சபை அர்வில் பல உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது 2023 ஆம் ஆண்டுக்கான பாதீடு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டன. கூட்டத்தின் அழைப்பிதழ் கடிதத்துடன் இணைத்து இப்பாதீடு தமக்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருக்க வேண்டும். இவ்வாறு வழங்கப்படாததால், இப்பாதீட்டை ஆதரிக்கப்போதில்லை என உறுப்பினர்கள் தெரிவித்தனர். பின்னர் பிரதேசசபை தவிசாளர் மற்றும் பாதீடு தயாரித்த உத்தியோகஸ்த்தர் ஆகியோர் பாதீடு தொடர்பில் சபைக்கு விளக்கமளித்தனர்.

பிரதேச சபையில் அங்கம் வகிக்கும் 21 உறுப்பினர்களின் சிபார்சில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு, தலா 10 இலட்சம் ரூபா வீதம் ஒதுக்கீடு செய்யவேண்டும் என சில உறுப்பினர்களும், வட்டார அடிப்படையில் அந்த நிதியை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என இன்னும் சில உறுப்பினர்களும் கருத்துத் தெரிவித்தனர். இதனால் உறுப்பினர்களிடையே வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன. இதைத் தொடர்ந்து, பட்ஜெட்டை எதிர்ப்பதாகத் தெரிவித்து துறைநீலாவணை வட்டார உறுப்பினர் க.சரவணமுத்து சபையிலிருந்து வெளியேறிச் சென்றார். பின்னர் ஏனைய உறுப்பினர்கள் ஒன்றிணைந்து பட்ஜட்டை ஆதரவளித்ததன் அடிப்படையில், பிரதேச சபையில் அங்கம் வகிக்கும் 21 உறுப்பினர்களின் சிபார்சில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு தலா 10 இலட்சம் ரூபா வீதம் ஒதுக்கீடு செய்யவேண்டும் தீர்மானிக்கப்பட்டது. இதன் அடிப்படையிலே 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்பட்டது.

## கோணாவத்தை மண்ணுக்கு பெருமை சேர்த்த மாணவி றனா பாராட்டி கௌரவிப்பு



**பாலமுனை விசேட நிருபர்**

அட்டாளைச்சேனை அந்நூர் மகா வித்தியாலயம் சார்பாக சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றி சகல பாடங்களிலும் 9A சித்திபெற்று கோணாவத்தை மண்ணுக்கு பெருமை சேர்த்த எம்.எச். றனா செக்டோ ஸ்ரீலங்கா அமைப்பினால் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

செக்டோ ஸ்ரீலங்கா அமைப்பின் தலைவர் சட்டத்தரணி ஏ.எல். நியாஸ், அமைப்பின் ஆலோசகர் ஏ.எம்.சம்சுடீன், உபதலைவர் ஏ.எல்.றிம்சான் உள்ளிட்ட குழுவினர் திங்கட்கிழமை (26) குறித்த மாணவியின் வீடு சென்று அவரைப் பாராட்டி கௌரவித்தனர்.

இச்சாதனையை நிகழ்த்தி தனது பாடசாலைக்கும், கோணாவத்தை பிரதேசத்துக்கும் பெருமை சேர்த்த மாணவி றனா அட்டாளைச்சேனை கோணாவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த மஹைம்மட் காசிம், யூ.எல்.வஜீரா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியாவார்.

## வீட்டுக் கதவுகளை உடைத்து பொருட்கள், நகைகள் திருட்டு

**பாசிக்குடா நிருபர்**

வீட்டின் கதவுகளை உடைத்து உட்புகுந்த சிலர் அங்கிருந்த ஆறு பவுண் தங்க நகைகள், அறுபதாயிரம் ரூபா பெறுமதியான ஒலிபெருக்கிப் பெட்டிகள், எரிபொருள் சிலிண்டர் மற்றும் மோட்டார்சைக்கிளின் உதிரிப்பாகங்களை திருடிச் சென்றுள்ளனர்.

மட்டக்களப்பு கல்குடா பொலிஸ் பிரிவின் சிவன்கோயில் வீதி பேத்தாழையிலுள்ள வீட்டில் இச்சம்பவம் நடந்துள்ளது. எவரும் வீட்டிலில்லாத நிலையில்,நடந்த இத்திருட்டுக் குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாங்கேணியில் உள்ள தமது தோட்டத்திற்கு (23) சென்றுவிட்டு கடந்த புதன் கிழமை காலை (28) வீடு திரும்பிய போது,வீட்டுக் கதவுகள் உடைக்கப்பட்டிருந்ததாக உரிமையாளர் தெரிவித்தார்.

இச்சம்பவ இடத்திற்கு மட்டக்களப்பு குற்றத் தடயவியல் பொலிசார் வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

கல்குடா பொலிஸார் இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கிழக்கு மாகாண பொதுச்சேவை உத்தியோகத்தர்கள் புது வருடத்தில் புதிய இடங்களுக்கு இடமாற்றம்

**ஒலுவில் விஷேட நிருபர்**

கிழக்கு மாகாண பொதுச்சேவை உத்தியோகதர்களுக்கு (2023) வழங்கப்பட்டுள்ள இடமாற்ற கட்டளையின் பிரகாரம் எதிர்வரும் ஜனவரி (02) முதல் புதிய சேவை நிலையங்களுக்கு விடுவிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக, கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிருவாகம்) ஏ. மன்சூர் தெரிவித்தார்.

இடமாற்ற உத்தியோகத்தர்கள் விடுவிப்புச் செய்யப்பட வேண்டுமென கிழக்கு மாகாணத்திலுள்ள சகல அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், நிறுவனத் தலைவர்கள் ஆகியோருக்கு சுற்று நிருபம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கிணங்க,அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களிள் ஒரு நிலையத்தில் தொடர்ச்சியாக பல வருடங்களாக சேவையாற்றிவரும் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை, அபிவிருத்தி உத்தியோகத்தர், மொழி பெயர்ப்பாளர் சேவை, சாரதிகள் சேவை, அலுவலகப் பணியாளர் சேவை, தொழில்நுட்ப உத்தியோகதர் சேவை, தகவல் தொடர்பாடல், தொழில்நுட்ப உதவியாளர் ஆகியோர் இடமாற்றப்படவுள்ளனர். கொவிட்19 தொற்றுக் காரணமாக 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த இடமாற்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்படாதிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## முதலை தாக்குதலில் பலியான குடும்பஸ்தர் இரண்டு நாட்களின் பின்னர் சடலமாக மீட்பு

**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் பிரிவு, ஆவெட்டியாவெளியில், முதலையின் தாக்குதலுக்குள்ளான நபர், காணாமல் போயிருந்த நிலையில், சடலமாக (28) மீட்கப்பட்டார்.

இவர், கடந்த திங்கட்கிழமை (26) வயல் வேலைக்குச் செல்வதற்காக வண்ணாத்தி ஆற்றைக் கடக்கையில் முதலை தாக்கியது.

அன்றிலிருந்து இந்நபர், காணாமல் போயிருந்தார். முதலை பிடித்துவிட்டதாகவும், தன்னை காப்பாற்றுமாறும் இந்நபர் கதறியதாகவும், நீரோட்டம் அதிகமாக இருந்ததால் அவர் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டதாகவும், ஆற்றின் மறுமுனையிலிருந்த செல்லையா துரைராசா(58) என்பவர் தெரிவித்தார்.

இதுகுறித்து கரடியனாறு பொலிஸாருக்கு விடயம் தெரிவிக்கப்படதால், சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், பொதுமக்களுடன் இணைந்து இரு நாட்களாக தேடுதல் நடாத்தினர். எனினும் புதன்கிழமை மாலை (28) கடற்படையினரின் உதவியுடன் இவரது சடலம் மீட்கப்பட்டது. அவயங்கள் இழந்த நிலையில் இவரது சடலம் காணப்பட்டது.

தம்பானம்வெளியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சதாசிவம் சஸ்பாபு (33) என்பவரே, சடலமாக மீட்கப்பட்டார்.

## சமுர்த்தி பயனாளிக்கு காசோலை வழங்கிவைப்பு



**அக்கரைப்பற்று மத்திய நிருபர்**

அக்கரைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சமுர்த்திப் பயனாளி ஒருவருக்கு, வீட்டு லொத்தர் காசோலை வழங்கப்பட்டது.அக்கரைப்பற்று சமுர்த்தி அலுவலகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சமுர்த்தி உள்ளக கணக்காய்வு உத்தயோகத்தர் இஸட்.ஏ.றகுமான் பயனாளியிடம் இக்காசோலையை கையளித்தார். இதில், சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் எம்.பி.எம். ஹூசைன், சமுர்த்தி முகாமையாளர் எம்.ஜே.எம்.நிஃமத்துல்லா மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எம்.எஸ். சன்ஸீர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## மாணவர்களிடையே போதைப்பொருள் பாவனையை ஒழிப்பதற்கு விசேட குழு

**பெரியநீலாவணை தினகரன் நிருபர்**

பாடசாலை மாணவர்களிடையே அதிகரித்து வரும் போதைப் பாவனையை ஒழிக்கும் நோக்கில், கல்முனை பொலிஸ் நிலையம் கல்முனை வலயக் கல்வி அலுவலகம் என்பன இணைந்து 'பாடசாலை போதைவஸ்த்து ஒழிப்புக் குழு' வை நிறுவவுள்ளன.

பாடசாலைகள் தோறும், இக்குழு இயங்கவுள்ளது. கல்முனை தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் வேண்டுகோளுக்கிணங்க இக் குழு அமைக்கப்படவுள்ளது.

பாடசாலை அதிபர், முகாமைத்துவத்திற்குப் பொறுப்பான பிரதி அதிபர், பாடசாலை ஒழுக்காற்று சபை தவிசாளர், பாடசாலை ஆசிரியர் சங்கச் செயலாளர், பாடசாலை முகாமைத்துவக் குழு செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு செயலாளர், பழைய மாணவர் சங்கச் செயலாளர், பாடசாலை பிரதேச சமுர்த்தி உத்தியோகத்தர், பாடசாலை பிரதேச கிராம சேவை உத்தியோகத்தர், பாடசாலை பிரதேச பள்ளிவாசல் தலைவர், பாடசாலை சமூகத்துடனான மதகுரு மற்றும் மாணவத் தலைவர்கள் மூவர் பாடசாலை போதைவஸ்த்து ஒழிப்புக்குழுவில் உள்ளடங்கவுள்ளனர்.

குழுவை அமைப்பதற்கான அறிவுறுத்தல்கள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கல்முனைப் பிரதேச பாடசாலை மாணவர்களிடையே அதிகரித்து வரும் போதைப் பொருள் பாவனயை ஒழிப்பது, இனங்காணப்படும் மாணவர்களை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பான தீர்மானங்களை இக்குழு மேற்கொள்ளும்.

## சிறுபான்மைச் சமூகங்களின் மனங்களை வெல்வதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும்

**கந்தளாய் தினகரன் நிருபர்**

திருகோணமலை மாவட்ட செயலகத்தில் முஸ்லிம் உயர் அரச உத்தியோகத்தர்களை புறந்தள்ளும் செயற்பாடுகள் தொடர்வது கவலையளிப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.சிறுபான்மையினருக்கு எதிராக கடந்த காலத்தில்

இடம்பெற்ற அதே பாரபட்சம் இப்போதும் தொடர்வது கவலையளிப்பதாகக் குறிப்பிட்ட அவர், பொருத்தமான பதவிகளில் தமிழ் மொழி பேசுவோர் நியமிக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார். இதுபற்றி அவர் கூறியதாவது,திருகோணமலை மாவட்ட செயலகத்தில் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் பதவிக்கு தற்போது வெற்றிடம் உள்ளது. மாவட்டத்தில் இந்தப் பதவிக்கு தகுதியான சிறுபான்மையினர் ஐந்து பேர் உள்ளனர். இவர்களில் சிலர் இப்பதவிக்கு விண்ணப்பித்தும் உள்ளனர்.

மக்கள் பிரதிநிதி என்ற வகையில் தனிப்பட்ட ரீதியில் யாரையும் நான் சிபார்சு செய்யவில்லை. விண்ணப்பித்துள்ளவர்களில் தகுதியானவர்களுக்கு உரிய பதவிகளை வழங்குமாறே கூறுகிறேன்.

எனினும் இவர்களில் எவருக்கும் இப்பதவி வழங்கப்படாது இவர்களை விட அதிக வருடங்கள் சேவைக்காலம் குறைந்த மாற்று மொழி பேசும் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ளது.அரசு என்ற வண்டியின் சாரதி மாறினாலும் வண்டி ஒரே திசையிலேயே செல்கின்றது என்பதற்கு இதனைத் தவிர வேறு சாட்சிகள் தேவையில்லை.எனவே, சிறுபான்மை சமூகங்களின் மனங்களை வெல்வதற்கு ஆட்சியாளர்கள் முன்வர வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

# புதிய உற்பத்தி வியாபாரங்களின் உருவாக்கமே இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு தீர்வாகும்

நாட்டையும் நாட்டு மக்களையும் நேசித்து புத்தாக்கத் துறையிலும் சமூகப் பணிகளிலும் உயர்ந்து நிற்கும் தேசமான்ய தொழிலதிபர் டி. எஸ். எம். நவாஸின் 50 வருட சேவை நலனைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு சமீபத்தில் குருநாகலில் இடம்பெற்றது. இவருடைய வியாபார முயற்சிகளின் மூலம் அவர் உருவாக்கிய அதிர்வுகள் காலந்தோறும் புதிய தலைமுறையினரின் வளர்ச்சிக்கான உத்வேகத்தை தொடர்ந்து வழங்கிக் கொண்டே இருக்கும்.10X10 என்ற சிறிய வாடகைக் கடையொன்றில் இருந்து வியாபாரம் கருக்கொண்டு எத்தனையோ மாற்றங்களைத் தனக்குள் நிகழ்த்திக் கொண்டு பெரும் விருட்சமாக வளர்ந்து நிற்கிறார். அதற்காகத் தன்மை முழுமையாக அர்ப்பணித்து நீண்ட காலத் திட்டமிடல், நிறுவன இலக்கு நிர்ணயித்தல் அல்லது ஒழுங்கமைத்தல் என்பதில் கூடுதல் கவனம் செலுத்தி இலக்கினை அல்லது நோக்கத்தினை அடைவதற்கான திட்டத்தையும் சிறந்த வழிகாட்டுதல்களையும் கொண்ட இவருடைய வியாபார நிறுவன முயற்சிகளை வார்த்தைகளால் விவரிக்க இயலாது. துருவ நட்சத்திரத்தைப் போல கடைசி வரை இவருடைய செயற்திறன்கள் எப்பொழுதும் பிரகாசிக்கக் கூடியது.

நவாஸ் அவர்களுடைய ஒழுங்குப்படுத்தப்பட்ட வினைத் திறனான வழிகாட்டுதல்களை அறிந்து கொள்வதன் மூலம் நிச்சயிக்கப்பட்ட இலக்குகளை இளம் தலைமுறையினர்கள் தேவையானளவு அடைந்து கொள்ள முடியும்.

அக்குறணை புளுகொஹொதென்னையில் சாதாரண ஹோட்டல் வியாபாரப் பின்னணியில் பிறந்த இவர். எப்படி ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு தொழில் வழங்குனராகத் திகழ முடிந்தது என்பது மிக முக்கியமான கேள்வி. இவர் வியாபாரத் துறைக்கான பயிற்சியைக் குடும்ப பின்னணியில் இருந்தோ அல்லது கல்லூரிகளில் இருந்தோ பெறவில்லை. தானே முயன்று இடம்பிடித்து மெது மெதுவாக கடையில் வியாபாரத்தில் கற்றுக் கொண்ட அனுபவங்களை தொழில் பேட்டை அமைப்பதற்கு மூலதனமாகக் கொண்டிருந்தார். பிறப்பிலே அவர் வர்த்தகப் பிரமுகர் என்னும் சொல்லுக்குப் பொருத்தமானவர். தேசமான்ய டி. எஸ். எம். நவாஸ் தினகரன் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி...

**● அர்ப்பணிப்பு, நீண்ட காலத் திட்டமிடல், இலக்கை நிர்ணயித்தல், ஒழுங்கமைத்தல் போன்றவற்றால் வெற்றியை பெற்றுக் கொள்ளலாம்....**



**இக்பால் அலி**

### உங்கள் ஆரம்பக் கல்வி வாழ்க்கை பற்றிய சிறு குறிப்பு...

நான் அக்குறணை புளுகொஹொதென்னையில் 1955.09.30 இல் பிறந்தேன். தந்தையின் பெயர் செய்யத் முஹமட். அவர் அக்குறணையைச் சேர்ந்தவர். தாயின் பெயர் ரீனா உம்மா. அவர் மடவளையைச் சேர்ந்தவர். தந்தை ஒரு நடுத்தர வியாபாரி. எங்கள் குடும்பத்தில் மொத்தம் 12 பேர். ஆண்கள் 6 பேர் பெண்கள் 6 பேர். ஆரம்பக் கல்வியை அக்குறணை சாஹிராக் கல்லூரியில் கற்றேன். அங்கு ஏழாம் வகுப்பு வரையிலும் கற்றேன். அப்பொழுது முதலாம் வகுப்பில் அல்லது இரண்டாம் வகுப்பில் சித்தியடையவில்லை என்ற ஞாபகம் இருக்கிறது. அக்காலத்தில் சாரம் அணிந்து பாடசாலை அணிந்து செல்ல முடியும். ஆசிரியர்கள் சாரம் கட்டி கோட் அணிந்து வருவார்கள்.

அப்பாடசாலையில் ஓர் ஆங்கில வாத்தியார் இருந்தார். அவர் அக்குறணையைச் சேர்ந்தவர். அதிபரும் அக்குறணையைச் சேர்ந்தவர். அந்த அதிபர் சாரம் அணிந்து வரும் மாணவர்களுக்கு காற்சட்டை அணிவிக்க வேண்டும் என்ற ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அப்பொழுது கால எல்லையொன்றை குறிப்பிட்டு திகதியொன்றை நிர்ணயம் செய்திருந்தார்கள். ஆனால் மாணவர்கள் நூற்றுக்கு 10 பேர்தான் காற் சட்டை அணிந்து வந்திருந்தார்கள். ஏனைய மாணவர்கள் எவரும் பாடசாலைக்கு சமூகமளிக்க வில்லை. பின்பு மீண்டும் வந்த மாணவர்களை சாரம் அணிந்து வரும்படி திருப்பி அனுப்பினார்கள். அதற்குப் பின்னர் சாரம் அணிந்து கொண்டு வந்தார்கள். இது இரண்டாம் வகுப்பில் படிக்கும் போது நடந்த சம்பவம்.

என் தந்தையின் ஹோட்டல் குருநாகல் நகரில் புத்தளம் சந்தியில் இருந்தது. அது இப்போது இல்லை. அது உடைபட்டு விட்டது. தந்தை ஹோட்டல் வியாபாரம் செய்தார். நான் தந்தையின் ஹோட்டலில் இருந்து கொண்டு குருநாகல் தெலியாகொன்ன ஹிஸ்புல்லா பாடசாலைக்குச் சென்றேன். அங்கு 10 ஆம் ஆண்டு வரையிலும் படித்தேன். ஆனால் 10 ஆண்டில் பரீட்சையில் வகுப்பேற்றம் செய்யாமல் அதே வகுப்பில் இருக்கச் செய்து விட்டார்கள். க. பொ. த சாதாரணப் பரீட்சை எழுதுவதற்கு தகுதி போதாது, அடுத்த வருடம் பரீட்சை எழுதுங்கள் என்று என்னையும் இன்னும் ஓரிரு மாணவர்களையும் அனுப்பி விட்டார்கள். அவர்களுடைய கட்டளைக்கு இணங்க பரீட்சை எழுத வாய்ப்பு கிடைக்கவில்லை.அடுத்த வருடம் பரீட்சை எழுத அனுமதி கிடைத்தது. பரீட்சைக்கு தோற்றினேன்.

எனக்கு அந்தக் காலமே கிரகிக்கின்ற தன்மை அதிகம் என்பது இப்போதுதான் எனக்கு நன்கு விளங்குகிறது. ஏனென்றால் வகுப்பில் 30 பிள்ளைகள் இருந்தால் 27 அல்லது 28 ஆம் நிலைதான் வருவேன். ஒரு தடவை பாடசாலைக்கு கல்வித் திணைக்களத்தில் இருந்து கல்வி அதிகாரிகள் வந்தார்கள். விஞ்ஞானப் பாடத்திற்குப் பொறுப்பான கல்வி அதிகாரி ஒரு கேள்வி கேட்டார். நான் கிரகித்து அதற்குரிய பதிலைச் சொன்னேன். அவர் சென்றபின்பு வகுப்பிலுள்ள மற்றைய பிள்ளைகள் அனைவருக்கும் ஏசினார். வகுப்பில் நான் தான் கெட்டிக்காரப் பிள்ளை என்று அவர் நினைத்துக் கொண்டு செல்வார் என்று ஆசிரியர் சிரித்தார்.

எதைக் கேட்டாலும் நேரடி பதில் கூறாமல் மறைமுகமான பதிலைச் சொன்னேன். அது சரியான பதில் என்று அவர் கூறிவிட்டு இப்படியும் இலகுவாகவும் செய்ய முடியும் என்று அவர் விளக்கப்படுத்தினார். இது ஒரு என்னுடைய வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவமாகும்.

எனக்கு படிப்பு ஏறவில்லை. எனினும் இஸ்லாம் பாடத்திலும் விஞ்ஞானப் பாடத்திலும் எனக்கு ஆர்வம் இருந்தது.

க. பொ. த சாதாரணப் பரீட்சைக்கு முதலாவது தடவை தோற்றிய போது 1C,1S பாடங்களில் சித்தியடைந்தேன். இரண்டாவது தடவை தோற்றிய போது 1S மட்டும் எடுத்தேன். மூன்றாம் முறை எடுக்கவில்லை.

இதற்குப் பின் எனக்கு கல்வித் துறை சரிவராது. அது ஒரு வேப்பங்காய் மாதிரி இருந்தது. வியாபாரத் துறையில் முயற்சிகள் செய்ய ஆரம்பித்தேன்.



### உங்கள் வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவங்கள் பற்றிக் கூறுவீர்களா?

எங்கள் வகுப்பில் உள்ள மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் திரைப்படம் பார்க்கச் செல்பவர்கள் இருந்தார்கள். எனக்கும் பாடசாலை செல்லாமல் படம் பார்க்கச் செல்ல முடியும். எனினும் படம் பார்ப்பதற்கு பணம் வேண்டும். தந்தை 10 சதம் என்றாலும் எதற்கென கேட்டுத்தான் தருவார். நான் என்னுடைய வாழ்க்கையில் களவு என்று செய்திருப்பது என்னவென்றால் நான் வாப்பாவின் கடைக்கு 25 முட்டை சந்தைக்குச் சென்று வாங்க வேண்டும். சந்தையில் நான்கு, ஐந்து முட்டை கடைகள் இருக்கும். அந்நேரம் அம்முட்டைகளின் விலை 15 சதம் 10 சதம் என இருக்கும். கூடுதலான கடைகளில் 15 சதம் இருந்தால் ஒரு சில கடைகளில் 14 சதமாக இருக்கும். 15 சதத்திற்குத் தான் வாங்கினேன் என்று மிகுதிப் பணத்தை நான் எடுத்துக் கொள்வேன். அப்படி அதிகம் விலை இருந்தால் 25 முட்டைக்கு 24 முட்டைகள் வாங்கி வருவேன்.

அவ்வாறு வாங்கி வந்தாலும் மனதில் திக் திக் என்று பதற்றமாக இருக்கும். நான் வாங்கி வந்த முட்டையை இன்னுமொருவரை வைத்து அடுக்குபடி கூறினால் அகப்பட்டு விடுவேன் என்ற பயம் இருந்தது. வாங்கி வந்த உடனே முட்டைப் பெட்டிக்குள் வைத்து அடுக்கி விட்டுத்தான் செல்வேன். அது தான் நான் வாழ்க்கையில் செய்த முதல் தவறு.



### உங்களுடைய ஆரம்ப வியாபார முயற்சிகள் பற்றி

1975 இல் தந்தை ஹோட்டல் வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். ஆனால் ஹோட்டல் வியாபாரத் துறையின் மீது எனக்கு பெரியளவில் நாட்டமில்லை. பக்கத்தில் ஒரு சின்னக் கடையொன்று இருக்கிறது. அது 10x10 அளவுடையது அதனை வாங்கித் தாருங்கள் என்று கேட்டேன். அப்போது எனக்கு 18 வயது இருக்கும்.

அவ்வாறு இல்லையென்றால் பொதுச் சந்தையிலோ சரி அல்லது நடைபாதையிலோ சரி நான் வியாபாரத்தை ஆரம்பிக்கின்றேன் என்று வீட்டில் தெரிவித்தேன். ஹோட்டல் வியாபாரம் எனக்கு சரிவராது என்றேன். தந்தை அக்கடையை வாடகைக்கு எடுத்துத் தந்தார். அப்பொழுது அக்கடைக்கு மாதம் 40 ரூபா கூலி அறவிட்டார்கள். இக்கடையில் வியாபாரம் செய்வதற்காக முதலீடாக 13000 ரூபாவுக்கு பொருட்கள் வாங்கி தந்தை போட்டுத் தந்தார். அப்பொழுது 13 ஆயிரம் என்று கூறினால் நாங்கள் பெரியளவில் நினைப்போம். புதிய கடைக்கு பொருட்களை குருநாகல் நகரில் உள்ள மொத்த வியாபாரக் கடை ஒன்றில் இருந்தது தான் வாங்கினேன். அப்போது டோச் மூன்று வாங்கினால் டோச் மூன்றையும் வெளியேடுத்து அடுக்கி வைத்து விட்டு வெறும் பெட்டிகளை வேறாக அடுக்கி வைப்பேன். சிலர் 13000 ரூபாவுக்கு ஒரு லொரி வியாபாரப் பொருட்களை கொண்டு வரலாம் என்று நினைப்பார்கள். ஏனென்றால் அது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சி காலம். அப்பொழுதுபொருட்களின்விலைஅதிகமாக இருந்தது.

எந்தப் பொருட்கள் வாங்கினாலும் இடத்தை நிரப்புவதற்காக பொருட்களை வெளியெயும் அதன் பெட்டிகளை வேறாக அடுக்கி வைப்பேன். சாதாரணமாக ஒரு கிளாஸ் பெட்டி 7.50 சதம் விற்பனை செய்யப்படும். அதைத் திறந்துதான் வைப்பேன். மூடி வைத்தால் மூன்று பெட்டிகள் வைக்க வேண்டும். பரந்தளவில் கடை முழுவதும் பொருட்கள் இருப்பதாக மக்களுக்குப் புலப்பட வேண்டும். அந்நேரம் ஒரு நாளைக்கு 150 ரூபாவுக்கு வியாபாரம் நடக்கும். எந்த வியாபாரமாக இருந்தாலும் விடுவதில்லை.

### உங்களுடைய வியாபார நிறுவன வெற்றிக்கு ஏதுவாகப் பயன்படுத்திய தந்திரோபாயத் திட்டமும் முகாமைத்துவம் பற்றிக் கூறுவீர்களா?

நிச்சயமாக அந்தக் கடையை நான் அறிந்த வகையில் ஏழு, எட்டுப் பேர் செய்து விட்டு வியாபாரம் செய்ய முடியாமல் மூடப்பட்ட கடை.ஒருவர் வந்து பேனை ஒன்றை கேட்கும் பட்சத்தில் எங்களிடம் மூன்று பேனாக்கள் இருக்குமாயின் அதிலும் எங்களிடம் இல்லாதொன்றை கேட்கும் போது கடையிலுள்ள பையனிடம் ஸ்டோரில் இருந்து எடுத்து வா என்று சாவியைக் கொடுப்பேன். மொத்த வியாபாரக் கடைக்குச் சென்று தேவையான பேனாவை வாங்கி வருவான். எந்தப் பொருளையும் இல்லை என்று சொல்லாமல் தேவையான பொருட்களை நுகர்வோர்களுக்கு வாங்கி விற்பனை செய்து வந்தேன். இப்படி படிப்படியாக வியாபாரம் செய்து வந்தேன்.

இவ்வாறு செய்து கொண்டு செல்லும் போது முதல் வருடம் 12000 ரூபா ஆதாயம் கிடைத்தது. வரவு செலவு கணக்குகளை பார்த்தவர் எங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் என் தந்தையிடம் சென்று " நாங்கள் கணக்குப் பார்த்தோம் 12000 ரூபா இலாபம் இருந்தது" என்று தெரிவித்தார். அதற்கு என் தந்தை "இல்லை. அக்கணக்குப் பிழையாக இருக்கும். இன்னுமொரு தடவை பாருங்கள்" என்று கூறினார். அதற்கு அவர் "இல்லை இல்லை சரியாகத்தான் பார்த்தோம் 12000 ரூபா தான் ஆதாயம் கிடைத்தது" கணக்குப் பார்த்தவர் கூறினார். அதற்கு அவர் "இப்படி வியாபாரம் பண்ணினால் ஆறு மாதங்களில் கடையை மூடி விட்டுத்தான் செல்ல வேண்டும்" என்று என் தந்தை அவரிடம் தெரிவித்திருந்தார்.

கல்யாணம், கந்தூரி எந்த விசேட வைபவங்கள் வந்தாலும் கடையை மூடிப் போட்டு செல்ல மாட்டேன். ஞாயிறு, போயா தினங்களிலும் கடை மூடமாட்டேன். என்ன வந்தாலும் வியாபாரம் தான் என்னுடைய முழு நோக்கமாக இருந்தது. கடை உள்ளுக்குள் தான் நான் படுப்பேன். என்னுடைய நண்பர் ஹூஸைன் மாஸ்டர், ஹிதாயத்துல்லா ஹாஜியார் ஆகிய இருவரும் வருவார்கள். எங்கேயாவது போவதற்கும் சாப்பிடுவதற்கும் அழைப்பார்கள். ஆனால் அவர்களே சொல்வார்கள் "அவன் பொத்தான்களை எண்ணி எண்ணி இருப்பான் அவன் வரமாட்டான்" என்று கூறி விட்டு போய் விடுவார்கள். நான் எங்கேயும் போவதில்லை.

கடையின் நிலத்தின் கீழ் தான் படுப்பேன். நாளைக்கு வியாபாரம் எப்படிச் செய்வது சாமான்கள் போதுமா என்ற சிந்தனைதான் எப்போதும் மனதில் ஓடிக் கொண்டிருக்கும். இவ்வாறு கடை திறந்து ஐந்து மாதத்தில் ஒரு பெருநாள் வந்தது. பெருநாளைக்கு நான் உடை வாங்கவில்லை. உடை வாங்கினால் இந்த முதலில் 200 குறைந்து விடும் என்ற மன நிலை இருந்தது. பெருநாள் முடிந்த பின்பு இந்தச் சம்பவத்தை கேள்வியுற்ற என் தந்தை என்னை அழைத்து ஏசினார். "ஏன் பெருநாளுக்கு புதிய ஆடை வாங்க வில்லை. என்னிடம் சொல்லியிருந்தால் நான் வாங்கித் தந்திருப்பேன். ஏன் என்னிடம் சொல்லவில்லை" என்று எனக்கு ஏசினார். காலம் நேரம், உடல் உழைப்பு, பொருள் சக்தி அனைத்தையுமே கடைக்கு முதலீடு செய்தேன்.








ரசல் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இரவு கிறிஸ்மஸ் கரோல் இசை நிகழ்வு கொழும்பில் அண்மையில் நடைபெற்றது. சிறந்த அலங்காரத்திற்கான விருதுகளை பேஸ்ட்ரி மற்றும் ரசல் பேக்கரி பகுதியினர் வென்றுள்ளனர்.

# பெண்களின் நகைகளை கொள்ளையடித்த இரு சந்தேக நபர்கள் கைது

**பாணந்துறை மத்திய குறூப் நிருபர்**

ஸ்கூட்டர் மோட்டார் சைக்கிள் உதவியுடன் பெண்களை பின்தொடர்ந்து நகைகளை கொள்ளையடித்த இரண்டு சந்தேக நபர்களை பாணந்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

புத்தாண்டு காலத்தை முன்னிட்டு பாணந்துறை தெற்கு பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின் போதே இரண்டு சந்தேக நபர்களும் கைதாகியுள்ளனர்.

இந்த சந்தேக நபர்களிடமிருந்து நான்கு பவுன் தங்கம் மற்றும் சைக்கிள் வண்டியொன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

## பேருவளையில்

# போதைப்பொருளுக்கு எதிராக விழிப்புணர்வு ஊர்வலம்

## மத்ரஸாக்களின் சிறார்கள் பங்கேற்பு



**பேருவளை விசேட நிருபர்**

அதிகரித்து வரும் போதை பொருள் பாவனையை பூண்டோடு இல்லாதொழிக்கவும் போதைப்பொருள் பாவனையற்ற சிறந்த சமூகத்தை உருவாக்கவும், போதைப்பொருள் பாவனைக்கு தூண்டும் தீய சக்திகளை இனங்கண்டு அவர்களை சட்டத்தின் முன் நிறுத்தவும் நாடு பூராகவும் விழிப்புணர்வு நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த வேலைத் திட்டத்தின் ஓர் அங்கமாக பேருவளையில் போதைப்பொருள் பாவனைக்கு எதிரான மாபெரும் விழிப்புணர்வு நிகழ்வொன்று அண்மையில் இடம்பெற்றது.

பேருவளை அல் மத்ஸத்துல் முஸ்தபவிய்யா,அல் மத்ரஸத்துல் நபவிய்யா,அல் மத்ரஸத்துல் அமீனிய்யா,அல் மத்ரஸத்துல் ஸஃதிய்யா ஆகிய குர்ஆன் மத்ரஸா ஆகியவற்றில் கல்வி பயிலும் மாணவர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த விழிப்புணர்வு நிகழ்வில் பெருமளவிலான மாணவர்கள் பங்குபற்றினர்.

போதை பொருள் பாவனையை தடுக்கும் வகையிலும் அதனால் ஏற்படக் கூடிய பாரதூரமான ஆபத்துக்கள், சமூக சீர்கேடுகள் தொடர்பில் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பாதாகைகளை நிகழ்வில் பங்குபற்றிய மாணவர்கள் ஏந்திச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

மத்ரஸாக்களின் அதிபர்கள், போதனாசிரியர்கள், உலமாக்கள், நபவிய்யா அமைப்பின் முக்கியஸ்தர்கள், பெற்றோர்கள் என பலரும் இதில் பங்குபற்றினர்.



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஏற்பாட்டில் மாதாந்தம் நடைபெறும் என்றும் இனியவை நிகழ்வு நிலையத்தின் ஆனந்த சமரக்கோன் கலையகத்தில் நிலையத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்கவின் தலைமையில் (29) வியாழக்கிழமை மாலை நடைபெற்ற போது பிரபல பின்னணி பாடகி கலாவதி மற்றும் சூரிய குமார் முத்தழகு ஆகிய இருவருக்கும் நிலையத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசீம் உமர் வானொலி பெட்டிகள் பரிசளிப்பதை படத்தில் காணலாம்.

## வங்கிகள் மற்றும் நிதிசார் நிறுவனங்களினால் வைப்புக்கள் தொடர்பாக செலுத்தப்பட்ட வட்டியில் முன்வருமான வரிக்குறைப்பு (AIT)

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க சட்டம் மற்றும் 2021 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க மற்றும் 2022 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க திருத்தப்பட்ட சட்டத்தின் பிரகாரம் 5% ஆக **2023 ஜனவரி 1 ஆம் திகதியிலிருந்து** செயல்வலுப்பெறும் வகையில் (விதிவிலக்கப்பட்ட வரி நீங்கலாக) **இலங்கை ரூபாவில்** எந்தவொரு நபருக்கும் வங்கிகள் மற்றும் நிதிசார் நிறுவனங்களினால் இஸ்லாமிய நிதிசார் கொடுக்கல் வாங்கல்களிலிருந்து வட்டியாக, தள்ளுபடி அல்லது வருமானமாக செலுத்தப்படும் எந்தவொரு தொகைகளுக்கும் முன் வருமான வரி கழித்தல் தொடர்பாக வங்கிகள் மற்றும் நிதிசார் நிறுவனங்களின் அனைத்து வைப்பாளர்களுக்கும்/வாடிக்கையாளர்களுக்கும் இந்த அறிவித்தல் மூலமாக தகவல் வழங்கப்படுகின்றது.

வங்கியொன்றில் அல்லது நிதிசார் நிறுவனங்களில் பராமரிக்கப்படும் எந்தவொரு கணக்கிற்கும் வட்டி, விலைகுறைப்பு அல்லது வருமானம் ஆகியன செலுத்தப்படும், வரவு வைக்கப்படும் மீள்முதலீடு செய்தல், திரட்டப்பட்ட அல்லது முதலீடாக்கப்பட்ட வேளைகளில் பொருத்தமான வகையில் முன்வருமானவரி கழிக்கப்படும்.

**உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்டதும் வங்கிகள் மற்றும் நிதிசார் நிறுவனங்களுக்குமான SEC/2022/E/02 என்ற இலக்கமுடைய சுற்றறிக்கையானது www.ird.gov.lk என்ற உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் இணையதளத்தில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் இப்போது காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.**

**வரையறுக்கப்பட்ட இலங்கை வங்கிகள் சங்கம் (உத்தரவாதமுடையது)**

**பொறுப்பு துரப்பு:** வரையறுக்கப்பட்ட (உத்தரவாதமுடையது) இலங்கை வங்கிகள் சங்கமானது இந்த தொடர்பாடலானது தகவலுக்கு மாத்திரமே என வலியுறுத்துகின்றதுடன் பொதுமக்களை அவர்களின் உரித்தான வங்கிகள் அல்லது நிதிசார் நிறுவனங்கள் அல்லது உள்நாட்டு இறைவரி திணைக்களம் ஆகியவற்றுடன் மேலதிக தெளிவுறுத்தல்களுக்கு தொடர்பு கொள்ளும்படி கண்டிப்பாக அறிவுரை வழங்கப்படுகின்றனர்.

## ශ්‍රී/ස ලංකා සීනි (පෞද්ගලික) සමාගම
## வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்
## LANKA SUGAR COMPANY (PRIVATE) LIMITED

**இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம்**

### விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு**
**சிறு ஏற்றுமதி பயிர்த் தோட்ட அபிவிருத்திப் பிரிவு**

### 2023 ஆம் ஆண்டுக்கு நிலத்தோற்ற மேம்பாட்டு இயந்திரங்களை வாடகைக்கு பெறுவதற்கான தேசிய போட்டிரீதியான விலைமனு

பெலவத்த பிரிவுக்கு நிலத்தோற்ற மேம்பாட்டு இயந்திரங்களை வாடகைக்கு வழங்குவதற்கு ஆர்வமுடைய தரப்புகளிடம் இருந்து வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்தின் திணைக்கள பெறுகைக் குழு (DPC), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இத்தால் கோரப்படுகின்றன.

1. கீழுள்ள அட்டவணைக்கு அமைய மீளளிக்கப்படாத கட்டணத்தை ரொக்கப் பணத்தில் செலுத்தி 2023 ஜனவரி 18 ஆம் திகதி வரை 9.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை வேலை நாட்களில் இல. 27, மல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04இல் அமைந்துள்ள வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்திற்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை விலைமனுதாரர்களால் கொள்வனவு செய்யலாம்.

| வ/இ | இயந்திர வகை | தேவைப்படும் இயந்திரங்கள் | எதிர்பார்க்கப்படும் இயந்திர வேலைக் காலம் மணித்தியாலம்/ கி.மீ. | மீளளிக் கப்படாத வைப்பு | விலை மனு பிணை | குறிப்பு இல. |
|---|---|---|---|---|---|---|
| 01 | Motor Grader வாடகைக்கு | 08 | 7,060 மணித்தியாலம் | 14,000.00 | 830,000.00 | PR 7472/7495 |
| 02 | டோசர் வாடகைக்கு | 10 | 994 மணித்தியாலம் | 4,500.00 | 180,000.00 | PR 7492 |
| 03 | Backhoe Loader வாடகைக்கு | 06 | 6,143 மணித்தியாலம் | 10,000.00 | 400,000.00 | PR 7493/94/96/89 |
| 04 | டிப்பர் லொரி வாடகைக்கு | 03 | 86,200 கி.மீ. | 8,000.00 | 250,000.00 | PR 7497/7490/7511 |
| 05 | ரோட் ரோலர் வாடகைக்கு | 02 | 1,020 மணித்தியாலம் | 3,000.00 | 70,000.00 | PR 8251/7491/7512 |
| 06 | டோசர் வாடகைக்கு | 05 | 1,439 மணித்தியாலம் | 8,000.00 | 250,000.00 | PR 7443/8252/8253 |
| 07 | Excavator வாடகைக்கு | 06 | 8,507 மணித்தியாலம் | 12,500.00 | 100,000.00 | PR 6966/8256/8254 |
| 08 | Lowbed Trailer with prime Mover வாடகைக்கு | 01 | 120,000 கி.மீ. | 2,000.00 | 55,000.00 | PR 8257 |

2. விலைமனுதாரர் விலைமனு ஆவணங்களுடன் மீளளிக்கப்படாத வைப்பு ரசீதை இணைத்தல் வேண்டும். அவ்வாறு இணைக்கத் தவறினால் விலைமனு நிராகரிக்கப்படும்.
3. விலைமனுக்களை 2023 ஜனவரி 19 ஆம் திகதி 14.00 மணி தாமதிக்காது தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல. 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04 என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறையில் கைகளால் கொண்டுவந்து சேர்ப்பது, பதிவுத் தபால், விரைதூதர் மூலம் அனுப்ப வேண்டும் என்பதோடு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "2023ஆம் ஆண்டுக்காக நிலத்தோற்ற மேம்பாட்டுஇயந்திரங்களை வாடகைக்குப் பெறும் கேள்விமனு" என்று தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அதன் பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் நிகழ்வில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்கலாம். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. கேள்விமனுக் குழுவின் முடிவு இறுதியானதாகும்.
3. அனைத்து விலைமனுக்களும் விலைமனு திறக்கப்படுவதில் இருந்து 119 நாட்களுக்கு செல்லுபடியானதாக மேலுள்ள அட்டவணைக்கு அமைய "விலைமனு பிணையை" கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவன - பெறுகை முகாமையாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் (தொ. +94 11 2505558, கைபேசி + 94 077 010 3359, தொலைநகல் +94 11 2500674, (மின்னஞ்சல்: sapumal@lsal.lk).

**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு**
**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்**
**இல. 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04.**

**பாதுகாப்பு அமைச்சு**

## தேசிய பாதுகாப்பு கற்கைகள் நிறுவனம்

## பதவி வெற்றிடம்

பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்குகின்ற தேசிய பாதுகாப்பு கற்கைகள் நிறுவனத்தில் கீழ்வரும் பதவி வெற்றிடத்திற்கு தற்காலிக அடிப்படையில் சேர்த்துக்கொள்வதற்காக தகுதியுடைய இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. பதவி** : **ஆராய்ச்சி பகுப்பாய்வாளர் (வெற்றிடம் 02)**

**மாதாந்த கொடுப்பனவு** : **அடிப்படை சம்பளம் ரூ.53,150/- + வாழ்கை செலவு கொடுப்பனவு ரூ.7,800/- = ரூ.60,950.00**

**தகைமைகள்** : **கல்வி தகைமைகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டமளிக்கப்படும் நிறுவனமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையத்தில் அல்லது வழங்கப்பட்ட சர்வதேச தொடர்புகள்/ சமாதானம் மற்றும் மோதல்களைத் தீர்த்தல் கல்வி/ பாதுகாப்பு கற்கைகள் / புலனாய்வு சேவைகள் கல்வி/ தீவிரவாதம்/ சமூக விஞ்ஞானம்/ அரசறிவியல்/ சட்டம்/ பொருளியல் தொடர்பான இளங்களை பட்டம் மற்றும் ஆராய்ச்சி பகுப்பாய்வில் டிப்ளோமா நிலை பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

**அனுபவம்** : ஆராய்ச்சி செயற்பாடுகள் தொடர்பான துறையில் பெற்றுக்கொண்ட முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தது 02 வருட அனுபவம் பெற்றிருத்தல்

**வயது** : 21 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**02. பதவி** : **உதவி ஆராய்ச்சியாளர் (வெற்றிடம் 03)**

**மாதாந்த கொடுப்பனவு** : **அடிப்படை சம்பளம் ரூ.32,200/- + வாழ்கைச் செலவு கொடுப்பனவு ரூ.7,800/- ரூ.40,000.00**

**கல்வி தகைமைகள்** : கல்வி தகைமைகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டமளிக்கப்படும் நிறுவனமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையத்தில் அல்லது வழங்கப்பட்ட சர்வதேச தொடர்புகள்/ சமாதானம் மற்றும் மோதல்களைத் தீர்த்தல் கல்வி/ பாதுகாப்பு கற்கைகள்/ புலனாய்வு சேவைகள் கல்வி/ தீவிரவாதம்/ சமூக விஞ்ஞானம்/ அரசறிவியல்/ சட்டம்/ பொருளியல் தொடர்பான பட்டப்பின் கல்வி பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

**அனுபவம்** : குறித்த பதவி தொடர்பான முன்அனுபவம் காணப்படின் விசேட தகைமையாக கருதப்படும்.

**வயது** : 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

- ஆட்சேர்ப்பு முறை : தகுதி மதிப்பு நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் ஆகக்கூடிய புள்ளிகளை பெறுகின்ற விண்ணப்பதாரி சேர்த்துக்கொள்ளப்படுவர்.
- மேற்கூறிய பதவிக்கு தகுதியுடைய விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்பத்திரத்தினை **2023.01.15** திகதியில் அல்லது அதற்கு முன்னர் **செயலாளர், பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு தலைமையக கட்டிட தொகுதி, ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே** என்ற முகவரிக்கு பதிவு தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.
- கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் **"தேசிய பாதுகாப்பு கற்கைகள் நிறுவனத்திற்கு ஆராய்ச்சி பகுப்பாய்வாளர் / உதவி ஆராய்ச்சியாளர் பதவிகளுக்காக விண்ணப்பக்கோரல்"** எனத் தெளிவாக குறிப்பிடல் வேண்டும். உரிய தினத்திற்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பபத்திரங்கள் நிராகரிக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலதிக தகவல்களுக்கு **www.defence.lk** இணையத்தளத்திற்கு பிரவேசிக்கவும்.

செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு
பாதுகாப்பு தலைமையக கட்டிட தொகுதி,
ஸ்ரீ ஜெயவர்தனபுர , கோட்டை.

**பெருந்தோட்ட கைத்தொழில்கள் அமைச்சு**

## தெங்கு அபிவிருத்தி அதிகார சபை

### வருடாந்த பதிவு செய்தல் - 2023 ஏற்றுமதியாளர்கள். ஏலவிற்பனைதாரர்கள்/ தரகர்கள், விற்பனையாளர்கள் மற்றும் பெருந்தோட்ட உரிமையாளர்கள்

1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் ஏற்பாடுகள் மற்றும் 1972 ஆம் ஆண்டின் 15009/1 என்ற இலக்கமுடைய அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், அனைத்து தெங்கு மற்றும் தெங்கு அடிப்படையிலான உற்பத்திகளின் ஏற்றுமதியாளர்கள், ஏலவிற்பனைதாரர்கள்/ தரகர்கள், விற்பனையாளர்கள் மற்றும் தென்னந் தோட்ட உரிமையாளர்கள் ஆகியோர் வருடந்தோறும் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையுடன் அவர்களை பதிவு செய்தல்/ புதுப்பித்தல் வேண்டும்.

2023 ஆம் ஆண்டிற்காக மேலே குறிப்பிட்டுள்ள வகுதிகளின் புதிய விண்ணப்பதாரிகளை பதிவு செய்தலுக்காகவும் பதிவு செய்தலை புதுப்பித்தலுக்காகவும் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையினால் விண்ணப்பங்கள் இப்போது பெற்றுக் கொள்ளப்படுகின்றன. **www/cda.gov.lk** என்ற தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் இணையதளத்திலிருந்து விண்ணப்பங்கள் பதிவிறக்கம் செய்யப்படலாம்.

தெங்கு மற்றும் தெங்கு அடிப்படையிலான ஏற்றுமதியாளர்கள் நீங்கலாக மேலே குறிப்பிட்டுள்ள வகுதிகளுக்கான உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் கீழே குறிப்பிட்டுள்ள முகவரிக்கு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"Registration for the year 2023 at MD&R"** என குறிப்பிடப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**www.cda.gov.lk என்ற தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் இணையதளத்தினூடாக ஒன்லையினில் தெங்கு மற்றும் தெங்கு அடிப்படையிலான உற்பத்திகளின் ஏற்றுமதியாளர்களின் வகுதிக்குட்பட்டவர்கள் தம்மை பதிவு செய்து கொள்ளலாம்.**

**தலைமை அலுவலகம்**
**தெங்கு அபிவிருத்தி அதிகார சபை**
**இல.: 54, நாவல வீதி,**
**நாராஹேன்பிட்ட, கொழும்பு-05.**
**தொலைபேசி : 011-2502501**
**மின்னஞ்சல் : chairmancda.gov@gmail.com**

**கோட்டை அலுவலகம்**
**இல.: 11, டியுக் வீதி,**
**கொழும்பு-01.**
**தொலைபேசி: 011 2421028**

**இணையதளம்: www.cda.gov.lk**

**கீர்த்தி ஸ்ரீ வீரசிங்ஹ**
**தலைவர்.**



LECO

# வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்

# மின் விநியோகத் தடை

பின்வரும் இடங்களில் குறித்துரைக்கப்பட்ட திகதிகளில் அத்தியாவசிய நிர்மாண வேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள் நிமித்தம் மின்சார விநியோகம் தடைப்படுமென வாடிக்கையாளர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். பொதுவான மின்சாரத் தடைக்கான நேரம் மு.ப. 8.00 மணி முதல் பி.ப. 5.00 மணி வரையாகும். எவ்வாறாயினும் ஒவ்வொரு பகுதிகளுக்கான நேரங்கள் வெவ்வேறாகக் குறித்துக் காட்டப்பட்டுள்ளன.

## 2023 ஜனவரி மாதத்திற்கான மின்சாரத் தடை அட்டவணை

### திகதிகள் மற்றும் மின் கம்பியிணைப்புள்ள இடங்கள்

## காலி

1 **ஜனவரி 03 பி.ப. 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
ஸ்ரீ ஹேமானந்த மாவத்தை, பட்டகன்வில வீதி, வக்வெல்ல வீதி (பகுதி), கெலேகன வீதி, வேவெல்வல வீதி, தலன்கஹஹேன வீதி, ரிச்மண்ட் ஹில் வீதி (பகுதி), விஸ்கம் வீதி, கல்கெட்டிய, வெக்குனாகொட வீதி (பகுதி), சப்புமல் பிளேஸ், தர்மராஜ மாவத்தை (பகுதி), கும்பல்வெல ஒழுங்கை, அலபலாவ வீதி, எலியட் வீதி, சங்கமித்த ஒழுங்கை, மடபாத்த 2ஆம் ஒழுங்கை, ஹுமெஸ் வீதி (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

2 **ஜனவரி 04, 11, 18**
தன்கெதர வீதி, ஹிரிம்புர வீதி, ஜிப்ரியா மாவத்தை, சரணங்கர வீதி, ஸ்டீல் வீதி, செனரத்கடே சந்தி, கிரிப்ஸ் வீதி, மல்வத்த டெம்பல் வீதி, சமகிவத்த, பெலிகஹ சந்தி, ஜயவர்தனாராம வீதி, டிக்சன் வீதி (பகுதி), மடபாதல வீதி, டொனால்ட் ஜேன்ஸ் மற்றும் கிளை வீதிகள்

3 **ஜனவரி 04, 18**
வக்வெல்ல வீதி, ஹுமெஸ் வீதி, மினுவங்கொட, எலியட் வீதி (பகுதி), அலபலாவ வீதி, கந்தேவத்த வீதி (பகுதி), குணரத்ன மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

4 **ஜனவரி 05 பி.ப. 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
மாத்தறை வீதி, கட்டுகொட வீதி, பெற்றோலியக் கூட்டுத்தாபனம், அக்குரெஸ்ஸ வீதி, கட்டுகொட பள்ளிவாசல் வீதி, மாகாலி, கில்பேட் ஒழுங்கை, உடுகம வீதி (பகுதி) தெவட்ட, சேர்கியூலர் வீதி, மாகவத்த வீதி, கிளோசன்பர்க் வீதி மற்றும் கிளை வீதிகள்

5 **ஜனவரி 09 பி.ப. 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
நாகரத்ன வீதி, வெக்குனாகொட வீதி மற்றும் ஒழுங்கை, ரேவத்த வீதி (பகுதி), கல்கெட்டி குறுக்கு வீதி (பகுதி), ஹீன்பென்டல மற்றும் கிளை வீதிகள்

6 **ஜனவரி 11, 18**
ஹிரிம்புர வீதி (பகுதி), ஸ்ரீ ஹேமானந்த வீதி மற்றும் கிளை வீதிகள்

7 **ஜனவரி 12 பி.ப. 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
விஜேகுலசூரிய மாவத்தை, கங்காராம வீதி, மாத்தறை வீதி (பகுதி), பெட்டிகலவத்த, தலபிட்டிய, கோன்கஹ வீதி, சேர்கியூலர் வீதி, கில்பேட் ஒழுங்கை, பிரதான வீதி (பகுதி), பண்டாரநாயக்க பிளேஸ் (பகுதி), தக்கியா வீதி மற்றும் ஒழுங்கை, அப்துல் வஹாப் மாவத்தை, சமகி மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

8 **ஜனவரி 13 பி.ப. 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
காலி வீதியில் லைட் ஹவுஸ் ஹோட்டலிலிருந்து புகையிரத நிலையம் வரை, கலுவெல்ல, மல்வத்தை வீதி, ஜெயில் வீதி, டெம்பிளஸ் வீதி, மஹமோதர, ரிச்மன்ட் ஹில் வீதி (பகுதி), அபேசுந்தர வீதி, மஹமோதரவத்த, கந்தேவத்த வீதி, புத்தசிங்க வீதி, ஓசனாகொட (பகுதி), சியம்பலகஹவத்த மற்றும் கிளை வீதிகள்

9 **ஜனவரி 16 பி.ப. 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
வக்வெல்ல வீதி, புன்கசார மாவத்தை, ஹெவ்லொக் வீதி, சைனா கார்டன், விளையாட்டு மைதான வீதி, காமினி மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

10 **ஜனவரி 17 பி.ப. 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
ஹிரிம்புர வீதி மற்றும் ஒழுங்கை, கித்துலன்பிட்டிய வீதி, புதிய ஒழுங்கை, மடவலமுல்ல, டொரிங்டன் டெரஸ், பாடசாலை ஒழுங்கை மற்றும் கிளை வீதிகள்

11 **ஜனவரி 18**
அலபலாவ வீதி, எலியட் வீதி, சங்கமித்த ஒழுங்கை, மடபாத்த 2ஆம் ஒழுங்கை, வக்வெல்ல வீதி (பகுதி), ஹுமெஸ் வீதி (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

12 **ஜனவரி 18**
ஹுமெஸ் வீதி, விஸ்கம் வீதி, தேவசுரேந்திர மாவத்தை, வக்வெல்ல வீதி (பகுதி), கல்வடுகொட, விமலசுரேந்திர மாவத்தை, டெம்பள் வீதி, கந்தேவத்த வீதி, ரிச்மண்ட் ஹில் வீதி, ஹீன்பென்டெல்ல வீதி (பகுதி), பேதுருவல சந்தி, ஓசானாகொட வீதி, போபே குறுக்குத் தெரு, தஹநாயக்க மாவத்தை, பன்கஹலங்கார மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

13 **ஜனவரி 19 பி.ப. 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
எச். கே. எட்மன்ட் மாவத்தை (பகுதி), நாகஹாவத்த பிளேஸ், மஹவத்த, மல்திபே 3ம் ஒழுங்கை, ஹேலி வீதி, எத்திலிகொட வீதி, கபுஹென்பொல, மில்லிதுவ, சதுஜன வீதி, மொரிஸ் வீதி, செம்சன் ராஜபக்ச வீதி, பிரவுன்ஸ் வீதி (பகுதி), லபுதுவ மற்றும் கிளை வீதிகள்

14 **ஜனவரி 20 பி.ப. 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
அப்பர் டிக்சன் வீதி, லோவர் டிக்சன் வீதி (பகுதி), மகுளுவ புதிய ஒழுங்கை, வெல்சன்புர, சைனா கார்டன், வக்வெல்ல வீதி (பகுதி). தல்பேர்ட் டவுன் 1ம் மற்றும் 2ம் ஒழுங்கைகள், பிரதான வீதி (பகுதி), ஒருப்புவத்த, ஒல்கட் மாவத்தை, காமினி மாவத்தை (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

## ஹிக்கடுவ

1 **ஜனவரி 05 பி.ப. 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
காலி வீதியில் தொட்டகமுவ சந்தியிலிருந்து பஹியன் புத்தர் சிலை வரை, கலுபே, அலுத்வெல வீதி, நவகன்ன கொலனி வரை, சீனிகம டெம்பள் வீதி, மலவன்ன குறுக்கு வீதி, கலுபே வீதி, முனுகொட வீதி மற்றும் கிளை வீதிகள்

2 **ஜனவரி 12 பி.ப. 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
திரனகம வீதி, திரனகம, ஹெட்டிகேவத்த, கமகேவத்த, பட்டுவத்த, கட்டுகோலிய வீதி, கொலம்பகேவத்த, தொடந்துவ, மயான வீதி, ஹெரலிகஸ்வத்த, தெல்கஸ்துவ, பன்வில பத்தான, டெம்பள் வீதி, ஜங்கல் ஹோட்டல் மற்றும் கிளை வீதிகள்

3 **ஜனவரி 17 பி.ப. 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
பூஸா டெம்பள் வீதி, புதிய கந்தல வீதி, டொலிகந்த வீதி, பூஸா பரணவத்த, திலக்கரத்ன மாவத்தை, கப்புமுல்ல, பூஸா இராணுவ முகாம் வீதி, கந்தல வீதி, கப்புமுல்ல, டெம்பிள் வீதி, விஜயகம, ஜயசேன மாவத்தை, மெதகொட வீதி, பூஸா டெம்பள் வீதி, கதுருப்ப வீதி, மு.னு.ரு. மாவத்தை, வதுரவில வீதி மற்றும் கிளை வீதிகள்

4 **ஜனவரி 19 பி.ப. 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
பத்தேகம வீதி புகையிரதக் கடவையிலிருந்து நலங்கஸ்தெனிய வரை, சோரத மாவத்தை, மில்ல வேவல வீதி, ஜினசேன மாவத்தை, எகொடகொட வீதி, வடுகொட வீதி, ஜோன் சில்வா மாவத்தை, கிரஹந்திகொட வீதி, ஜோமஹந்திகொட, மஹவத்த வீதி, குருந்துவத்த, சுதுவெல்ல வீதி, ஸ்ரீ சுமங்கள வீதி, பொல்வத்தை, காலி வீதியில் ஹிக்கடுவ பீச் ஹோட்டலிலிருந்து ஹிக்கடுவ சந்தி வரை, அமரசேன மாவத்தை (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

## அம்பலாங்கொட

1 **ஜனவரி 19 பி.ப. 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
காலி வீதி மாதம்பை சந்தியிலிருந்து கொடகம தெல்வத்த சந்தி வரை, செனரத் ராஜகருணா மாவத்தை, கஹவ, பட்டபொல வீதி, பாசல் மாவத்தை, கல்துவ வீதி, வேரகொட, கல்துவ, மீட்டியாகொட வீதி, வென்னமுல்ல, கொடகம வீதி மற்றும் கிளை வீதிகள்

## களுத்துறை

1 **ஜனவரி 05 மு.ப. 9.00 முதல் ந.ப. 12.00 வரை**
பீரிஸ் மாவத்தை, கங்காராம வீதி, சீ பீச் வீதி, ஸ்ரீ சுமங்கள வீதி மற்றும் கிளை வீதிகள்

## பயாகல

1 **ஜனவரி 04**
காலி வீதியில் தலுவத்த சந்தியிலிருந்து ரொக்லன்ட் வீதி சந்தி வரை, யட்டதொல வீதி (பகுதி), மாபிட்டிய, தியலகொட, சென்ட் வின்சன்ட் வீதி, இந்திரில்லகொட மற்றும் கிளை வீதிகள்

2 **ஜனவரி 09**
லிபர்டி மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

3 **ஜனவரி 11**
காலி வீதி (பகுதி), மகல்கந்த, ஜனராஜபுர, அளுத்ஹேன, புபுலவத்த, புபுலந்த லேன்ட் சேல், அம்பலன்பொல, சாம மாவத்தை, குருந்துவத்த, மரக்கலவத்த, ஹேன வீதி, ரொக்லன்ட் வீதி, பெர்னாண்டோ பிளேஸ் மற்றும் கிளை வீதிகள்

4 **ஜனவரி 11**
சென் வின்சென்ட் மாவத்தை, நுககஹலந்த மற்றும் கிளை வீதிகள்

5 **ஜனவரி 18 பி.ப. 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
முன்ஹேன (பகுதி), பள்ளியவத்த, குருந்துகஸ்முல்ல, போகஹவத்த, அலோபோபடவத்த, போமியகஹலந்த, ஆனந்தகம, பெட்டதெனிய, 80 ஏக்கர், பஹலவத்த மற்றும் கிளை வீதிகள்

6 **ஜனவரி 20 பி.ப. 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
கட்டுகுருந்தலஸ்கந்த, குருப்புகொட, கபடாகொட, மஹகம்மெத்த, கோமரகந்த, கோமரகொட, கப்புகொட, கப்புகொட, முனசிங்ககொட, வேரகல்கந்த, பொத்துவில வீதி (பகுதி), யட்டதொல வீதி, ஆயுர்வேத வீதி, ஹெம்பரவில, வேரகல, கட்டுகுருந்தலஸ்கந்த, மில்லகஸ்துடுலந்த, ஹொரகஸ்கெலே, காமினி அத்துகோரளகம, பட்டதெனிய (பகுதி), சிசில்தியலந்த மற்றும் கிளை வீதிகள்

## அலுத்கம

1 **ஜனவரி 11 பி.ப. 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
காலி வீதி (பகுதி), பஞ்ஞானந்த வீதி, மல்லஸ்ஸ டெம்பள் வீதி, அஞ்சல் அலுவலக வீதி, சமுத் மாவத்தை, பள்ளிவாசல் வீதி, அராபி வீதி, தக்கியா வீதி, மரிக்கார் வீதி, பஞ்ஞானந்த மாவத்தையில் மாஸ்ஸல சந்தியிலிருந்து அம்பேபிட்டிய சந்தி வரை, ஆரியவன்ச மாவத்தை, கன்னன்கொட, கனேராப வீதி, மங்கள வீதி, மருதானை பகுதி, மருதானை வீதி (பகுதி), பண்டாரவத்த, நல்லஹேன வீதி, சுங்க இல்ல வீதி, பரணகடை, அஞ்சல் அலுவலக வீதி, ஸ்ரீநிவாச வீதி, பழைய வீதி (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

## மொரட்டுவ

1 **ஜனவரி 04 பி.ப 1.00 முதல் பி.ப. 5.00 வரை**
புரன்அப்பு ரஜ மாவத்தை, லேடி சொய்சா டிரைவ் (பகுதி), 1ஆம், 11ஆம், 12ஆம் மற்றும் 13ஆம் ஒழுங்கைகள், C.S.A. பெரேரா மாவத்தை, லுவி குமாரி மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

2 **ஜனவரி 04 பி.ப 1.00 முதல் பி.ப. 5.00 வரை**
ஹோலி குரோஸ் வீதி, சென் ஜோசப் வீதி, டி மெல் மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

3 **ஜனவரி 05 பி.ப 1.00 முதல் பி.ப. 5.00 வரை**
பீ.பி. அல்விஸ் பெரேரா மாவத்தை, சுரம்யா பிளேஸ், சுசிறி பிளேஸ், பிரஜாசாலாவ வீதி, ஆசிரி உயன, அரலிய பிளேஸ், சமன் பிளேஸ் மற்றும் கிளை வீதிகள்

4 **ஜனவரி 11**
பஹல இந்திபெத்த வீதி, பம்மட்டுவ வீதி (பகுதி), தீப்பானந்த வீதி, தீப்பானந்தபுர, ஹை ஸ்கூல் வீதி (பகுதி), பண்டாரநாயக்க மாவத்தை, எட்வர்ட் ஒழுங்கை (பகுதி), சுதர்மாராம மாவத்தை மற்றும் ஒழுங்கை, சுகுணானந்த மாவத்தை, பிரஜாசாலாவ மாவத்தை, சங்கமித்த வீதி, 3ம் ஒழுங்கை, பெசிலியா வீதி, ஜுபிலி வீதி, பெல்மோரிய வீதி, ஜுபிலி வீதி, இஹல இதிபெத்த (பகுதி), ஜோன் சாமுவெல் மாவத்தை, குரே ஒழுங்கை வீதி மற்றும் கிளை வீதிகள்

## பாணந்துறை

1 **ஜனவரி 09 பி.ப 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
காலி வீதியில் பாணந்துறை கொவிசேவா நிலையத்திலிருந்து தல்பிட்டிய பாலம் வரை, நெவில் பெரேரா மாவத்தை, நெலும் மாவத்தை, சமுத்ர மாவத்தை, ஸ்ரீ மெத்தானந்த வீதி, சொய்சா வீதி (பகுதி) பாலிக்கா வீதி, கல்வெட்டி மோதர வீதி, சேர்கியுலர் வீதி, சங்கானந்த வீதி, போதிருக்காராம வீதி, அன்னாசிகட மாவத்தை, மெதவெல வீதி, ஜயந்தி மாவத்தை, ஜுபிலி வீதி, ஜோன் கீல்ஸ் வீடமைப்புத் திட்டம், சீலானந்த வீதி, ரொபர்ட் சில்வா மாவத்தை, மீகஹகோவில் வீதி, லெஸ்லி குணவர்தன மாவத்தை, ஸ்டேஷன் வீதி, பிரிவெனா வீதி, லிலியன் சில்வா மாவத்தை, உபோசித்திராம வீதி, சரணபால மாவத்தை, ஹிக்கஹவத்த, மெதபன்சல வீதி மற்றும் கிளை வீதிகள்

## கெசெல்வத்த

1 **ஜனவரி 11 பி.ப. 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
செந்திரிக் பிளேஸ், கட்டுகுருந்த, மேரிஸ் பிளேஸ், சென் ஆன்ஸ் ஒழுங்கை, எகொட உயன ஸ்டேஷன் வீதி, தீவரராஜ மாவத்தை, சுனந்த உயன, ஆர்னோல்ட் பிளேஸ், சாகர லேன், ஆரியதாச, தம்மாபந்து மாவத்தை, பி.எச். பெரேரா மாவத்தை, ஜயந்தி மாவத்தை, ஸ்ரமசக்தி மாவத்தை, விஜய மாவத்தை, ஜஸ்டின் டயஸ் மாவத்தை, தினசிரி மாவத்தை, ஞானலோக்க மாவத்தை, புதிய காலி வீதி, மஹாவத்த வீதி, எகொடஉயன வீடமைப்புத் திட்டம், டொன் விலியம் மாவத்தை, ஜயகத்புர வீடமைப்புத் திட்டம், ஹிஜ்ரா மாவத்தை, இசுறுதிசி மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

## நுகேகொட

1 **ஜனவரி 03**
ரஜமஹாவிகார வீதி, முத்தெட்டுவே வீதி, ஜனதா மாவத்தை, மிஹிந்து மாவத்தை, குயீன்ஸ்லேன்ட் மாவத்தை, ஜயந்தி மாவத்தை, ரஜ மாவத்தை, எக்வத்த வீதி, மஹவத்த மற்றும் கிளை வீதிகள்

## மஹரகம

1 **ஜனவரி 10 ந.ப. 12.00 முதல் பி.ப. 5.00 வரை**
கும்புக்கஹபொக்குண வீதி, அமரதுங்க மாவத்தை, ஜய மாவத்தை, சமகி மாவத்தை, சாமுவெல் பிளேஸ், தலபத்பிட்டிய மயான வீதி, 1ஆம், 2ஆம் மற்றும் 3ஆம் ஒழுங்கைகள், தெல்கஹவத்த, அருண மாவத்தை, சந்திராலோக்க மாவத்தை, குருந்த மாவத்தை, தலபத்பிட்டிய வீதி, (பகுதி) டெம்பள் வீதி, கிராமோதய மாவத்தை, ஒபேஹேன வீதி, சிகேரா வீதி, கொரனேலிஸ் மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

2 **ஜனவரி 20**
பமுனுவ வீதி, தேவால வீதி, தம்பஹேன வீதி, புதிய வைத்தியசாலை வீதி, கிராமசங்வர்தன வீதி, பொல்வத்த வீதி, பத்திராகொட வீதி (பகுதி), சுச்சரித்துதய வீதி, சுரம்யா மாவத்தை, புபுது மாவத்தை, தெபானம வீதி, போமலுவத்த வீதி, போதிராஜ மாவத்தை, ஜயந்தி மாவத்தை (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

## பொரலெஸ்கமுவ

1 **ஜனவரி 05**
கொழும்பு வீதியில் ஜீ. எச். பெரேரா மாவத்தை, பழைய கெஸ்பாவ வீதி, ரத்தினபிட்டிய வீதி (பகுதி), 1ஆம் மற்றும் 2ஆம் ஒழுங்கைகள், கொவிகம் பிளேஸ், பெரேரா மாவத்தை, திவுல்பிட்டிய மற்றும் கிளை வீதிகள்

2 **ஜனவரி 18**
அபேரத்ன மாவத்தை, மயான வீதி, பிட்டவல வீதி, 1ஆம் மற்றும் 2ஆம் ஒழுங்கைகள், அம்பவத்த, கொழும்பு - பிலியந்தலை வீதி (பகுதி), பாசெல் மாவத்தை, (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

## கொலன்னாவ / வெள்ளம்பிட்டிய

1 **ஜனவரி 16**
களனிநதீகம வீதி, களனிநதீகம, ரம்யாவீர மாவத்தை, அதிகாரம் மாவத்தை, வெலேவத்த, சேதவத்த வீதியில் கலுபாலமயிலிருந்து தொட்டலங்க வரை, பத்துலவத்த, கெரதெஹிபிட்டிய வீதி, தொட்டலங்க, நவலோக்கபுர, வெஹெரகொடெல்ல (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

2 **ஜனவரி 18 பி.ப. 12.00 முதல் பி.ப. 5.00 வரை**
கட்டுபெல்லெல (பகுதி), அம்பத்தலை – சேதவத்த வீதியில் கட்டுபெல்லெல சந்தியிலிருந்து கொஹிலவத்த சந்தி வரை, பிரண்டியாவத்த வீதி (பகுதி). சதஹம் மாவத்தை, டொனால் பெரேரா மாவத்தை, வென்னவத்த (பகுதி), கொஹிலவத்த (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

3 **ஜனவரி 19**
அவிசாவளை வீதியில் வெல்லம்பிட்டிய சந்தியிலிருந்து புத்கமுவ வரை, அம்பகஹாவத்த வீதி, பிரண்டியாவத்த, மெகொட கொலொன்னாவ, வென்னவத்த, கொட்டுவில (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

4 **ஜனவரி 19**
மீத்தொட்டமுல்ல வீதி, பெரேரா மாவத்தை, வடுகொடவத்த, பன்சல்ஹேன (பகுதி), பன்சல்ஹேன வீடமைப்புத் திட்டம், விகார மாவத்தை (பகுதி), மீத்தொட்டமுல்ல சந்தி மற்றும் கிளை வீதிகள்

5 **ஜனவரி 19**
அவிசாவளை வீதியில் மீத்தொட்டமுல்ல சந்தியிலிருந்து பேஸ்லைன் வீதி சந்தி வரை, ஒருகொடவத்த, நவ கௌனிபுர, ராசம்மாகேவத்த, மஜீத் பிளேஸ், லூகஸ் வத்த, ஒருகொடவத்த சந்தைக் கட்டிடத் தொகுதி, குருனியாவத்த, கம்பிகொட்டுவவத்த மற்றும் கிளை வீதிகள்

6 **ஜனவரி 19**
ஒருகொடவத்த சந்தைக் கட்டிடத் தொகுதி, கம்பிகொட்டுவத்த, வெஹெரகொட வீதி மற்றும் கிளை வீதிகள்

7 **ஜனவரி 21**
அவிசாவளை வீதியில் மீத்தொட்டமுல்ல சந்தியிலிருந்து வெள்ளம்பிட்டிய சந்தி வரை, விஹார மாவத்தை (பகுதி), கொலன்னாவ வீதி (பகுதி), நாகஹவத்த, புவக்கஹவத்த (பகுதி), தொஸ்தரவத்த, கலன்சூரியவத்த, வெல்லம்பிட்டிய சந்தி, சங்கபோதி மாவத்தை, குமாரதாச பிளேஸ் மற்றும் கிளை வீதிகள்

8 **ஜனவரி 21**
கொலன்னாவ வீதி, நாகஹமுல்ல வீதி, பன்சல்ஹேன, மீத்தொட்டமுல்ல வீதி (பகுதி), விகார மாவத்தை (பகுதி), பராக்கிரம மாவத்தை, ஞானசிரி மாவத்தை, ஸ்ரீ விமலாராம வீதி, சாலமுல்ல (பகுதி), புவக்கஹவத்த (சிங்கபுர), அவிசாவளை வீதியில் வெல்லம்பிட்டிய சந்தியிலிருந்து புத்கமுவ வரை, அம்பகஹாவத்த வீதி, பிரண்டியாவத்த, மெகொட கொலொன்னாவ, வென்னவத்த, கொட்டுவில (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

## கொட்டிகாவத்த

1 **ஜனவரி 20 பி.ப. 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
புத்கமுவ வீதி, கெமுனு மாவத்தை, வெதகாவத்த, பெரேரா மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

## மஹர

1 **ஜனவரி 04 பி.ப. 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
ராகம – கடவத்தை வீதி (பகுதி), கிரிமெட்டியாகார வீதி, ஆசிரி மாவத்தை, பஹல கரகஹமுல, சாந்தி மாவத்தை, மெத வீதி (பகுதி), டெம்பள் வீதி, சென் அந்தனீஸ் மாவத்தை, கல்ரோத வீதி, ஜயசிங்க வீதி, மித்துருகெல மாவத்தை, கோப்பியவத்த, கோப்பியவத்த வீதி, கம்மெத்த வீதி மற்றும் கிளை வீதிகள்

2 **ஜனவரி 11 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**
கண்டி வீதியில் கால சந்தியிலிருந்து கிரிபத்கொட சந்தி வரை, தெம்பிலிகஸ்முல்ல வீதி, மித்ரானந்த வீதி, கிரிபத்கொட சந்தி (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

3 **ஜனவரி 11 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**
கண்டி வீதியில் மஹர சந்தியிலிருந்து கிரிபத்கொட பாலம் வரை, எக்சத் மாவத்தை, சிறிமான பண்டாரநாயக்க மாவத்தை, பங்களாவத்த, ஜினசேன மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

## கந்தான / வெலிசர

1 **ஜனவரி 13 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**
நீர்கொழும்பு வீதியில் வெலிசர சமகி மாவத்தையிலிருந்து அடிவிஸ்ஸ வீதி சந்தி வரை, அடிவிஸ்ஸ வீதி (பகுதி), தொட்டுபொல வீதி, சமகி மாவத்தை, எலாஹிவத்த வீதி, சென் அந்தனீஸ் வீதி (வெலிசர), அமுனுபிட்டிய மாவத்தை, ஜேகப் மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

2 **ஜனவரி 13 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**
அடிவிஸ்ஸ வீதி, வெல்லஹேன, மச்கோகேவத்த, சமரநாயக்க வீடமைப்புத் திட்டம் மற்றும் கிளை வீதிகள்

**பின்வரும் இடங்களில் குறித்துரைக்கப்பட்ட திகதிகளில் மு.ப. 8.00 மணி முதல் பி.ப. 5.00 மணி வரை அத்தியாவசிய நிர்மாண வேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகளைச் செய்வதற்கு இலங்கை மின்சார சபை மற்றும் LECO நிறுவனம் திட்டமிட்டுள்ளதனால் மின்சார விநியோகம் தடைப்படுமென வாடிக்கையாளர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.**

## அம்பலாங்கொட

1 **ஜனவரி 11**
துடுவேகொட (பகுதி), கெரமினிய வீதி, கெரமினிய பொக்குன வீதி, பத்திராஜ வீதி, டிஸ்னி வீதி, பின்னதுவ, பொல்வத்த, பஞ்ஞாலோக்க மாவத்தை, எப்பிட்டமுல்ல வீதி, தல்கஸ்கொட வீதி, நுகேதுடுவ, பீரிஸ் வெத மாவத்தை, பி.எச்.ஆர். சுமணதாச மாவத்தை, பலதுவ வீதி, கலுவடுமுல்ல, போரபா, பெனியன்ன, போரபா தொட்டுபொல வீதி, தேவால வீதி, வலவ்வத்த வீதி, ரொபர்ட் விக்கிரமசூரிய வீதி, வத்துகெதர, சீனிகொட, பத்திவத்த, டி.ஏ.கே டி சில்வா மாவத்தை, விஹாரகொட, வடுமுல்ல, கந்தேகொட, கெரமினிய வீதி, நாகஹ டெம்பிள் வீதி, தொட்டவத்த வீதி, எல்பிட்டிய வீதி, மஹகராவ வீதி, குருந்துவத்த வீதி (பகுதி), ஆந்ததொல வீதி, குருந்துவத்த, பரகஹதொட்ட, டெம்பள் வீதி, வளவ்வத்த, ஸ்ரீபத்தி மாவத்தை, மயான வீதி, வத்துகெதர – பலப்பிட்டிய வீதி (பகுதி), ஹீனெட்டிய வீதி, மஹகராவ வீதி, ஆந்தாதொல வீதி (பாருதொட்ட பிரதசம்), தெல்கஹவத்த, மகலந்துவ, வடாதுவ, நவரத்னகொட, ஸ்டேஷன் வீதி, சீனிகொட மற்றும் கிளை வீதிகள்

2 **ஜனவரி 11**
எல்பிட்டிய வீதி, போகஹவத்த, கெபுல்ல வீதி, வித்தியாலய ஒழுங்கை, பட்டபெத்திகெதரவத்த, 2ம் குறுக்கு வீதி, காலி வீதி (பகுதி), பட்டபெத்திமுல்ல, கெந்தெ வீதி, ஸ்ரீ நிக்கேத்தராம வீதி, சீ.டீ.சீ. பர்னாந்து மாவத்தை, கடற்கரை வீதி, மேதானந்த வீதி, ஹெப்புமுல்ல வீதி, சுகத்தவத்த, ரன்தொம்பே, ஆர்.ஈ. டி சில்வா மாவத்தை, கெபு எல வீதி, ஒலேகம வீதி, ரொபர்ட் சொய்சா மாவத்தை, ஆத்தர் சொய்சா மாவத்தை, பேரதுடுவ, வெள்ளவத்த, மொஹொட்டிவத்த, குணானந்த மாவத்தை, உத்மகான மாவத்தை, சிறிசேன மாவத்தை, சுங்க வீதி, மருதானை வீதி, எலதொட்ட வீதி, பலப்பிட்டிய மோதர தேவால வீதி, வெலிகடமுல்ல வீதி, பலப்பிட்டிய ஸ்டேஷன் வீதி, பிரஹ்மனவத்த, காலி வீதி (பகுதி), வெலிவத்த, வெலிவத்துகெதர, நுருகல, குருநிவஸ வீதி, குருவித்யாலய வீதி, ரேவத்த, கல்மந்துவ, கல்மன்கொட, விஜயாராம வீதி, சிங்கள முஸ்லிம் மித்துரு மாவத்தை, வெலிதர, தேவால வீதி, பீ. ஆர். த சில்வா மாவத்தை, கபினாவலவ்வ மற்றும் கிளை வீதிகள்

3 **ஜனவரி 11**
காலி வீதியில் தர்மாசோக்க கல்லூரியிலிருந்து ஹரிஸ்சந்திர டயர் வேர்க்ஸ் வரை, பட்டபெந்திமுல்ல, சந்திரவாச வீதி, மகாவித்தியாலய, ஸ்டேஷன் வீதி, களுத்துறை வீதி, கடற்கரை வீதி (பகுதி), 5ம் குறுக்குத் தெரு, விக்கிரமசூரிய வீதி மற்றும் கிளை வீதிகள்

## களுத்துறை

1 **ஜனவரி 03**
காலி வீதி (24ஆம் மைல் கல்லுக்கு அருகிலுள்ள பகுதி), மஹா வஸ்கடுவ, ஜயந்தி மாவத்தை (பகுதி), மார்மைட் ஹோட்டல் வீதி (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

## பயாகல

1 **ஜனவரி 05**
மலேகொட வீதி (பகுதி), ஆங்கன்கொட, 16 ஏக்கர் வீதி, பம்பே வீதி, கொரகதெனிய, அம்பகோட்டே வீதி, முலட்டியன, மெட்டியலமுல்ல, பினிடித்தமுல்ல, வெனிவெல்கெட்டிய வீதி, பலயன்கொட, கச்சகொட, நாகஹதுவ வீதி, தெல்கஹலந்த, கலஸ்ஸ வீதி, விஜித மாவத்தை (பகுதி), கோசல மாவத்தை, கொரக்கதெனிய, பம்பே, ஆசிரி மாவத்தை, குணதிலக்கவத்தை, இஹல வெனிவெல்கெட்டிய, STF வீதி, 5ம், 6ம், 7ம், 8ம் மற்றும் 9ம் ஒழுங்கைகள், அம்பகோட்டே வீதி, மெஹிமுல்ல, பஹல வெனிவெல்கெட்டிய வீதி, கொவிசெத வீதி, அரலிய மாவத்தை, மரதகஹவெல வீதி, வெந்தேசிவத்த, நயனா தோட்டம் மற்றும் கிளை வீதிகள்

## அலுத்கம

1 **ஜனவரி 09**
மத்துகம வீதி (பகுதி), மிஹிரிபென்ன வீதி, மிலிட்டரி விதி, மீனாச்சிகந்த, புதிய வீதி, பிரதான வீதி, மன்சூர் மாவத்தை, ஷேக் பெஸ்சி மாவத்தை, குருந்தவத்த வீதி, கடியவத்த, பத்திராஜகொட, பகஹவத்த மார்கட் வீதி, தர்கா நகர், ஜெம் வீதி, அம்பகஹ சந்தி, வைத்தியசாலை வீதி, சமகி மாவத்தை, மரிக்கார் வீதி, டெம்பள் வீதி, சம்சம் மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

2 **ஜனவரி 09**
காலி வீதியிலிருந்து அலுத்கம பொலிஸ் நிலையம் வரை, பெந்தோட்டை பாலம், கனேகம வீதி (பகுதி), புகையிரத நிலைய வீதி, கனேகொட வீதி, வெலிப்பன்ன வீதி (பகுதி), வைத்தியசாலை வீதி, மத்துகம வீதி (பகுதி), ரெயில்வே அவன்யூ, சாவியா வீதி. லோட்டஸ் வீதி, ஸ்ரீபத்தி வீதி (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

3 **ஜனவரி 12**
கந்தேவிஹார வீதி, காலி வீதி (பகுதி), லங்கா பிரின்ஸ் வீதி, ஈடன் ஹோட்டல் வீதி, பாபரின் வீதி, மருதானை வீதி, ஹெட்டிமுல்ல வீதி, மஹகொட மற்றும் கிளை வீதிகள்

4 **ஜனவரி 12**
ஹெட்டிமுல்ல வீதி, ஸ்டேஷன் வீதி, கருணாரத்ன வீதி, நுககஹா வீதி, முல்லப்பிட்டிய வீதி மற்றும் கிளை வீதிகள், பழைய வீதி, பழைய வீதி, அராபி வீதி, ஷேக் ஜமால்தீன் வீதி, டெம்பள் வீதி, சமத் வீதி, சேயார்மன் வீதி, ஹேனவத்த, பிளேஸ் பாத், பள்ளிவாசல் வீதி, சாவியா வீதி மற்றும் ஒழுங்கை, ஹலவாகொட, பண்டாரவத்த, ஜோசப் குரே மாவத்தை, மருதானை வீதி, மரிக்கார் பிளேஸ், வத்தும ராஜபுர, ஹலவாகொட (பகுதி), கபடாகொடபுர (பகுதி), அப்துல் காதர் மாவத்தை, ஹெட்டியாகந்த, ராசிக் மரிக்கார் மாவத்தை, மஹகொட, அபூபக்கர் மாவத்தை, கொரக்கதூவ, ஸ்டேஷன் வீதி, கருணாரத்ன வீதி, நுககஹா வீதி, முல்லப்பிட்டிய வீதி, மஹகொட வீதி, கொரட்டுவ வீதி, பேருவளை நகரம், சென் ஆன்ஸ் வீதி, சீனன் கோட்டை, பெரேரா மாவத்தை, கல்பொத்த வீதி, கன்னங்கொட, மஹகொட வீதி, கப்பிதான்கொட வீதி (பகுதி), நவ்பர் மாவத்தை, கரந்தகொட வீதி மற்றும் கிளை வீதிகள்

5 **ஜனவரி 12**
காலி வீதியில் கலுவாமோதர பாலத்திலிருந்து குட்செட் வீதி வரை, பூர்வனாராம வீதி, சீலானந்த மாவத்தை, சிரமதான மாவத்தை, சைமன் சில்வா மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

6 **ஜனவரி 12**
கந்தேவிகார வீதி, தேவால வீதி, வெதமுல்ல வீதி, ஸ்ரீபத்திய வீதி, லோட்டஸ் வீதி, புதிய வீதி, இஸ்னபுள்ளே வீதி. கருணாரத்ன வீதி, கல்ஹேன வீதி, சாவியா வீதி, ஸாஹிரா வீதி, எஸ்.எம். வீதி, ஷேக் மதாரா வீதி, கடியவத்த வீதி, வெலிப்பிட்டிய, சம்சுதீன் மாவத்தை, தர்கா நகர் மற்றும் கிளை வீதிகள்

7 **ஜனவரி 12**
தீனகொட, தர்கா வீதி, ஜாபீர் மாவத்தை (பகுதி), நளீம் ஹாஜியார் மாவத்தை, நவுபர் மாவத்தை, பிட்டவெல வீதி, குருந்துவத்த வீதி, அம்பென்பிட்டிய, பின்ஹேன, கருணாசேனபுர, வெதகொட வீதி, கனேராப வீதி, தெனிய – வலதர மற்றும் கிளை வீதிகள்

8 **ஜனவரி 12**
காலி வீதி (பகுதி), பஞ்ஞானந்த வீதி, மல்லஸ்ஸ டெம்பள் வீதி, அஞ்சல் அலுவலக வீதி, சமுத் மாவத்தை, பள்ளிவாசல் வீதி, அராபி வீதி, தக்கியா வீதி, மரிக்கார் வீதி, பஞ்ஞானந்த மாவத்தையில் மாஸ்ஸல சந்தியிலிருந்து அம்பேபிட்டிய சந்தி வரை, ஆரியவன்ச மாவத்தை, கன்னன்கொட, கனேராப வீதி, மங்கள வீதி, மருதானை பகுதி, மருதானை வீதி (பகுதி), பண்டாரவத்த, நல்லஹேன வீதி, சுங்க இல்ல வீதி, பரணகடை, அஞ்சல் அலுவலக வீதி, ஸ்ரீநிவாச வீதி, பழைய வீதி (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

## மஹரகம

1 **ஜனவரி 12**
பமுனுவ வீதி, எக்சத் சுபசாதக்க வீதி, 3ஆம், 4ஆம், 5ஆம் மற்றும் 6ஆம் ஒழுங்கைகள், தேவால வீதி, விதான வீதி, மாதியகஹவத்த, சந்தன கார்டன்ஸ், தெல்கஹவத்த, நாகஹவத்த வீதி, ஜயந்தி மாவத்தை மற்றும் ஒழுங்கை மற்றும் கிளை வீதிகள்

2 **ஜனவரி 12**
ஹைலெவல் வீதி (பகுதி), பழைய வீதி (பகுதி), பமுனுவ வீதி (பகுதி), மகமெகாவத்த, வேரகெட்டி வீதி, டெம்பள் வீதி (பகுதி), ரெயில்வே மாவத்தை, ஸ்டேஷன் வீதி, விவேகாராம மாவத்தை, பிலியந்தலை வீதி, மங்கள மாவத்தை, மஹரகம டெம்பள் வீதி, தம்பஹேன வீதி, அஷார் பிளேஸ், டெம்பள் பிளேஸ், கிரஹம்ரக் பிளேஸ், கந்தஹேனவத்த வீதி (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

3 **ஜனவரி 12**
ஹைலெவல் வீதி (பகுதி). பொரளை வீதி (பகுதி), வேரகெட்டிய வீதி, ரெயில்வே அவன்யூ, பன்னிப்பிட்டிய பழைய வீதி, கம்மான வீதி, கந்தேவத்த, மயான வீதி, அரவ்வல வீதி, சில்வா மாவத்தை, கந்தவல வீதி, ஆனந்த மைத்திரி மாவத்தை, வீர மாவத்தை, செத்சிறி பிளேஸ், கந்தெனவத்த வீதி, பிரகத்தி மாவத்தை, வீர மாவத்தை, பொரளை வீதி, எக்சத் மாவத்தை, பன்னிபிட்டிய மயான வீதி, அம்பகஸ்ஹத்தர சந்தி மற்றும் கிளை வீதிகள்

4 **ஜனவரி 19**
விஜேராம வீதி மற்றும் ஒழுங்கை, பழைய கொட்டாவ வீதி (பகுதி), உடஹமுல்ல ஸ்டேஷன் வீதி, விஜேராம சந்தி மற்றும் கிளை வீதிகள்

5 **ஜனவரி 19**
கும்புக்கஹபொக்குன வீதி, வெட்டகியாவல வீதி, தலபத்பிட்டிய வீதி (பகுதி), டெம்பள் வீதி, புதிய வைத்தியசாலை வீதி (பகுதி), தலவத்துகொட வீதி (பகுதி), சுபத்ரா மாவத்தை, விஜய பிளேஸ், சுஹந்த மாவத்தை, தஹம் மாவத்தை, கிம்புளாவெல, ஒபேஹேன வீதி, சிகேரா வீதி, சிராமசங்வர்தன மாவத்தை, மாதிவெல வீதி (பகுதி), மற்றும் கிளை வீதிகள்

## பொரலெஸ்கமுவ

1 **ஜனவரி 12**
ஹைலெவல் வீதி (பகுதி), பழைய வீதி (பகுதி), தெஹிவளை வீதி (பகுதி), விபக்ஸாராம வீதி, வீரக்கொடி மாவத்தை, வித்யாகார மாவத்தை, நல்லவத்த வீதி, பிலியந்தலை வீதி, நல்லவத்த வீதி (பகுதி), யஹம்பஹத் மாவத்தை, மங்கள மாவத்தை, ஷிரோமினி மாவத்தை, நுககஹா பிளேஸ், கொஹிலகொட்டு வீதி (பகுதி), வீதியபண்டார வீதி, நீலம் மஹர வீதி, சாது மாவத்தை, ஜய மாவத்தை, மீகஹவத்த வீதி, லேக் வீதி, வைத்தியசாலை வீதி, பட்டாடபோகஹவத்த, சிசில மாவத்தை, பெரகும் மாவத்தை, தஹம் மாவத்தை, கொஹிலகொட்டுவ, ஹேனகெதர வீதி (பகுதி), நல்லவத்த வைத்தியசாலை வீதி, தாப்பவத்த, வத்தேகெதர வீதி, சமகிபுர மாவத்தை, வத்தேகெதர ஒழுங்கை, விஜய மாவத்தை, மிஹிந்து மாவத்தை, கெமுனு மாவத்தை, மீகஹவத்த, வீர மாவத்தை, ஜனதா மாவத்தை, குமுது மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

## கொலன்னாவ / வெல்லம்பிட்டி

1 **ஜனவரி 10**
அவிசாவளை வீதியில் கொட்டிகாவத்த சந்தியிலிருந்து புத்கமுவ வரை, மஹபுத்கமுவ, டெம்பள் வீதி, பொல்கஹபிட்டிய வீதி, சித்திராகார வீதி மற்றும் கிளை வீதிகள்

2 **ஜனவரி 10**
அவிசாவளை வீதியில் வெல்லம்பிட்டிய சந்தியிலிருந்து புத்கமுவ வரை, அம்பகஹாவத்த வீதி, பிரண்டியாவத்த, மெகொட கொலொன்னாவ, வென்னவத்த, கொட்டுவில (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

## கொட்டிகாவத்த

1 **ஜனவரி 10**
அவிசாவளை வீதி (பகுதி), கொட்டிகாவத்த சந்தி, பெலகம வீதி, நாகஹவெல வீதி, டீ.சி. வீதி (பகுதி), சரணங்கர வீதி மற்றும் கிளை வீதிகள்

## பேலியகொட / வத்தளை

1 **ஜனவரி 04**
அல்விஸ் டவுண் மற்றும் கிளை வீதிகள்

## ஜா எல

1 **ஜனவரி 19**
நீர்கொழும்பு வீதியில் துடெல்ல சந்தியிலிருந்து ஜா-எல கொமர்ஷல் வங்கி வரை, பழைய நீர்கொழும்பு வீதி, மினுவங்கொட வீதி, கம்மெத்த வீதி, சென் சேவியர் வீதி, சென் மேரிஸ் வீதி, கபலகந்த வீதி, கந்தேவத்த வீதி, பிலிப் பெரேரா மாவத்தை, ஜா-எல நகரம் (பகுதி), பழைய நீர்கொழும்பு வீதி (பகுதி), ரத்நாயக்க பங்களாவ வீதி, கிறிஸ்ட் த கிங் வீதி மற்றும் கிளை வீதிகள்.

2 **ஜனவரி 19**
பமுணுகம வீதி (பகுதி), கொன்வன்ட் வீதி, சென் மேரிஸ் வீதி, வீதி பாதை, வஹாட்டியகம, ஜயபிரேமி மாவத்தை, வெலிஹிந்த வீதி, சிரமதான மாவத்தை, வெலன்டைன் பெரேரா மாவத்தை, நெலும்வில வீதி, ரொஜஸ் மாவத்தை, ஹீன் எல வீதி, கஜுகஸ்கொடெல்ல, கம்மெத வீதி, தாரகுலிய வீதி, மோதரவிலகொட, நிதஹஸ் மாவத்தை, கலஎலிய வீதி, சுதுவெல்ல வீதி, செபஸ்தியன் பெரேரா மாவத்தை, பீரிஸ் பெரேரா மாவத்தை, மடு சேர்ச் வீதி, மில் வீதி, சுவர்ணஹன்ச விலா, நெலும்வில வீதி, தண்டுகம்பெருவ, தீப்பிகாகம, போதிராஜ மாவத்தை, இந்தெவிட்டிய, இந்தெவிட்டிய வீதி, லேக் சிட்டி, பிரஜாமாதால வீதி, ரணசிங்க வீதி, கெனல் வீதி, சேர்கியுலர் வீதி, முல்லவத்த, வேவல சேர்ச் வீதி, வேவல மயான வீதி, சென் ஜோசப் வாஸ் மாவத்தை, சுகந்த மாவத்தை, ஜுபிலி மாவத்தை, சென் திரேசா மாவத்தை, சென் சேவியர் வீதி, வெலிகம்பிட்டிய வீதி, ரீட்டா மாவத்தை, மஹவத்த வீதி, தொட்டவத்த வீதி, எகொடவத்த, கலஎலிய, சொய்சா வத்த, சென் ஆன் மாவத்தை, சென் அந்தனீஸ் மாவத்தை, எக்கமுத்து மாவத்தை, பாத்திமா பிளேஸ், குளுஹேன, வாசனா பிளேஸ், ஜயசூரிய மாவத்தை, வெலிகுறுதுவத்த, அந்தோனி ஜயவர்தன மாவத்தை, பிரகத்தி மாவத்தை, ஸ்ரீ ஜய மாவத்தை, தொட்டுபொல வீதி, மிஹிந்து மாவத்தை, நெதுருபிட்டிய வீதி, பாத்திமா மாவத்தை, வாசனா பிளேஸ், கெமுனு மாவத்தை, கப்பித்தாவத்த, சமகி மாவத்தை, சோவிஸ் மாவத்தை, கல்எலிய, வாலான சேர்ச் வீதி, வலான மயான வீதி, சுதுவெல்ல வீதி மற்றும் கிளை வீதிகள்.

## நீர்கொழும்பு

1 **ஜனவரி 12**
மயான வீதி, டொன் பொஸ்கோ மாவத்தை, பெரேரா இடம், அட்நியூஸ் வீதி, றாமின் மாவத்தை, புனித அந்தோனியார் வீதி, மார்க் வீதி, புனித செபஸ்தியன் இடம், மேரியன் இடம், மொசைறா ஒழுங்கை, புனித அந்தோனியார் 1ஆம் ஒழுங்கை, பிரஜா சேவா மண்டல வீதி (பகுதி), பாத்திமா வீதி, சிலாபம் வீதியில் பாத்திமா வீதி சந்தியிலிருந்து லாசர்ஸ் வீதி சந்தி வரை, லாசரா வீதி (பகுதி), அபேசிங்கேபுர, மன்சன் இடம், அன்டர்சன் வீதியில் கனல் வீதியிலிருந்து மயான வீதி வரை, றோசரி வீதி, லுவிஸ் பிளேஸ், பீற்றர் மென்ண்டிஸ் வீதி, மொசைறா ஒழுங்கை, ரோசரி வீதி சந்தியிலிருந்து பிரவுன்ஸ் சந்தி, லூர்து மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

2 **ஜனவரி 12**
அன்டர்சன் வீதி (பகுதி), கீர்த்திசிங்க வீதி, கர்த்தினால் குரே மாவத்தை, பொலொங்கொ மாவத்தை, றீட்டா வீதி, லுவிஸ் இடம் (பகுதி), கடற்கரை தெரு (பகுதி), செபஸ்தியன் வீதி, ஜோசப் பெர்ணாண்டோ மாவத்தை, சூரிய வீதி, அலஸ் வீதி (பகுதி), லக்ஷ்மன் மாவத்தை, கடற்கரை வீதியில் காளி கோயிலிலிருந்து கோட்டை விளையாட்டு மைதானம் வரை, முத்துமாரியம்மன் வீதி, அசரப்பா வீதி, விஸ்கிறீன் மாவத்தை, அலஸ் வீதி (பகுதி), பள்ளிவாசல் வீதி, 2ஆம், 3ஆம் மற்றும் 5ஆம் குறுக்கு வீதிகள், சேர்கியூலர் வீதி, பிரதான வீதி (பகுதி), செல்பி வீதி, கிங் ஜோர்ஜ் வீதி, ஸ்டீவன் வீதி, பெல்பர் வீதி மற்றும் கிளை வீதிகள்

3 **ஜனவரி 12**
சிலாபம் வீதி (பகுதி), சோண்டஸ் வீதி, கொழும்பு வீதி (பகுதி), பழைய சிலாபம் வீதி, மன்சென் பிளேஸ், கெனல் வீதி மற்றும் ஒழுங்கை, செபஸ்தியன் வீதி, ரமணி மாவத்தை, அனாவி ஒழுங்கை, பெர்னாண்டோ மாவத்தை, பிரதான வீதி (பகுதி), கிறீன்ஸ் வீதி (பகுதி), ராஜபக்ச புரோட்வே (பகுதி), டி குறூஸ் வீதி (பகுதி), லியோ டி குறூஸ் வீதி (பகுதி), சந்தைக் கட்டிடத் தொகுதி ஏ மற்றும் பி புளொக்குகள், சென் பீட்டர்ஸ் லேன், லின்டன்ஸ் லேன், கிரேன்ட் வீதி (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

எதிர்பார்த்த கால நேரத்தில் மின் தடைகள் செயற்படுத்தப்படாமல் இருக்கலாம். எனவே வாடிக்கையாளர்கள் இந்த இரத்துச் செய்தலை தாங்கிக் கொள்ளும்படி தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

திட்டமிடப்பட்ட வேலைகள் முடிவடைந்தவுடன் மின்சாரம் விநியோகத்தை மீண்டும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் மின்கம்பி இணைப்பு வழிகளில் எந்நேரமும் மின்சாரம் பாய்வதாக கருதுங்கள்.

இந்த மின்தடைகள் மற்றும் திட்டமிடப்பட்ட மின்தடைகளை இரத்துச் செய்வதனால் ஏற்படும் அனைத்து அசௌகரியங்களுக்காகவும் நாம் வருத்தத்தை தெரிவிக்கிறோம்.

**மேலதிகப் பொது முகாமையாளர் (பொறியியல்),**
**வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்,**
**411, காலி வீதி, கொழும்பு-03.**
**தொலைபேசி : 011-2371625**
**துரித இலக்கம் : 1910**

**மேற்குறிப்பிட்ட தகவல்கள் www.leco.lk எனும் எமது இணையதளத்திலும் கிடைக்கத்தக்கதாகவுள்ளன.**







# இலங்கை கால்பந்துக்கு 20000 டொலர் அபராதம்



உஸ்பகிஸ்தானில் நடைபெற்ற 17 வயதுக்கு உட்பட்ட ஆசிய கிண்ண கால்பந்து போட்டியில் பங்கேற்பதில் இருந்து விலகிக் கொண்ட இலங்கைக்கு ஆசிய கால்பந்து கூட்டமைப்பு 20000 அமெரிக்க டொலர் (சுமார் ஏழு இலட்சத்து நாற்பதாயிரம் ரூபா) அபராதம் விதித்துள்ளது.

இந்தப் போட்டி கடந்த ஒக்டோபர் 5ஆம் திகதி தொடக்கம் 9ஆம் திகதி வரை உஸ்பகிஸ்தானில் நடைபெற்றது. இதில் பங்கேற்பதாக இலங்கை கால்பந்து சம்மேளனம் உறுதி அளித்த நிலையிலேயே அணியை அனுப்ப முடியாமல்போனது. இலங்கை கால்பந்து சம்மேளனத்தில் ஏற்பட்ட நிர்வாகப் பிரச்சினைகள் காரணமாகவே இலங்கை இளையோர் அணியை உஸ்பகிஸ்தான் அனுப்ப முடியாமல்போனமை குறிப்பிடத்தக்கது.

# டெஸ்ட் சம்பியன்சிப்பில் இலங்கை முன்னேற்றம்



அவுஸ்திரேலியாவுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் தென்னாபிரிக்க அணி இன்னிங்ஸ் மற்றும் 182 ஓட்டங்களால் தோற்று தொடரை 0–2 என இழந்ததை அடுத்து உலக டெஸ்ட் சம்பியன்சிப் புள்ளிப்பட்டியலில் இலங்கை அணியால் இரண்டாவது இடத்திற்கு முன்னேற முடிந்துள்ளது.

மெல்போர்னில் நேற்று (29) நிறைவடைந்த டெஸ்டில் தென்னாபிரிக்க அணி தோற்றதால் அந்த அணி புள்ளிப்பட்டியலில் 50 புள்ளி விகிதத்துடன் நான்காவது இடத்திற்கு சரிந்தது.

இதனால் 53.33 புள்ளி விகிதத்துடன் இருக்கும் இலங்கை மூன்றாவது இடத்திற்கு முன்னேற்றம் கண்டுள்ளது. இதில் 78.57 புள்ளி விகிதத்தை பெற்று முதலிடத்தில் இருக்கும் அவுஸ்திரேலியா அடுத்த ஆண்டு ஓவலில் நடைபெறவுள்ள உலக டெஸ்ட் சம்பியன்சிப் இறுதிப் போட்டிக்கு தகுதி பெறும் வாய்ப்பை நெருங்கியுள்ளது.

இந்திய அணி 59.93 புள்ளி விகிதத்துடன் இரண்டாவது இடத்தில் உள்ளது.

இந்நிலையில் உலக டெஸ்ட் சம்பியன்சிப் போட்டி அட்டவணையில் இலங்கை அணி வரும் மார்ச் மாதம் நியூசிலாந்து மண்ணில் நியூசிலாந்து அணியை இரண்டு டெஸ்ட் போட்டிகளில் எதிர்கொள்ளவுள்ளது. டெஸ்ட் சம்பியன்சிப் இறுதிப் போட்டிக்கு முன்னேறுவதற்கு இலங்கை அணிக்கு இந்தத் தொடர் தீர்க்கமானதாகும். இதில் இலங்கை அணி இரண்டு டெஸ்ட் போட்டிகளையும் வெற்றிபெறும் பட்சத்தில் அதனால் 61.1 புள்ளி விகிதத்தை பெற முடியமாக உள்ளது. இது தென்னாபிரிக்கா எஞ்சியுள்ள அனைத்து போட்டிகளிலும் வெற்றியீட்டினாலும் பெற முடியுமான புள்ளிகளை விட அதிகமாகும்.

எனினும் இதில் இந்தியா அதிக புள்ளிகளுடன் முன்னிலையில் உள்ளது. இந்நிலையில் உலக டெஸ்ட் சம்பியன்சிப் போட்டி அட்டவணையில் இந்தியாவுக்கு மேலும் நான்கு போட்டிகள் எஞ்சியுள்ளன. அவுஸ்திரேலியாவுக்கு எதிராகவே அந்த நான்கு டெஸ்ட் போட்டிகளும் உள்ளன.

இந்தியாவில் பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் நடைபெறும் இந்த டெஸ்ட் தொடரில் இந்திய அணி உலக டெஸ்ட் சம்பியன்சிப் இறுதிப் போட்டிக்கு முன்னேற குறைந்தது இரண்டு டெஸ்ட்களில் வெற்றி பெறுவதும் அவசியமாக உள்ளது.

எவ்வாறாயினும் இலங்கை அணி வலுவான நியூசிலாந்து அணியை அதன் சொந்த மண்ணில் எதிர்கொள்ளவுள்ள நிலையில் அந்த இரு டெஸ்ட் போட்டிகளிலும் வெல்வது கட்டாயமானதாக உள்ளது.

# கனிஷ்ட மெய்வல்லுனரில் இரு போட்டிச் சாதனைகள்



தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கில் கடந்த புதன்கிழமை (28) ஆரம்பமான சேர். ஜோன் டாபர்ட் கனிஷ்ட மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரின் முதல் நாளில் இரு போட்டிச் சாதனைகள் முறியடிக்கப்பட்டன.

12 வயதின் கீழ் ஆண்களுக்கான 80 மீற்றர் ஓட்டப் போட்டியை 10.1 விநாடிகளில் நிறைவு செய்த கண்டி தர்மராஜ கல்லூரியைச் சேர்ந்த டி. ஹெட்டியாரச்சி புதிய போட்டிச் சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்றார்.

அதேபோன்று, 15 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான உயரம் பாய்தலில் வத்தளை லைசியம் சர்வதேச கல்லூரி மாணவி தருஷ மெண்டிஸ் 1.93 மீற்றர் தூரத்தைப் பதிவுசெய்து புதிய போட்டி சாதனையுடன் தங்கப் பதக்கத்தை சுவீகரித்தார்.

இதில் கிளிநொச்சி – பளை மத்திய கல்லூரி மாணவன் ராஜமனோகரன் எழில்ப்பிரியன் 15 வயதின் கீழ் ஆண்களுக்கான ஈட்டி எறிதலில் 50.76 மீற்றர் தூரத்தை எறிந்து தங்கப் பதக்கத்தை சுவீகரித்தார்.

கல்வி அமைச்சு மற்றும் இலங்கை பாடசாலைகள் மெய்வல்லுனர் சங்கம் ஆகியன இணைந்து 51ஆவது தடவையாக இந்தப் போட்டியை ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிலோன் பிஸ்கெட் நிறுவனத்தின் ரிட்ஸ்பறி சொக்லட்ஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெறுகின்ற இம்முறை போட்டிகளில் நாடளாவிய ரீதியிலிருந்து சுமார் 3 ஆயிரம் மாணவர்கள் கலந்துகொண்டுள்ளனர்.

# பலாங்கொடையில் கிரிக்கெட் போட்டி

**பலாங்கொடை தினகரன் நிருபர்**

பலாங்கொடை மிரிஸ்வத்த 'சுப்பர் 8 ஹீரோ' விளையாட்டுக் கழகம் புத்தாண்டை முன்னிட்டு ஏற்பாடு செய்துள்ள கிரிக்கெட் சுற்றுப் போட்டி நாளை (31) மற்றும் நாளை மறுதினம் (01) பலாங்கொடை ஜெய்லானி தேசியப் பாடசாலை விளையாட்டுத் திடலில் நடைபெறவுள்ளது.

இந்த சுற்றுப் போட்டியில் பலாங்கொடைப் பிரதேசத்திலுள்ள 24 விளையாட்டுக் கழகங்கள் பங்குகொள்ள உள்ளதாக ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர். இந்த சுற்றுப் போட்டியில் வெற்றியடையும் கிரிக்கெட் அணிக்கு வெற்றிக் கிண்ணமும் பணப் பரிசும் வழங்கப்படவுள்ளது.

# நியூசிலாந்து அணி முன்னிலை



பாகிஸ்தானுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 174 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளது.

கராச்சியில் நடைபெற்றுவரும் இந்த டெஸ்டில் பாகிஸ்தான் அணி தனது முதல் இன்னிங்ஸில் 438 ஓட்டங்களை பெற்றது. இந்நிலையில் முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த நியூசிலாந்து அணிக்கு கேன் வில்லியம்ஸன் இரட்டைச் சதம் பெற்றார்.

அண்மையில் அணித் தலைமை பதவியை துறந்த நிலையிலேயே வில்லியம்சன் 395 பந்துகளில் ஆட்டமிழக்காது 200 ஓட்டங்களை பெற்றார். ஆரம்ப துடுப்பாட்ட வீரர் டொம் லாதமும் சதம் பெற்றார்.

இதன்மூலம் நியூசிலாந்து அணி ஆட்டத்தின் நான்காவது நாளான நேற்று 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 612 ஓட்டங்களை பெற்ற நிலையில் முதல் இன்னிங்ஸை இடைநிறுத்திக் கொண்டது.

இதன்படி பாகிஸ்தான் அணி இன்னிங்ஸ் தோல்வி ஒன்றை தவிர்ப்பதற்கு 174 ஓட்டங்களை பெற வேண்டிய நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆடி வருகிறது.

## சர்வதேச செய்திகள்

# சீனாவில் தீவிர கொவிட்–19 பரவலால் உலகளாவிய அச்சுறுத்தல் அதிகரிப்பு



சீனாவில் கொவிட் தொற்று தீவிரம் அடைந்து வரும் சூழலில் அந்நாடு வெளிநாட்டு பயணங்களுக்கான கட்டுப்பாடுகளை தளர்த்தியதை அடுத்து சீன நாட்டு பயணிகளுக்கு கட்டுப்பாடுகளை விதிக்கும் நாடுகளில் அமெரிக்காவும் இணைந்துள்ளது.

கொவிட் சம்பவங்களில் சீன மருத்துவமனைகள் நிரம்பி வருகின்றன. எனினும் கொவிட் கட்டுப்பாடுகளுக்கு எதிரான மக்கள் ஆர்ப்பாட்டம் மற்றும் பொருளாதார பாதிப்புகளை அடுத்தே சீனா தனது கண்டிப்பான கட்டுப்பாடுகளை தளர்த்தி வருகிறது.

இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை வெளிநாட்டு பயணிகளுக்கான தனிமைப்படுத்தல் கட்டுப்பாடுகளை தளர்த்தியது சர்வதேச அளவில் கவலையை ஏற்படுத்தியுள்ளது. எனினும் இந்தத் தளர்வை அடுத்து சீனர்கள் பலரும் வெளிநாடு செல்வதில் விரைவு காட்டி வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனைத் தொடர்ந்து சீன தலைநிலத்தில் இருந்து வருபவர்கள் கொரோனா இல்லை என்பதை உறுதி செய்யும் சோதனை முடிவை காண்பிக்க வேண்டும் என்று அமெரிக்கா மற்றும் பல நாடுகளும் கட்டுப்பாடு விதித்துள்ளன.

"அண்மைக் காலத்தில் சீனாவில் கொரோனா பரவல் தீவிரம் அடைந்திருக்கும் நிலையில் புதிய வைரஸ் திரிபு உருவாகும் அச்சுறுத்தல் அதிகரித்துள்ளது" என்று அமெரிக்காவின் மூத்த சுகாதார அதிகாரி ஒருவர் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

வைரஸ் திரிபு தொடர்பில் சீனா மட்டுப்படுத்தப்பட்ட தகவல்களையே வெளியிடுவதோடு தற்போது நோய்ப் பரவல் மற்றும் உயிரிழப்பு தொடர்பான தகவல்களை வெளியிடுவதையும் நிறுத்தியுள்ளது.

இந்நிலையில் சீனாவில் இருந்து புதிய வைரஸ் திரிபு வருவதைத் தடுக்க இத்தாலி, ஜப்பான், இந்தியா மற்றும் மலேசியா கட்டுப்பாடுகளை கொண்டுவந்த நிலையில் அமெரிக்காவும் தற்போதும் அது தொடர்பில் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி, அமெரிக்கர்களின் உடல்நலனைப் பாதுகாக்க அடுத்த ஆண்டு ஜனவரி 5ஆம் திகதி முதல் சீனாவிலிருந்து அமெரிக்கா செல்லும் பயணிகள் அனைவரும் கொவிட்–19 நோய்த்தொற்றுக்கான பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும் என்ற விதிமுறையை அமெரிக்க நோய்க் கட்டுப்பாட்டு, தடுப்பு நிலையம் அறிவித்துள்ளது.

சீனாவில் கொவிட் பரவல் தீவிரம் கண்டிருப்பது குறித்து ஐரோப்பிய ஆணைக்குழு நேற்று (29) பேச்சுவார்த்தை நடத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

கொவிட் அலையால் மருத்துவமனைகள் வயதானவர்கள் மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்களால் நிரம்பி இருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தலைநகர் பீஜிங்களில் இருந்து தென் கிழக்காக 140 கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் டியான்ஜினில் உள்ள இரு மருத்துவமனைகளில் வைரஸினால் பாதிக்கப்பட்டவர்களால் நிரம்பி இருப்பதாக அங்கு சென்ற ஏ.எப்.பி செய்தியாளர் ஒருவர் விபரித்துள்ளார்.

நோய்த் தொற்று ஏற்பட்டிருந்தாலும் தொடர்ந்து பணியாற்றுவதற்கு மருத்துவர்கள் அறிவுறுத்தப்பட்டிருப்பதாக ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

# முன்னாள் பாப்பரசர் உடல்நிலை மோசம்



முன்னாள் பாப்பரசர் பதினாறாம் பெனடிக்ட் உடல் நிலை மோசமடைந்திருப்பதாகவும் வத்திக்கான் வந்திருக்கும் யாத்திரிகர்கள் அவருக்காக பிரார்த்திக்கும்படியும் பாப்பரசர் பிரான்சிஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.

95 வயதாகும் பாப்பரசர் பெனடிக்ட் 600 ஆண்டுகளில் கத்தோலிக்கத் திருச்சபையில் முதல் பாப்பரசராக 2013 ஆம் ஆண்டு பதவி விலகினார். தனது வயது மூப்பு காரணமாகவே அவர் அந்த முடிவை எடுத்திருந்தார்.

இந்நிலையில் ஆண்டின் இறுதி யாத்திரிகர் சந்திப்பில் பங்கேற்ற பதவியில் உள்ள பாப்பரசர் பிரான்சிஸ், முன்னாள் பாப்பரசர் பெனடிக்டுக்காக விசேட பிரார்த்தனையில் ஈடுபட்டார். அண்மைய மணி நேரங்களில் முன்னாள் பாப்பரசரின் உடல் நிலை மோசமடைந்து வருவதாக வத்திக்கான் குறிப்பிட்டுள்ளது. "நிலைமை தொடர்ந்தும் கட்டுப்பாட்டில் உள்ளது. மருத்துவர்கள் தொடர்ந்து சோதித்து வருகின்றனர்" என்று பேச்சாளர் மட்டியோ புரூனி தெரிவித்தார்.

# இருமல் மருந்து குடித்ததில் மேலும் 18 சிறுவர்கள் பலி



இந்திய மருந்து உற்பத்தி நிறுவனமான மரியோன் பயோடெக்கினால் தயாரிக்கப்பட்ட இருமல் மருந்து ஒன்றை பயன்படுத்திய 18 சிறுவர்கள் உயிரிழந்திருப்பதாக உஸ்பகிஸ்தான் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த மருந்தில் எத்திலீன் கிளைக்கோல் எனும் நச்சுப் பொருள் இருப்பது ஆரம்ப சோதனையில் காட்டியதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

மருத்துவரின் அறிவுறுத்தல் இன்றி சிறுவர்களுக்கு Dok1 Max எனினும் மருந்து வழங்கப்பட்டிருப்பதாகவும் சிறுவர்களுக்கு தகுந்த அளவை விட கூடிய அளவு மருந்து வழங்கப்பட்டிருப்பதாகவும் அது சுட்டிகாட்டியுள்ளது.

இந்தியாவின் மற்றொரு நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட இருமல் மருந்துடன் தொடர்புபட்டு காம்பியாவில் சிறுவர்கள் உயிரிழந்த சம்பவம் வெளிச்சத்திற்கு வந்து சில வாரங்களிலேயே உஸ்பகிஸ்தான் இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளது. சுகாதார அமைச்சு இது தொடர்பில் அவதானம் செலுத்துவதாக இந்திய அரசு தரப்பை மேற்கோள்காட்டி ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

# உக்ரைன் நகரங்களில் ரஷ்யா சரமாரி ஏவுகணைத் தாக்குதல்



உக்ரைனிய போர் ஆரம்பித்தது தொடக்கம் அந்நாட்டின் மீது இடம்பெற்ற பாரிய தாக்குதலாக பல நகரங்களின் மீதும் ரஷ்யா நேற்று சரமாரி ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

தலைநகர் கீவ்வில் இடம்பெற்ற வெடிப்புகளை அடுத்து 14 வயது சிறுமி உட்பட குறைந்தது மூவர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டாக மேயர் விடாலி கிளிச்கோ தெரிவித்துள்ளார்.

கார்கிவ், ஒடெசே, லிவிவ் மற்றும் சிடோமிர் நகரங்களிலும் வெடிப்புகள் இடம்பெற்றுள்ளன. 69 ஏவுகணைகள் வீசப்பட்டதாகவும் அதில் 54 ஏவுகணைகள் இடைமறிக்கப்பட்டதாகவும் உக்ரைன் இராணுவம் தெரிவித்துள்ளது. ஐந்து மணி நேரம் வான் தாக்குதல்கள் இடம்பெற்றதாக தெற்கு மாகாணமான ஒடெசே பிராந்தியத்தின் தலைவர் குறிப்பிட்டுள்ளார். உக்ரைன் மீது பாரிய ஏவுகணைத் தாக்குதல்கள் இடம்பெற்றதாக அவர் விபரித்தார்.

கடல் மற்றும் வான் மார்க்கமாக பல்வேறு திசைகளில் இருந்து ரஷ்ய தாக்குதல்கள் வந்ததாக உக்ரைன் விமானப்படை தெரிவித்துள்ளது. இதன்போது கணிசமான ஆளில்லா விமானங்களும் பயன்படுத்தப்பட்டதாக அது தெரிவித்தது.

# மஸ்க் பொறுப்பேற்ற பின்னர் ட்விட்டரில் நீண்ட தடங்கல்




உலகெங்கும் உள்ள ட்விட்டர் பயனீட்டாளர்கள் சில மணி நேரம் சேவையைப் பயன்படுத்த முடியவில்லை என்று கூறியுள்ளனர். இலோன் மஸ்க் ட்விட்டர் தளத்தை வாங்கிய பின் அதில் ஏற்பட்டிருக்கும் மிக நீண்ட சேவைத்தடை இதுவாகும்.

நேற்று (29) படிப்படியாக சேவைத் தடை ஏற்பட்ட நிலையில் 4 மணிநேரத்துக்குப் பின் படிப்படியாக சேவை வழக்க நிலைக்குத் திரும்பியது. அதற்குள் அமெரிக்காவைச் சேர்ந்த 10,000க்கும் மேற்பட்டோர் புகார் அளித்தனர்.

'ட்விட்டர் டவுன்' எனும் குறியீடு தளத்தில் பிரபலமானது. சேவைத்தடைக்குக் காரணம் தெரியவில்லை.

சர்ச்சைக்குப் பெயர்பெற்ற பெருஞ்செல்வந்தர் மஸ்க், கடந்த ஒக்டோபர் மாதம் ட்விட்டர் தளத்தை 44 பில்லியன் அமெரிக்க டொலருக்கு வாங்கினார். அதனையடுத்து, செலவுகளைக் குறைக்கும் பணிகளில் மும்முரமாக அவர் இறங்கினார்.

பொறியாளர்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து, தொழில்நுட்பக் கோளாறுகளை நிறுவனத்தால் எவ்வளவு விரைவில் கையாள முடியும் என்ற கவலை எழுந்தது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 டிசம்பர் மாதம் 30ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

## சுற்றாடல் அமைச்சு

# மின்சாரம் மற்றும் இலத்திரனியல் கழிவுப் பொருள் முகாமை பற்றிய துறைசார் கொள்கைகளைத் தயாரித்தலுக்காக பொதுமக்கள் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளல்

சுற்றாடல் அமைச்சினால் தயாரிக்கப்பட்ட கழிவுப் பொருள் முகாமைத்துவம் பற்றிய தேசிய கொள்கைக்கு அமைவாக துறைசார் பற்றிய உப துறைசார் கொள்கைகளை தயரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், மின்சார மற்றும் இலத்திரனியல் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக பல்வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பினும் இலங்கைக்குள் முறையற்ற விதத்தில் மின் மற்றும் இலத்திரனியல் கழிவுப் பொருள் முகாமைத்துவத்தை மேற்கொள்ளும் பல்வேறு முறைகளால் சுற்றாடல், அரசியல், சமூக மற்றும் பொருளாதார சிக்கல்கள் பல ஏற்படுவதற்கு காரணமாகியுள்ளது. அதற்காக நிலையான தீர்வை பெற்றுக்கொள்ளும் முகமாக சுற்றாடல் அமைச்சினால் மின் மற்றும் இலத்திரனியல் கழிவுப் பொருள் முகாமைத்துவம் பற்றிய துறைசார் கொள்கையொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இங்கு மின் மற்றும் இலத்திரனியல் கழிவுப் பொருள் முகாமைத்துவம் சம்பந்தமாக பங்கு வகிக்கும் நிறுவனங்கள், நிபுணர்கள் மற்றும் பொதுமக்களின் கருத்துக்களை கவனத்தில் கொண்டு மின் மற்றும் இலத்திரனியல் கழிவுப் பொருள் முகாமைத்துவம் பற்றிய துறைசார் கொள்கையை தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

மின் மற்றும் இலத்திரனியல் கழிவுப் பொருள் முகாமைத்துவம் பற்றி இவ்வாறான துறைசார் கொள்கையொன்றை தயாரிப்பதன் மூலம் பல்வேறு துறைகளை அறிந்து கொள்வதற்கு அது பற்றிய பொறுப்புக்களை சம்பந்தப்பட்ட பங்கு வகிக்கும் நிறுவனங்களுக்கு பரம்பலடைய செய்வதற்கு அதன் மூலம் முறையான மின் மற்றும் இலத்திரனியல் கழிவுப் பொருள் முகாமைத்துவத்தை நாட்டிற்குள் ஸ்தாபிப்பதற்கும் இயலுமாகும்.

மின் மற்றும் இலத்திரனியல் கழிவுப் பொருள் முகாமைத்துவம் சம்பந்தமாக துறைசார் கொள்கையை தயாரிக்கும் செயற்பாட்டை மிகவும் திறந்த மற்றும் வெளிப்படையாக நிறைவேற்றுவதும் இந்த அமைச்சின் எதிர்பார்ப்பாகும். ஆகையினால் மின் மற்றும் இலத்திரனியல் கழிவுப் பொருள் முகாமைத்துவம் சம்பந்தமாக துறைசார் கொள்கையில் அடங்கியுள்ள விடயங்கள் சம்பந்தமாக தமது கருத்துக்களை வழங்குவதற்கு விரும்பும் நபர்கள்/ நிறுவனங்கள்/ சங்கங்கள் இருப்பின் அவ்விடயங்களை சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம் ஆகிய தாம் விரும்பும் மொழியில் சுற்றாடல் அமைச்சின் சூழல் மாசடைவதைக் கட்டுப்படுத்தும் மற்றும் இரசாயன பொருள் முகாமைத்துவப் பிரிவிற்கு 2023.01.31ம் திகதிக்கு முன்பு எழுத்து மூலம் வழங்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

இது பற்றிய மேலதிக விபரங்களை 011-2034165 தொலைபேசி இலக்கத்தை அழைப்பதற் மூலம் அல்லது **eeconga@yahoo.com** என்ற இணையதள முகவரிக்கு ஈமெயில் செய்தியை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

**மருத்துவர் அனில் ஜாசிங்ஹ**
**செயலாளர்,**
**சுற்றாடல் அமைச்சு**
**“சொபாதம் பியச”**
**416/C/1, ரொபட் குணவர்தன மாவத்த,**
**பத்தரமுல்ல.**

# மாத்தளை பிரதேச சபை — பலாபத்வல

மாத்தளை பிரதேச சபைக்குச் சொந்தமான பலாபத்வல பொதுச் சந்தையின் கடை அறை இல. 08ஐ நீண்ட கால குத்தகைக்கு விடுவதற்காக பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் என்னால் 2023.01.03ம் திகதி முதல் 2023.01.17 வரை அலுவலக நேரங்களில் ஏற்கப்படும். அதனோடு சம்பந்தப்பட்ட தகவல்களை கீழே தரப்பட்டுள்ளதுடன், கேள்வி அறிவித்தல் பத்திரம் மற்றும் கேள்வி மாதிரிப் பத்திரங்களை குறித்த தொகையை செலுத்தி அலுவலக நேரங்களில் மாத்தளை பிரதேச சபைக்கு வருகை தந்து பெற்றுக்கொள்ளலாம்.

| வர்த்தக நிலையில் மற்றும் கடை அறை இலக்கம் | விற்பனை செய்ய வேண்டிய பொருட்கள் | குறைந்த பட்ச கேள்வி | மீளளிக்கப்படும் பிணை வைப்புத் தொகை | மீளளிக்கப்படாத கேள்வி மாதிரிப் பத்திர கட்டணம் | கேள்வி மாதிரிப் பத்திரங்களை விநியோகித்தல் | கேள்விகள் திறத்தல் |
|---|---|---|---|---|---|---|
| பலாபத்வல பொதுச் சந்தை கடை அறை இல. - 08 | இறைச்சி. மீன், மதுபானம் மற்றும் போதைப் பொருள் தவிர்த்து சட்ட ரீதியிலான வர்த்தகப் பொருட்கள் | ரூபா 180,000.00 | ரூபா 9000.00 | ரூபா 1500.00 | 2023.01.03ம் திகதி மு.ப. 10.00 முதல் 2023.01.17 மு.ப. 11.00 வரை | 2023.01.18 மு.ப. 10.00 இற்கு மாத்தளை பிரதேச சபை அலுவலகத்தில் |

கேள்வித்தினத்தை பிற்போடுதல், இரத்தச் செய்தல், கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரித்தல் மாத்தளை பிரதேச சபை கேள்விச் சபையின் இறுதித் தீர்மானமாக இருக்கும்.

**தலைவர்,**
**யூ.எச்.எம். கபில பண்டார ஹேன்தெனிய,**
**மாத்தளை பிரதேச சபை.**
**பலாபத்வல.**

**2022.12.23ம் திகதி**
**மாத்தளை பிரதேச சபை அலுவலகத்தில்**

# பெறுகை அறிவித்தல்

## அபேக்ஷா வைத்தியசாலை - மஹரகம, இலங்கை

## 2023ஆம் ஆண்டிற்காக ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்வதற்கான அழைப்பு

மஹரகம, அபேக்ஷா வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக்குழுவின் தலைவரால் கீழ்க்காணும் அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு இலங்கை நிர்மாண பயிற்சி நிறுவனத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2023.01.16ம் திகதி மு.ப. 10.00 வரை கேள்விகள் ஏற்கப்படும். கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் பணிப்பாளர் பணிமனையில் கேள்விகள் திறக்கப்படுவதுடன் அதற்காக கேள்விதாரரின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு சமுகமளிக்கலாம்.

மேற்படி முகவரியிலுள்ள நிறுவனப் பிரிவில் 2023.01.13ம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மற்றும் பி.ப. 2.30 இற்கு இடைப்பட்ட காலத்திற்குள் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு கேள்விதாரர்கள் தமது வேண்டுதல் கடிதத்தை தகைமைகளை உறுதி செய்யும் சான்றுகள் மற்றும் கேள்விக் கட்டணத்தைச் செலுத்துதல் சார்பாக அபேக்ஷா வைத்தியசாலையின் கணக்காளரால் விநியோகிக்கப்படும் பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.

| தொடர் இல. | வேலை | தகைமை | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் |
|---|---|---|---|
| 01. | 2023ஆம் ஆண்டிற்காக மஹரகம அபேக்ஷா வைத்தியசாலை சார்பாக நிர்மாண மற்றும் பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் | C09, C08 அல்லது C07 EM05 அல்லது அதற்கு மேல் SP05 அல்லது அதற்கு மேல் | ரூ. 2500.00 |

மேலதிக விபரங்களுக்கு பணிப்பாளர், அபேக்ஷா வைத்தியசாலை, மஹரகம என்ற முகவரியில் விசாரிக்கலாம். தொலைபேசி இல: 011-2840233 எந்தக் கட்டணமும் இன்றியே கேள்வி ஆவணங்களைப் பரீட்சிக்கலாம். கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக்குழுவிற்கு உரியது.

**தலைவர்,**
**பிரதேச கேள்விச்சபை,**
**அபேக்ஷா வைத்தியசாலை,**
**மஹரகம.**

## பொதுமக்களுக்கான அறிவித்தல்
## எல்.ஓ.எல்.சி. பினான்ஸ் பிஎல்சி (PB 244 PQ) உடன் எல்.ஓ.எல்.சி. டெவலொப்மன்ட் பினான்ஸ் பீஎல்சி (PB263 PQ) இன் கூட்டிணைவு

2007இன் 7ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 239ஆம் பிரிவு மூலம் கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமாக எல்.ஓ.எப்.சி. உடன் எல்.ஓ.டி.எப். இனை கூட்டிணைப்பதற்கு எல்.ஓ.எல்.சி. டெவலொப்மன்ட் பினான்ஸ் பிஎல்சி மற்றும் எல்.ஓ.எல்.சி. பினான்ஸ் பிஎல்சி பணிப்பாளர் சபைகள் தீர்மானித்துள்ளன. இதன்படி எஞ்சியுள்ள நிறுவனம் எல்.ஓ.எப்.சி. ஆக செயற்படும்.

இலங்கை மத்திய வங்கியினால் அறிவிக்கப்பட்ட நிதித்துறை ஒருங்கிணைப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கும் இந்தக் கூட்டிணைவு, 2007இன் 7 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் விதிகளில் கூட்டிணைக்கப்பட்ட இரு நிறுவனங்களின் பங்குதாரர்கள் மூலமும் கூட்டிணைவுக்கு ஒப்புதல் அளிக்கும் சிறப்புத் தீர்மானங்களுக்கு உட்பட்டிருப்பதோடு, 5.4பி மற்றும் 5.4சி பட்டியல் விதிகளின் தளர்த்தீடு ஒன்றாக (5.4பி விதியானது எல்.ஓ.டி.எப். இன் பங்குதாரர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் புதிய பங்குகள் எல்.ஓ.எப்.சி. பங்குகளின் எண்ணிக்கையில் 20% ஐ விட அதிகம் இருப்பதால் எல்.ஓ.டி.எப். இன் பங்குதாரர்களுக்கு அத்தகைய வழங்கலுக்குப் பின்னர் வழங்கலில் உள்ள மொத்த பங்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையைக் கொண்டுள்ளது) (5.4சி விதியானது கமர்ஷியல் லீசிங் அண்ட் பினான்ஸ் பிஎல்சியுடன் கூட்டிணைத்து புதிய பங்குகளை வெளியிட்டபோது, இந்த புதிய பங்குகளை வெளியிடுவதற்கு முன்மொழியப்பட்ட திகதியிலிருந்து இருபத்து நான்கு (24) மாதங்களுக்குள், அதாவது ஜனவரி 2023 இல், நிறுவனம் ஒரு தனி அமைப்பாக செயற்பட்டதை கொண்டிருக்கும்) இலங்கை பாதுகாப்புகள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவில் இருந்து எல்.ஓ.எப்.சி. இக்கு ஒப்புதல் கிடைக்கப்பெற்றிருப்பதோடு, பட்டியல் விதிகளின்படி எல்.ஓ.எப்.சி. உடன் எல்.ஓ.டிஎப். ஐ கூட்டிணைப்பதால் எழும் எல்.ஓ.எப்.சி. பங்குகளை வெளியிடுவதற்கும் பட்டியலிடுவதற்கும் கொழும்பு பங்குச் சந்தை (CSE) கொள்கை ரீதியான ஒப்புதலை வழங்கியுள்ளதோடு, கூட்டிணைப்பு நிறுவனங்கள் மூலம் (பொருந்தும் வகையில்) பாதுகாப்பான கடன் வழங்குநர்களின் ஒப்புதலைப் பெறும்.

கூட்டிணைவு முன்மொழிவு இரு நிறுவனங்களதும் பங்குதாரர்களின் ஒப்புதலுக்காக சிறப்பு பொதுக் கூட்டத்தில் அவர்கள் முன்னிலையில் வைக்கப்படும். அவ்வாறான கூட்டிணைவு ஒப்புதல் 2023 ஜனவரி 31 ஆம் திகதி அமுலுக்கு வரும்.

கூட்டிணைவு முன்மொழிவுகளின்படி, எல்.ஓ.டி.எப். இன் 251,415,963 பங்குகளை வைத்திருப்போருக்கு எல்.ஓ.எப்.சி. இன் பங்குகள் ஒதுக்கப்படும் இரு பங்குதாரர் கூட்டங்களுக்காக நிர்ணயிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் ஐந்து (5) சந்தை நாட்களின் வர்த்தக முடிவில் எல்.ஓ.டி.எப். மற்றும் எல்.ஓ.எப்.சி இன் பங்கு ஒன்றின் சந்தை விலை அடிப்படையில் ஒதுக்கீட்டு விகிதம் அமையும். எல்.ஓ.டி.எப். இல் எல்.ஓ.எப்.சி. வைத்திருக்கும் பங்குகள் எல்.ஓ.எப்.சி. இன் பங்குகளாக மாற்றப்படமாட்டாது.

அதன்படி எல்.ஓ.டி.எப். இல் எல்.ஓ.எப்.சி. வைத்திருக்கும் பங்குகள் 105,498,948 ஆக இருப்பதோடு அது எல்.ஓ.டி.எப். இன் வழங்கப்பட்ட பங்குகளின் 29.56% ஆக அமைவதோடு அவை பணம் செலுத்தாது அல்லது ஏனையவை கருத்தில் கொல்லப்படாது இரத்துச் செய்யப்படும்.

மேற்கூறப்பட்டவாறு பரிமாற்ற மதிப்பு அடிப்படையில், எல்.ஓ.டி.எப். பங்குதாரர்களுக்கு எல்.ஓ.எப்.சி. இல் வழங்கப்பட வேண்டிய பங்குகள் நெருக்கமான பங்குக்கு சுமாரானதாக இருக்கும்.

அதன்படி, எல்.ஓ.எப்.சி மூலம் வழங்கப்படும் பங்குகளின் எண்ணிக்கை இங்குள்ள 4ஆவது பந்தியில் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோலை பொறுத்து அமையும்.

SC Securities (Pvt) Ltd மூலம் வெளியிடப்பட்ட 2022 டிசம்பர் 9ஆம் திகதி மதிப்பீட்டு அறிக்கைக்கு அமைய, கூட்டிணைவு நோக்கத்திற்கான எல்.ஓ.எல்.சி. டெவலொப்மன்ட் பினான்ஸ் பிஎல்சி பங்கு ஒன்றின் பெறுமதி வரம்பு ரூபா 150.00 - 379.20 எனவும் எல்.ஓ.எப்.சி. இன் பெறுமதி முறையே ரூபா 3.84 - 16.04 எனவும் தரப்பட்டுள்ளது.

மேலும் இரு பங்குதாரர்கள் கூட்டங்களுக்காக நிர்ணயிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் ஐந்து (5) சந்தை நாட்களின் வர்த்தக முடிவில், எல்.ஓ.டி.எப். மற்றும் எல்.ஓ.எப்.சி. இன் பங்கு ஒன்றில் சந்தை விலை அடிப்படையில் கூட்டிணைவு/ பங்கு பரிமாற்ற விகிதத்தின் நோக்கத்திற்கான பெறுமதி அமைந்திருக்கும். பரிமாற்ற மதிப்பு அடிப்படையில், எல்.ஓ.டி.எப். பங்குதாரர்களுக்கு எல்.ஓ.எப்.சி. இல் வழங்கப்பட வேண்டிய பங்குகள் நெருக்கமான பங்குக்கு சுமாரானதாக இருக்கும் என்பதோடு அது எல்.ஓ.எப்.சியின் தற்போதுள்ள பங்குதாரர்களுக்கு மற்றும் எல்.ஓ.எப்.சிக்கு நியாயமானதா என்பது கருத்தில்கொள்ளப்படும்.

கூட்டிணைவு முன்மொழிவுகளின் பிரதிகள் எல்.ஓ.டி.எப். மற்றும் எல்.ஓ.எப்.சி. இன் எந்த ஒரு பங்குதாரர் அல்லது கடன்கொடுநர் அல்லது எல்.ஓ.டி.எப். மற்றும்/ அல்லது எல்.ஓ.எப்.சி. கடப்பாடுடைய எந்த ஒருவருக்கும் சாதாரண வர்த்தக நேரங்களில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள எல்.ஓ.டி.எப்./ எல்.ஓ.எப்.சி. இன் பதிவு அலுவலகங்களில் கிடைக்கப்பெறும்:

**எல்.ஓ.எல்.சி. டெவலொப்மன்ட் பினான்ஸ் பிஎல்சி**
**100/1, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய**

**எல்.ஓ.எல்.சி. பினான்ஸ் பிஎல்சி**
**100/1, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய**

கோரப்படும் பட்சத்தில் கூட்டிணைவு முன்மொழிவுகளின் பிரதிகள் எல்.ஓ.டி.எப். மற்றும் எல்.ஓ.எப்.சி. இன் எந்த ஒரு பங்குதாரர் அல்லது கடன்கொடுநர் அல்லது எல்.ஓ.டி.எப். மற்றும்/ அல்லது எல்.ஓ.எப்.சி. கடப்பாடுடைய எந்த ஒருவருக்கும் கட்டணம் இன்றி வழங்கப்படும்.

**சபையின் ஆணைப்படி**
**எல்.ஓ.எல்.சி. பினான்ஸ் பிஎல்சி**
**(கையொப்பம்)**
**LOLC Corporate Services (Pvt) Ltd,**
**செயலாளர்கள்**

**சபையின் ஆணைப்படி**
**எல்.ஓ.எல்.சி. டெவலொப்மன்ட் பினான்ஸ் பிஎல்சி**
**(கையொப்பம்)**
**LOLC Corporate Services (Pvt) Ltd,**
**செயலாளர்கள்**

**2022 டிசெம்பர் 13**

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்

| S.No. | Item Code | Non-refundable tender fee (Rs) | Supply, Installation, Maintenance & Commissioning of :- | Bid Security |
|---|---|---|---|---|
| 01. | JTH/SA/P01/GAR.BAG/2023 | 1000.00 | Supply of Garbage Bags & Shoes | 100,000.00 |
| 02. | JTH/SA/P02/HDWE & WKSP/2023 | 1000.00 | Supply of Building & Workshop Items | |
| 03. | JTH/SA/P03/STATIONARY /2023 | 1000.00 | Supply of Stationary Items | |
| 04. | JTH/SA/P04/TYRE/2023 | 1000.00 | Supply of Tyres | 100,000.00 |
| 05. | JTH/SA/P05/CLO.MAT/2023 | 1000.00 | Supply of Cloth materials | |
| 06. | JTH/SA/P06/WASHING.MATER/2023 | 1000.00 | Supply of Washing Materials | |
| 07. | JTH/SA/P07/ELECTRICAL/2023 | 1000.00 | Supply of Electrical Items | |
| 08. | JTH/SA/P08/WATER SUPPLY | 1000.00 | Supply of Water Supply Items | 100,000.00 |
| 09. | JTH/SA/P09/TONER/2023 | 1000.00 | Supply of Toners | |
| 10. | JTH/SA/P10/PAINT/2023 | 1000.00 | Supply of Paints | |
| 11. | JTH/SA/P11/MOTOR/2023 | 1000.00 | Supply of Motor Items | |
| 12. | JTH/SA/P12/REXENE/2023 | 1000.00 | Supply of Rexene & Mackintosh | 20,000.00 |
| 13. | JTH/SA/P13/BATTERY/2023 | 1000.00 | Supply of Battery | 25,000.00 |
| 14. | JTH/SA/P14/PROSTHKETIC/2023 | 1000.00 | Supply of Prosthetic & Orthotic Material | 10,000.00 |

1. யாழ்ப்பாணம், போதனா வைத்தியசாலை, பிராந்திய பெறுகைக் குழுத் தலைவரினால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகுதிக்கான வழங்கலுக்கான முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பெற்றுக் கொள்ளப்படும்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் முறைமை மூலம் நடாத்தப்படும்.
3. இலங்கை சந்தையில் முன்வைக்கப்படும் உற்பத்திகளின் ஏகநியமிக்கப்பட்ட பிரதிநிதி/தரஅங்கீகாரம் பெற்ற முகவர்கள் மாத்திரமே இந்த விலைமனுவில் பங்கேற்பதற்கான தகுதியை பெற்றுக்கொள்வர்.
4. மூலப்பிரதியில் செயற்றிட்டத்திற்காக விலைமனுக்கோரல் ஆவணங்களில் முழுமையான தொகுதியொன்றில் தயாரிக்கப்பட்ட முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2023 சனவரி 13 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் என முகவரியிடப்பட்டு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.
5. பின்வருவனவற்றைச் சமர்ப்பித்து, 2022.12.30 ஆம் திகதியிலிருந்து 2023.01.12 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மேலேயுள்ள முகவரியிலுள்ள கணக்காளரிடமிருந்து விலைமனு ஆவணங்கள் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.
   அ) யாழ்ப்பாணம், போதனா வைத்தியசாலை, பிராந்திய பெறுகைக் குழுத் தலைவருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்று.
   ஆ) வியாபார பதிவுச் சான்றிதழ் (உறுதிப்படுத்தப்பட்ட பிரதி)
   இ) யாழ்ப்பாணம், போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரிடம் ரொக்கப் பணத்தில் மேலே கூறப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை செலுத்துதல்.
6. விலைமனு செயற்றிட்டங்கள் அட்டவணை/ ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளவாறான விலைமனுப்பிணையானது இலங்கைப் பணத்தில் அனைத்து விலைமனுக்களுடனும் ரொக்கப் பணத்தில் அல்லது வங்கி உத்தரவாதத்துடனும் இணைக்கப்படல் வேண்டுமென்பதுடன் செல்லுபடியாகும் காலப்பகுதியானது விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியிலிருந்து 119 நாட்களுக்கு (2023.05.11 ஆம் திகதி வரையும்) இருத்தல் வேண்டும்.
7. விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், உடனடியாகவே பணிப்பாளர்/பணிப்பாளரின் அலுவலகத்தில் திறக்கப்படுமென்பதுடன் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.
8. எமது வைத்தியசாலையின் பெறுகைப் பிரிவில் விலைமனு ஆவணங்கள் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.
9. யாழ்ப்பாணம், போதனா வைத்தியசாலை, பணிப்பாளர்/ கணக்காளரிடமிருந்து 021-222 3149/ 021 221 2482 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக மேலதிக தகவலைப் பெற்றுக் கொள்ளலாம்.

**பணிப்பாளர்/தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**
**30.12.2022**

## பதிவு செய்தலுக்கான வழிகாட்டியொன்றை தயாரிப்பதற்காக இறக்குமதி செய்யப்பட்ட/ பாகங்கள் இணைக்கப்பட்ட/ உற்பத்தி செய்யப்பட்ட/ மாற்றம் செய்யப்பட்ட மின்சார மோட்டார் சைக்கிள்களை செயல் விளக்கத்திற்காக அழைத்தல்

இலங்கையில் ஈ-மோட்டார் சைக்கிள்களை பதிவு செய்வதற்கான வழிகாட்டியொன்றை தயாரிப்பதற்காக இறக்குமதி செய்யப்பட்ட, உள்ளூரில் பாகங்கள் இணைக்கப்பட்ட, உள்ளூரில் தயாரிக்கப்பட்ட அல்லது IC engine-to-EV converted ஈ-மோட்டார் சைக்கிள்களை காட்சிப்படுத்தவதற்காக சர்வதேச மற்றும் இலங்கை கம்பனிகள் மற்றும் ஆர்வமுள்ள நபர்களிடமிருந்து மோட்டார் போக்குவரத்து திணைக்களமானது இத்தால் ஆர்வத்தை அழைக்கின்றது.

2023 சனவரி 19 ஆம் திகதியன்று மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் வேரஹேர மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் அவர்களின் ஈ-மோட்டார் சைக்கிள்களின் செயல் விளக்கத்திற்கான கூட்டமொன்றிற்காக ஆர்வமுள்ள சாரார் அழைக்கப்படுவார்கள்.

குறிப்பு: இச்செயற்பாடானது இந்நாளன்று செயல் விளக்கப்படுபவை ஈ-மோட்டார் சைக்கிள்களை பதிவு செய்வதற்காக அல்ல ஆனால் எதிர்காலத்தில் ஈ-மோட்டார் சைக்கிள்களை பதிவு செய்வதற்காக வழிகாட்டியொன்றை தயாரிப்பதற்காகவே என்பதை பங்கேற்பவர்கள் அறிந்து கொள்ளவும்.

ஒதுக்கப்பட்ட நேரமொன்றிற்காக விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்:

